ரிஜிஸ்டர் நெ. 2041

தனிப்பிரதி விலை ஒரு அணா.

குடி அரசு

ஒரு சுந்தா முன்பணம் — ரூ. 3—0
6 மாத சந்தா „ — „ 1—12
வெளி நாட்டிற்கு „ — „ 5—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

வியாபாரிகள் விளம்பரம் அங். 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஆ மார்கழி மீ 12 உ (27—12—1931) | மலர் 35

ஏழைகளுக்கோர் பெரிய அதிருஷ்டம்.

வீனஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

தலைமை ஆபீஸ்: சாந்தினி சௌக், டெல்லி.

சகல மனிதர்க்கும் ஏற்றது.

இணையற்ற நன்மைகள்! (1920-ல் ஸ்தாபிக்கப்பட்டது.) இனியும் தாமதிக்காதீர்கள்!!

90,000 மெம்பர்களுக்கு மேல்கொண்ட எங்களது பெரிய சங்கத்தில் சேருங்கள்.

(1912-ம் வருஷத்து இந்தியன் கூப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளின் சட்டதிட்டத்தின்படியும், 1913-ம் வருஷத்து இந்திய கம்பெனிகளின் சட்டத்தின்படியும் ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.)

இந்தியா முழுவதிலும், பர்மா, பலுச்சிஸ்தானம், இலங்கை, பிரிட்டிஷ் கிழாப்பிரிக்கா முதலிய பல நாடுகளிலும் கிளை ஆபீஸ்கள் உண்டு.
இந்திய மூலதனத்தைக்கொண்டு இந்தியரின் நிர்வாகத்தின் கீழேயே நடந்து வரும் முதலும் இந்தியக்கம்பெனி இதுவே.

மூலதனம்.

அங்கீகரிக்கப்பட்ட மூலதனம்	ரூ.	10,00,000	கவர்ன்மெண்டு செக்யூரிட்டி டிபாசிட்டு ரூ. 2,00,000
கொடுக்கப்பட்ட மூலதனம்	ரூ.	5,00,000	இன்றையவரை வார்சுகளுக்கு செலுத்திய தொகை ரூ. 5,00,000 க்கு மேல்
வசூலான மூலதனம்	ரூ	2,07,750	
வாக்குறுதி செய்யப்பட்ட மூலதனம்	ரூ.	1,51,783	

கோடீச்வரரான வர்த்தகர் முதல் ஏழை விறகு வெட்டி வரையுள்ள, ஒவ்வொரு வகுப்பு ஜனங்களுக்கும் ஏற்றவாறு. சலவிதமான இன்ஷ்யூரன்ஸ் வேலைகளும் நாங்கள் செய்து வருகிறோம்.

எமது அருமையான பல திட்டங்களில் முக்கியமானவைகள் வருமாறு:—

(பிரசித்தி பெற்ற கணக்கு ஆலோசனை நிபுணரான ஸ்ரீ ஜி. எல். மராத்தே, எம். ஏ. (பம்பாய்) ஏ. ஐ. ஏ. (லண்டன்) அவர்கள் சிறந்ததென உறுதி கூறியுள்ள திட்டம்)

வைத்தியப் பரீக்ஷையுடன்.

1. ஆயுட்கால அஷ்யூரன்ஸ்.
2. எண்டோமெண்ட் அஷ்யூரன்ஸ்.
3. இரட்டிப்பு எண்டோமெண்ட் அஷ்யூரன்ஸ்.
4. குழந்தைகளின் படிப்புத்திட்டம்.
5. A–Z. பாதுகாப்புத் திட்டம்.
6. குடும்ப சவுகர்யத்திட்டம்.
7. படிப்பு எண்டோமெண்ட் திட்டம்.
8. டெம்பரரி இன்ஷ்யூரன்ஸ்.

வைத்தியப் பரீக்ஷையில்லாமல்.

1. குழந்தைகளின் கலியாணத்திட்டம்.
2. பல பிரிவுகளுடன் கூடிய பொதுஜன இன்ஷ்யூரன்ஸ் திட்டம்.
3. சாலிரீயமான முறைகளின்மீது அமைக்கப்பட்டுள்ள ஓய்வு சன்மைத் திட்டம்.

விசேஷ அம்சங்கள்:—உரிமைத்தொகையை உடனே கொடுத்துவிடுதல். ஏஜண்டுகளுக்கு தாராளமான கமிஷன்.

லாபகரமான ஏஜன்சிகளுக்கும் விவரங்களுக்கும் கீழ்க்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதவும்:—

வீனஸ் அஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட், 22, இரண்டாவது கூலன் பீச், மதராஸ்.

தாதுபுஷ்டிக்கு

பழநி சி. எம். சாமி,

மன்மத குளிகை

யை உபயோகியுங்கள்.

நீங்கள் என்றும் எதிர்பாராத ஆனந்தமும், மன உறுதியும், தேகவலிமையும், இல்லற சுகமும் அடைவீர்கள்.

புட்டி 1க்கு ரூ 2. தபால் சார்ஜ் வேறு.

அந்நிய தேசவாசிகள் மருந்திற்கு ஆர்டர் செய்யும்போது முன்பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

வைத்திய ஆசிரியர் C. மலையப்பசாமி, நித்தியானந்த மெடிக்கல் [illegible]

பழநி சி. எம். சாமி

குருதாம்பர பஸ்பம்

சகல வியாதிக்கும் கைகண்டது.

தீராத திமிர், குஷ்டம், சூலை, மதமதப்பு, தடிப்பு பத்து, கிரந்தி, ஆறாத குழிப்புண், குறை நோய், ரணங்கள் முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். 50 வேளை பஸ்பம் சில்லறை விலை ரூ. 25. 25 வேளை 12-8-0. ஏழைகளுக்கு பாதிவிலை

ஏராளமான நற்சாட்சிகளைக் கேட்டால்கில் பார்க்க

டாக்டர் சிங்காரம் அவர்களின்

மிகவும் குணமுள்ள மருந்துகள்

உலகப் பிரசித்திபெற்ற

மஹா சந்தனாதித் தைலம்

அநேக பச்சிலை மூலிகைகள் சேர்ந்தது. கண் பார்வை குறைவா யிருந்த அநேகருக்கு இந்தத் தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார் வை ஏற்பட்டிருக்கிறது.

கை, கால், கண் எரிச்சல், கண் சிவப்பு, கண்ணில் நீர்வடிதல், கண் பூ, பீளை சாருதல், மேக நீர், வெள்ளைமூத்து, நித்திரையின் மை, ஒருத்தலை நோய், பீனிசம், காதிரைச்சல் காதுமந்தம், மண்டைக் குத்து முதலிய சிரசிலுண்டாகும் பல நோய்களைக் குணம் செய்யும். வெட்டைச் சூடு, திரேக காங்கை முதலிய எல்லாவித உஷ்ணத்தையும் போக்கி சரீரத்திற்கு குளிர்ச்சியையும் நல்ல சுகத்தையும் கொடுக்கும்.

24 அவுன்ஸ் டின் ரூ. 4 12 அவுன்ஸ் டின் ரூ. 2—2—0

சாலாமிசிரி லேகியம்

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

கை கால் தசதி, சோம்பல், இடுப்பு வலி, ரம்புத் தளர்ச்சி, சொப் பன ஸ்கலிதம், சம்போக காலத்தில் எற்படும் துரித ஸ்கலிதமும், முத லிய கொடிய வியாதிகளை நீக்கி தளர்ந்த ரம்புகளை கெட்டிப்படுத்தி வீரிய விர்த்தியை உண்டாக்கும். மதுக்கு உற்சாகத்தையும் சுற சுறுப்பையும் உண்டாக்கும். சம்போக இன்பத்தை முற்றிலும் அநுப விக்கச் செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2—8—0

மகா வில்வாதி லேகியம்.

அஜீரணம், வயிற்றுப்பிசம், பசிமந்தம், நெஞ்சில் கரகரப்பு, குல எரிவு, வாயில் ஜலம் ஊரல், நெஞ்சொரிவு, வாந்தி, தலைசுற்றல் வயிற்று வலி, அஜீரணத்தால் எற்படும் வயிற்றுப்போக்குகள், நாவறோசிகம், மயக்கம், கை, கால் குடைச்சல், முதலிய பித்தம், பித்த வாய்வு சம்பந்த மான பலவித வியாதிகளை நிவர்த்தி செய்து நல்ல பசிதீபனத்தையும், ஜீர்ண சக்தியையும் உண்டாக்கும். பத்தியமில்லை.

ஒரு சேர் டப்பி விலை ரூ. 2.

அமிர்த சஞ்சீவி லேகியம்.

மனிதருக்குண்டாகும் நோய்களுக்குப் பல காரணங்கள் இருந்தா லும் மலச்சிக்கல் ஓர் முக்கிய காரணமாயிருக்கிறது. ஆதலால் மலச் சிக்கலை உடனே நிவர்த்திக்கவேண்டும். இந்த லேகியம் எவ்வித மலச் சிக்கலையும் நீக்கி, தாராளமாய் காலை, மாலை மலம் வெளியாகும்படி செய்வதுடன், வாய்வு, தொந்தரவுகளையும் போக்கும்

பலவித பழச் சத்துக்களும், சிறந்த மூலிகைகளும் சேர்த்து தயார் செய்யப்பட்டது. சாப்பிட மதுரமுள்ளது, பாலர் விருத்தாப் பியர்யாவரும் சாப்பிடலாம்.

ஒரு சேர் டப்பி விலை ரூ 2

எல்லா மருந்துகளுக்கும் பாங்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும் விலாசம் தெரிவித்தால் முழு விவரமடங்கிய கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

தெப்பக்குளம்போஸ்டு, திருச்சிராப்பள்ளி

புதிய சந்தாதாரர்களுக்கு இலவம்!

"குடி அரசு"க்குச் சந்தாவாக ஒரு வருஷத்திய கட்டணம் 3 ரூபாயை மணியார்டர் செய்பவர்களுக்கு பத்திரிகையுடன் 0—8—0 அணாவிலையுள்ள குடி அரசு வெளியீட்டுப்புத்தகங்கள் இலவமாகக்கொடுக்கப்படும்.

வெளியிடுவோர் "குடி அரசு" ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள்.

திருவாளர்கள், 1. ஈ. வெ. ராமசாமி, 2. W. P. A. சௌந்திர பாண்டியர், 3. ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்ய சாமியார், 6. ஈ. வெ. ரா. நாகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம். 8. சிவகாமி, சிதம்பரனார், 9. குரு சாமி சுஞ்சிதம், 10. நீலாவதிராம சுப்பிரமணியம் 11. சுலோசனை, பொன்னம்பலனார், 12. சிவாநந்தம். ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ் படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ. ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய் வாங்குகின்றவர்களுக்கு 100க்கு 6—4—0வீதம் கமிஷன்கழித்துக் கொடுக்கப்படும்.

தனி காப்பி வேண்டியவர்கள் விலைக்கு மேல் 4 அணா ஸ்டாம்பு அனுப்ப வேண்டும். விலாசம்: —

பாலு & Co., No. 3
ஒப்பணக்காரத்தெரு, ஈரோடு.

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.
விலாசம்:—
மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்
விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதெருலாந்தால் வீதி
புதுச்சேரி.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்
விலாசம்:—
மானேஜர் "தமிழன்"
ஹண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

வெள்ளைக்குத் தீட்டு உண்டு என்பது சன்மார்க்கமா?

(கைவல்யம்)

மதுரை மீனாட்சியம்மன் சந்நிதி கிணிக்கூண்டு மண்டபம் வரையிலும் ஒரு வண்ணாத் தலைவர் வந்தார். அதனால் மதுரை மீனாட்சித் தீட்டுப்பட்டுப்போனதென்றும், அந்தத்தீட்டைப் போக்குவதற்காக அந்த வண்ணாத்தலைவரிடம் கோவில் குருக்கள் பத்தரைரூபாய் வாங்கினதாகப் பத்திரிகைகள் சொல்லுகின்றன.

வண்ணாரிடம் தீட்டிருப்பதும் அது சுவாமியைப் பற்றிக்கொள்ளுவதும் பத்தரை ரூபாயில் அத்தீட்டுப்போய் விடுவதும் சமய சன்மார்க்கந்தானா? வண்ணான் சுவாமியின் சன்னிதானத்தை நெருங்கி சுவாமியைத் தீட்டுக்குள்ளாக்கினது வண்ணானுக்குச் சன்மார்க்கமல்ல வென்கிறோம். பரிசுத்தத்தாலும், அன்பாலும், கருணையாலும் எல்லோருக்கும் பொதுவில் விளங்கும் தன்மையாலும் உண்டாயிருக்கும் சுவாமியின் பரிசுத்தத் தன்மை ஒரு வண்ணான் சுவாமியின் பக்கம் நெருங்குவதால் பங்கப்பட்டு விடுமேயானால் அந்த சுவாமியின் சன்மார்க்கம் குறைவுபட்டிருப்பதாகவோ, குறைக்கப்பட்டிருப்பதாகவோ நினைக்க எதுவில்லையா?

சிவபெருமானால் சொல்லப்பட்ட ஆகம சுருதிகளில் வண்ணான் என்ன சந்நிதிக்கோ, என் பெண்ஜாதியின் சந்நிதிக்கோ வந்தால் நானும் என் பெண்ஜாதியும் தீட்டுப்பட்டு விடுவோம் என்று சொல்லப்பட்டுள்ளதா? ஆச்சாரிகள் சொன்ன சைவசித்தாந்த சாஸ்திரத்தில் வண்ணான் சிவபெருமானின் சந்நிதிவந்தால் சிவபெருமான் தீட்டுப்பட்டுவிடுவார் என்று சொல்லப்பட்டுள்ளதா?

சிவபெருமான் பூணூல்போட்டுக் கொண்டு எழுந்தருளினார் என்பதை, என்று தமிழர்கள் கேட்டு ஆனந்தப்பட்டார்களோ அன்று முதல் உண்மைக்குப்பரிந்துபேசும் குணத்திற்குப் பல தடைகளேற்பட்டு விட்டன. ஆனாலும் வண்ணான் தீட்டைப்பற்றி சிறிது விசாரித்தறியும் புத்தியால் ஆலோசித்துப்பார்ப்போம்.

நமக்குச்சன்மார்க்கம் போதிப்பவர்கள் பண்டிதர்கள். பண்டிதர்கள் சன்மார்க்கத்தைச் சமய சாஸ்திரத்திலிருந்து படித்தார்கள். சமய சாஸ்திரங்களோ பெரியவர்களால் அருளப்பட்டது. பெரியவர்களோ கடவுள் அருளாலும், அவதாரத்தாலும் அவர் சொன்ன வேதத்தாலும் தெரிந்தார்கள். அருளும், அவதாரமும் கடவுளிடத்திலிருந்துண்டாகிறது. வேதமோ கடவுள் வாயால்சொலப்பட்டது. அந்தவேதமே இந்து சமயப்பிரிவிற்கெல்லாம் காரணமாக விளங்குகிறதென்று சொல்லுகிறார்கள்.

தெய்வ சந்நிதியிலும், குருசந்நிதானத்திலும், ராஜசபையிலும் தீட்டில்லையென்றும் அஞ்ஞானம் நீக்கப்பட்டு பாவம் பரிகரிக்கப்பட்டிப்போமென்று சாஸ்திர அறிஞர்களும், சொல்லுகிறார்கள்.

சமயமென்பது பேச்சல்ல. கொள்கைகளும் ஊகங்களுமல்ல சமயமென்பது ஜாதிகளைப்பற்றிக்கொண்டும், ஜனசமூகங்களைப்பற்றிக்கொண்டும், உயர்ந்த ஜாதிகளைப்பிடித்துக் கொண்டும், தாழ்ந்த ஜாதிகளைத் தள்ளிக்கொண்டும், வண்ணான் தீட்டில் சேர்த்துக்கொண்டும், பத்தரை ரூபாயில் பிழைத்துக்கொண்டும், இளிக்கூண்டு மண்டபத்தைக்காத்துக் கொண்டும் வரிக்காது. ஆதிமாவிற்கும் கடவுளுக்குமுள்ள சம்மந்தமே சமயம். இந்த சமயம் ஒரு வண்ணாத்தலைவர் தீட்டால் பாழடைவதும் பத்தரைரூபாயில் பரிசுத்தமாவதுமிருக்கச்சமயத்தில் இடமில்லை.

எல்லாருக்கும் பொதுவில் உடனடியிலிருந்த சிவத்திற்குத் தீட்டுண்டா? மேலோருக்கும், கீழோருக்கும், எல்லோருக்கும் பொதுவில் ஒரே அளவு தாத்மாவான பரம்பொருள் சாட்சியாய் விளங்கி நற்பதவியும் உயர் நிலையும் அடைவதற்கு எல்லோருக்கும் அதிகாரமுண்டென்பதைத் தெரியப்படுத்தி அருள், தூய்மை, சர்வவியாபகத்வம், சர்வஞ்ஞத்துவம் முதலிய குணங்கள் ஒவ்வொரு அணுமாவிலும் மறைந்திருக்கின்றன வென்பதையும் தெரியப்படுத்தின பெரியவர்கட்குத் தான் தீட்டுண்டா? இவர்களால் சொல்லப்பட்ட சாஸ்திரக்கோப்படித்த ஒரே பாவான் சர்வ தேசங்களிலும் இருக்கிறார் என்று நமக்குச்சொல்லும் பண்டிதர்களிடம் தீட்டுண்டோ? அதுவே இதுவாய், இதுவேயதுவாய், அதுவும் இதுவும் எதுவுமாய், எதுவும் எல்லாமாய், எல்லாம் சிவமாய், சிவமே சக்தியாய், சக்தியே மீனாட்சியாய் விளங்கும் மீனாட்சிக்குத்தீட்டுண்டா? சமத்துவம் ஜீவகாருண்யம் முதலியவைகள் மனிதனிடம் மாத்திரம் அமையாமல் எறும்பீறாக உள்ள எல்லா உயிரையும் தம்முயிரைப்போலப் பாவிக்கும் சர்வ ஜீவகாருண்யத்தை உலகுக்கு வலியுறுத்தி அதை காட்டுவதற்காக சண்டாளன், பறையன், நாடார், கரிக்குருவி முதலியவைகளுக்குத் திறக்கப்பட சோமசுந்தரக்கடவுளின் சன்னதிக்குத் தீட்டுண்டா? இத்தனையையும்மீறி வண்ணான் தீட்டு மீனாட்சியைப்பிடித்துக்கொண்டால் தலையிலாப்படிப்பு, பக்தி, ஒழுக்கம் மூன்றுமில்லா கோவில் குருக்களால பத்தரை ரூபாயில் பரிசுத்தப்படுத்தத்தான் முடியுமா?

எல்லோருடைய அழுக்கையும் போகடி சுத்தப்படுத்துகிறவனை வண்ணான். சுவாமி, அவர் பெண்ஜாதி, பிள்ளை, காவற்காரர், வாகனம், 63 பக்தர்கள் இவர்களுடைய துணிகளை சுத்தப்படுத்துகிறவனும் வண்ணான். சுவாமிக்குத் தீவட்டி பிடிப்பவனும் வண்ணான். சுவாமிக்கும் அரசனுக்கும் உள்ள விருதுகளில் பகல் தீவட்டியும் ஒன்றாகும். அதற்கும் வண்ணானே அதிகாரி. அரசன், ஜக்காரி, பூசாரி, குருக்கள், குரு, புரோகிதன், பக்தன், அருள் பெற்றவன், பண்டிதன், சித்தாந்தி, வேதாந்தி, தார்க்கீகன், மடாதிபதி, யதீசன், கலாடாக்காரன் இன்னும் மற்றுமுள்ளவர்களுடைய தீட்டெல்லாம் சுத்தப்படுத்துவதும் வண்ணான். இரவு, வாடி, கருமாந்தரம், பிரசவம் பேறு, புண்ணியாவசனம் முதலியவைகளில் நம்மூடைய தீட்டைப்போக்கினவனும் வண்ணான். மனைக்காரன் சேதத்தால் பரலோகம் போவதற்கு மடைமாத்து விரிப்பதனும் வண்ணான். நம்மூடைய கலியாணப்பந்தல் அலங்காரத்திற்கும், மணவரையில் முதன் முதல் மணமகனுக்கு மணமகன் சாதம் பரிமாறிப்பழக்கும் இலைக்குக் கிழ் தூசனத்திற்கும், மணமக்களுடையமஞ்சள் விளையாட்டிற்கும், சபை விரிப்பிற்கும், பந்து ஜன உடைமாற்றுவதற்கும், பந்திபோஜன ஆசனத்திற்கும், பஞ்சாயத்து மண்டபத்திற்கும் இன்னும் பல முக்கியங்களுக்கும் வண்ணான் மாத்திரன் கந்து பரிசுத்தப்படுத்துகின்றன. நமது வீதிகளும் இன்னும் குளங்களிலும் வண்ணார்கள் உட்செல்ல அனுமதிக்கிறோம். அப்படியிருக்க வண்ணானுக்குத்தீட்டுண்டா? இருந்தால் அத்தத்தீட்டித்தான் என்ன? தீட்டெண்பதுதானென்ன?

தமிழருக்குத்தான் தீட்டில்லாவிட்டாலும் பார்ப்பனருக்கும் பார்ப்பனத்தெய்வத்திற்கும் தீட்டில்லையோ என்று கேட்டால் மதுரை மீனாட்சி தமிழ் மதுரைத்தமிழ்ப்பாண்டிய ராஜாவின் மகளை வைதீக முறைப்படி விவாகஞ்செய்து கொண்டதால் பார்ப்பனமயமாய் சுவாமைகளோடு திர்மானப்பட்டுப் போனதல்லவா? மீனாட்சியின் நாயகன் சோமசுந்தரக் கடவுள் கைலயங்கிரியிலிருந்து மீனாட்சியைக்கலியாணஞ் செய்ய மதுரைக்கு வந்தார் என்று சொல்லுகிறோம். அவரைச்சொக்க பண்டாரமென்று சொன்னால்களேயல்லாமல் பார்ப்பனரென்று சொன்னவர்களில்லை. பண்டாரத்திற்குத்தான் பெண்ணைக்கொடுத்துவிட்டதற்காக விசனப்பட்டுக்கொண்டிருக்கும் பார்வதியாக மீனாட்சியின் தாயார் உருவத்தையும், ராஜாவின் மகள் தன் மகனை விவாகம் செய்துகொண்ட சந்தோஷக்குறியோடு சோமசுந்தரக்கடவுளின் தாயாரின் உருவத்தையும் சுவாமியின் சந்நிதிக்கு முன் காவிரூபத்தின் பின்னால் சித்தரித்து வைத்திருக்கிறதையும் கண்டிருக்கிறோம். சோமசுந்தரக்கடவுளின் பின்னோயான குமரனைப் பண்டாரமென்றும், பழனியாண்டியென்றும் இன்னும் சொல்லுகிறார்கள். பார்ப்பனர்களுடைய வேதத்தின் முதன் தெய்வமான இந்திரன் மகளைத்தமிழ்நாட்டு ஆதிதெய்வமான முருகன் விவாகம் செய்துகொண்டதால் பார்ப்பனர்கள் பல ஏடு எழுதி பண்ணி பண்டாரங்களை எமாற்றி அவர்கள் பாத்திரைகளைப் பறித்துக்கொண்டாலும் முருகன் திருவேரகத்திற்குப் பழனி பண்டாரங்களில்லாமல் இன்னும் விரும்பிக்கொண்டிருக்கின்றார். ஆனதால் சொக்காண்டியின் மகன் பழனியாண்டி பண்டார ஜாதி என்பதில் சந்தேகமில்லை. ஜாதி, குலம், பிறப்பு, இறப்பு, பந்தம், முத்தி எதுவின்றி எப்பொருளுக்கும் தானே தானும் விளங்கும் சோமசுந்தரக் கடவுளின் சாதி நமக்குத்தெரியாது.

ஆனால் சிவபெருமான் மார்பில் பூணூல் போட்டுகொண்டு விளக்குகிறார் என்ற திருஞான சம்பந்தர் சொல்லியிருக்கிறார். அதைப்பொய் என்றாலும் அவர் சொன்னதிலுள்ள கருத்துக்களையும் எதற்காகச் சொன்னார் எழுபதையும் அறிந்து தத்துவார்த்தமிருப்பதாகச் சொல்லும் கபட நாடகியத்தையும் சொன்னால் லசவப் பண்டிதர்களுக்கே கோபம் வரும். தெய்வம் பூணூல் போட்டுக் கொண்டு பார்ப்பன தரும சாஸ்திரன் கோக்கையில் எடுத்துக்கொண்டு தாழ உலகமெல்லாம் தோன்றியிருக்கிறது என்ற கேட்டாலும் கோபிப்பார்கள். பார்ப்பாருக்கு இந்திரனும் சந்திரனும் தெய்வமேயல்லாமல் சிவலிங்கமல்லவே. அவர்கள் ஆராதனை வேள்வியான உயிர்ப்பலியேயல்லாமல் பஞ்சாமிர்தமும், பால் பாயாசமுமல்ல. சிவலிங்கத்தைச் சிவனேதேவாவென்று அவர்கள் வேதத்திலுள்ள சுலோகங்களைச் சொன்னாலும் திருஞான சம்பந்தருடைய வாக்குக்கு என்ன செய்கிறதென்று கேட்டால் அதற்கு பதில் நம்மால் சொல்ல முடியாது. எது எப்படியிருந்தாலும் வண்ணான் தீட்டிற்கு வழியென்ன?

உள்ளதை இல்லையென்பதும், இல்லாததை உண்டென்பதும் சன்மார்க்கமல்ல. இரண்டிலும் குற்றமொன்றே. அதுபோல உள்ள கடவுளை இல்லை என்பது சன்மார்க்கமல்ல. இல்லாத தீட்டை உண்டென்பது சன்மார்க்கமாகுமா? உள்ளதை இல்லையென்பவன் போலும் நரகத்திற்கு இல்லாததை உண்டென்று சொல்லு

தொடர்ச்சி 8ஆம் பக்கம் பார்க்க

பகுத்தறிவும், மதமும்.

(Dr. R. P. பாஞ்சிபே எழுதிய "இந்தியாவின் தேவை" என்னும் புத்தகத்தில் காணப்படும்சாரங்கள்.)

"அறிவுக்குப் பிரதான ஸ்தானத்தைக்கொடுப்பது, அனுபவத்திலும், அப்பியாசத்திலும் நிரூபித்துக் காட்டக்கூடிய தத்துவஞானத்தையும், நீதிசாஸ்திரத்தையும் நிலைநாட்டுவது, கொடுங்கோன்மையான கொள்கைகளையும், பிரமாணங்களையும் எதிர்த்துப் போராடுவது, சுயேச்சையுடன் இருக்கவேண்டுமென்கிற மனோபாவனையைக் கொண்டிருப்பது" ஆகிய இந்த குறிகளே பகுத்தறிவு என்று கூறப்பட்டுவருகின்றது.

இத்தகைய மொழிகளால்தான் பகுத்தறிவாளர்களின் இயக்கமானது, தன்னுடைய கொள்கையை உலகினருக்கு எடுத்துரைத்து, அதை மேன்மேலும் விர்த்திசெய்ய முயற்சி செய்கின்றது. உலகிலுள்ள எல்லா மக்களும் இக்கொள்கையையே பின்பற்றுவார்களாகில், அப்பொழுதே மனிதசமூகமானது அதிசீக்கிரமாகவே முன்னேற்றமடையக்கூடும்; மக்கள் இப்பொழுதனுபவித்துவரும் இன்பங்கள் இன்னும் பதின்மடங்கதிகமாக அப்பொழுது விர்த்தியாகக்கூடும்; மக்கள் இப்பொழுதனுபவித்துவரும் துன்பங்களும், கஷ்டங்களும், பீடைகளும் அப்பொழுது அடியோடு மறைந்து விடவும்கூடும் என்று பகுத்தறிவு இயக்கம் நம்புகின்றது. ஒரு மனிதன் இத்தகைய மனப்பான்மையை யடைவானேயாகில், பொதுவாகவே அவன் அப்பொழுது தன்னைச் சூழ்ந்து கொண்டு நிற்பவைகளுக்கேற்ற வாறு தன்னைத் தகுதியுள்ளவனாகச் செய்து கொள்ளமுடியும். மேலும், அவன் தான் மனிதஜன்மம் எடுத்ததின் பிரயோசனத்தையறிந்து, உலகிலுள்ள மக்கள் யாவரும் தன்னுடைய உயரிய கொளகையினால் சுகமடைந்து, இன்புற்று வாழ்வதற்கு, தனது சக்திக்கியன்ற வரையிலும் உதவியும் செய்வான்.

பகுத்தறிவென்பது எவ்விஷயத்தையும் ஆராய்ந்து, அறிந்து கொள்வதேயாகும். அதாவது மனிதனுக்கேற்பட்டுள்ள அறிவை அவன் வீணுக்காமல், அவ்வறிவை அவனால் எவ்வளவுக் கெவ்வளவு உபயோகப்படுத்தமுடியுமோ அவ்வளவுக் கவ்வளவு உபயோகப்படுத்துவதேயாகும். எத்தகைய சிக்கலான பிரச்சினையாகயிருந்தபோதிலும்கூட, பகுத்தறிவாளி என்பவன் தனது சக்திக்கியன்றவரையிலும் தனது அறிவை உபயோகித்து அப்பிரச்சினையை வெற்றிகரமாக முடிவு செய்யவே முயற்சிசெய்வான். ஒரு சமயம் அவனால் எதாவதொரு பிரச்சினையை முடிவுசெய்ய முடியாது போனபோதிலும்கூட, தன்னுடைய அறிவின் ஆராய்ச்சிக்கு உட்படாத, அதாவது நிற்காத எத்தகைய முடிவையும் அவன் ஏற்றுக்கொள்ளவோ அல்லது அங்கீகரிக்கவோ தயாராகவும் இருக்கமாட்டான். ஆனால் அவ்வித சந்தர்ப்பத்தில் அவன் தன்னுடைய அறியாமையை ஒத்துக்கொண்டு திருப்தியுடன் இருக்கக்கூடியவனாகவுமிருக்கின்றான். அவனுக்கு மேலும் ஓர் விதமான நம்பிக்கையுமுண்டு. அதாவது, காளாவட்டத்தில் மனிதனுடைய அறிவும், ஆராய்ச்சியும் விர்த்தியாகிக்கொண்டேவந்து, எத்தகைய சிக்கலானபிரச்சினையையும் இன்று இல்லாவிட்டாலும் நாளையாகிலும் வெற்றிகரமான ஓர் முடிவுக்குக்கொண்டுவந்து விடலாம என்னும் திடமான நம்பிக்கையேயாகும். ஆகையால் தான் அவன் "இதுவரையிலும் சென்றலாம். இதற்குமேல் நீ செல்லக்கூடாது" என்று எத்தகைய விஷயத்திலும் கட்டுப்பாடு செய்வதற்கு மறுத்து விடுகின்றான். மேலும் சந்தேகத்தையோ அல்லது பேதத்தையோ விளைவிக்கக்கூடிய எத்தகைய கட்டளைக்கும் அல்லது நீதிக்கும் தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்ளுவதற்குச்சம்மதிப்பதில்லை. அவ்விஷயத்தில் அவன் தன்னுடைய மூழுபலத்தோடும் மறுத்துக்கொண்டே வருகின்றான். பகுத்தறிவுக்குப் பொருந்தாத எத்தகைய கட்டளையாவது, அல்லது நீதியாவது அறிவுசம்பந்தமானதுறையிலாவது அல்லது நீதிசம்பந்தமான துறையிலாவது, அல்லது சமூகசம்பந்தமான துறையிலாவது காணப்பட்டபோதிலும் கூட அவனுக்கு அதைப்பற்றிய அக்கரையோ அல்லது கவலையோ சிறிதும் கிடையாது.

எப்படியிருந்தபோதிலும், தேசத்தில் குழப்பத்தைவிளைவிக்கும் ஒரு தேசீய குழப்பக்காரனும், பகுத்தறிவாளியுமாகிய ஒருவனும் ஒன்றுதான் என தவறுதலாகக் கருதிக்கொள்ளக்கூடாது. தன்னுடைய அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் உகப்படக்கூடியவுண்மைகள் நடைமுறையிலும், அனுஷ்டானத்திலும் ஒன்றுக்கொன்று விரோதமின்றி பொருத்தமாயிருக்கின்றதா வென்பதையறிந்து, அவைகளே தற்காலிக முடிவுகளெனக்கருதியே ஒரு பகுத்தறிவாளி அவைகளை ஒப்புக்கொண்டு அங்கீகாரம் செய்கின்றான். மேலும் காளாவட்டத்தில் வேறுவிதமான முடிவுகள் அவைகளுக்கேற்பட்டால், அதாவது தான் முதலில் செய்த முடிவு தப்பிதமெனவும், புதியதாக இப்பொழுது நிரூபிக்கப்பட்டிருக்கும் இந்த உண்மைதான் அவைகளுக்குப் பொருந்துமெண்பதையும் அறிவானால் உடனே அவன் தன்னுடைய முதல்முடிவை அவனுடைய முழுமன தோடும் மாற்றிக்கொள்ளவும் தயாராக இருக்கின்றான். இதுவுமல்லாமல், அவன் தன்னுயிரன்றவரையிலும் சந்தர்ப்பங்கள் வாய்க்கும் பொழுதெல்லாம் பல்வேறு புதிய உண்மைகளைக் கண்டுபிடிக்கும்படியானபொறுப்பையும், வெளிப்படையாகக் காண்பித்துக்கொள்ளாமலேயேற்றும்கொள்ளுகிறான். எப்படியிருந்தபோதிலும், அவன்தான் ஆராய்ச்சி செய்துகொண்டு செல்லும் துறையில், மனோரம்மியமற்ற சிலபுதிய உண்மைகள் இடையே தோன்றுமானால், அத்தகையவிஷயங்களால் அவன் பாதிக்கப்படுவதுமில்லை. அதனால் அவன் தன்னுடைய ஆராய்ச்சியை விட்டுவிடுவதுமில்லை. மேலும் ஜனசமூகத்தில் அவனும் ஓர் அங்கத்தினனாக இருப்பதால், அவன் தன்னுடைய அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் மூரண்படாத பழக்க வழக்கங்களையும், செய்கைகளையும் ஏற்று அங்கீகரித்துக் கொள்ளுகின்றான். எதாகிலும்ஓர் குறித்த சம்பவம், சில நிபந்தனைகளாலும், ஆராய்ச்சியாலும் தான் ஆதிகாலத்தில் பெரியோர்களால் ஆலோசித்து ஏற்படுத்தப்பட்டதெனஉரைத்தால், அவன் அச்சம்பவத்திற்குரிய சாரணங்களை மிக்க உருக்கத்துடனும், இரக்கத்துடனுமே ஆராய்ச்சி செய்து பார்க்கவும் தயாராகயிருக்கின்றான். தன்னுடைய எதிர்கால வாழ்க்கையை நிர்ணயிப்பதற்காக, அவன் ஆராய்ச்சி செய்துகொண்டுவரும் அடிப்படையான முடிவுகள் யாவும் மனித சமூகத்தின் எல்லையற்ற சரித்திரத்தின் ஓர் பகுதிதான் என்பதையும் அவன் உணர்ந்து கொள்ளுகின்றான். ஆனால், அவன் அவ்வாறு கருதிய போதிலும் கூட, மனித சமூகத்தின் சரித்திர சம்பந்தமான புஸ்தகமானது எப்பொழுதுமே, எக்காலத்திலுமே முடிவு பெற்றுவிடாதெனவும், ஆனால் அதற்குமாறாக அது அடிக்கடி பெரிதாகிக்கொண்டேதான் வருகின்றதெனவும் அவன் உறுதியாகவே நம்புகின்றான். மனித சமூகத்தின் சரித்திர புஸ்தகத்திலுள்ள சில பாகங்களில் மூற்றுபேற்றது என்னும் வார்த்தை எழுதப்பட்டிருப்பதாக எவன் ஒருவன் சொல்லிப் போராடுகின்றானே, அவனைத்தான் பகுத்தறிவுக்காரன் எதிர்த்து, சண்டை செய்கின்றான். ஆகையினாலே, இத்தகைய சந்தர்ப்பங்களில் பகுத்தறிவாளியென்பவன் தன்னுடைய அறிவின் உதவியைக்கொண்டு, மூடப்பட்டிருப்பதாகவோ அல்லது மூற்று பெற்று விட்டதாகவோ கூறப்பட்டிருக்கும் பாகங்களை ஆராய்ச்சி செய்து, வியாக்யானம் செய்யவேண்டியதேதான் அவனுடைய இன்றியமையாதகடமையாகும்.

(தொடரும்)

தேவாங்கச் சிறுவர்சபை கோயமுத்தூர்.

இச்சபையின் ஆதாவில் 16-12-31 தேதி புதன்கிழமை இரவு 8-30 மணிக்கு சங்கக்கட்டிடத்தில் திரு. டி. முனுசாமி அவர்கள் தலைமையில் பானகல் அரசரின் மூன்றுவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது. அதுசமயம் அரசருடைய வாழ்க்கையைப்பற்றியும், முக்கியமாக இந்து தேவஸ்தான மசோதாவைப்பற்றியும் பிரசங்கம் நிகழ்த்தப்பட்டதென செயலாளரியதரிசி எழுதியிருந்தார்.

தேவை! தேவை!!
தேவை!!!
எதற்கு? என்?
விபரத்திற்கு ஒரு அணா ஸ்டாம்புடன் எழுதவும்.
எஸ். நாராயணசாமி,
பெரும்புகலூர்,
திருவாரூர் போஸ்டு, தஞ்சாவூர்.

God and the Universe.

கடவுளும், பிரபஞ்சமும்.

கடவுள் நல்லவரா? அல்லது கெட்டவரா?

(தோழர். ம. சிங்காரவேலு B. A., B. L.)

VI.

கடவுள் ஒருவர் இருப்பாராயின் அவர் நல்லவரா? அல்லது கெட்டவரா? என்றகேள்விக்கு, மதவாதிகள் என்ன சமாதானம் சொல்லுகின்றார்கள் என்று பார்ப்போம். எந்த மதஸ்தரும், நாம் மனிதனைத் தீர்க்கமாக நல்லவன்என்றுகிலும், கெட்டவனென்றுகிலும் மதிப்பதுபோல், கடவுளை மதிப்பதில்லை. ஆனல் எல்லா மதஸ்தரும் பொதுவாக, கடவுளை நல்லவரென்றே சொல்லுகின்றார்கள். எப்படி அதாவது எந்த நடவடிக்கையால் அவரை நல்லவரென்று சொல்லுகின்றீர்கள் என்றால் அதற்குச்சரியான விடைஇல்லை. 'கிருபாநிதி' 'காருண்ய மூர்த்தி' 'தயாபரன்' 'ஆபத்பாந்தவன்' என்று தங்கள் கடவுளாகிய விஷ்ணுவை வைணவர் துதிக்கின்றார்கள். சைவரும், 'சிவம்' என்றால் மங்களம் என்று தங்கள் கடவுளை வாழ்த்துகின்றார்கள். (God is good) 'கடவுள் நல்லவர்' என்று கிறிஸ்துவர் சொல்லுகின்றார்கள். வேதாந்திகள் தங்கள் கடவுளுக்கு குணமுண்டென்று சொல்வதாகத்தெரியவில்லை. 'குணாதீதன்' 'குணரகிதன்' 'மனவாக்குக்காயத்திற்கு எட்டாதவன்' என்று வழங்குகின்றார்கள். இந்துதர்சனங்களில் (Philosophies) அதாவது வேதாந்தம், சாங்கியம், மீமாம்சம் முதலிய தத்துவநூல்களில் கடவுள் குணத்தைக்குறித்து ஒன்றும் சொல்வதாக இல்லை. சாங்கிய தத்துவத்தில் ஈஸ்வரனே இடையாதாகையால் அவர் குணத்தைப்பற்றி பேசவேண்டிய அவசியமில்லை. ஆயினும் அதிலிருந்து முளைத்த யோகதர்சனத்தில ஈஸ்வரனைக் குறித்து பேசப்பட்டிருக்கிறது. யோகத்தில் கூறியுள்ள குணங்கள் மனிதகுணத்தை விசாலப்படுத்தி அதை ஈஸ்வரன்மேலே ற்றியிருப்பதாகவே தெரிகிறது. வேதத்தில் (இருக்கு வேதம்) கடவுள் மனிதனைப்போலவே சில விஷயங்களில நடப்பதாகச் சொல்லுகிறபடியால் மனிதனுக்குள்ள குணங்களை வேதத்தில் கூறியுள்ள கடவுள் வகித்திருப்பதாகக்காண்கின்றோம்.

மேல்நாட்டு தத்துவ நூலாசிரியர்கள் பலர் இருக்கின்றார்கள். இவர்களில் மதசம்பந்தமாக 'கடவுளைப்பற்றி' எழுதுகின்றவர்களும் உண்டு. இவர்கள், மனித குணங்களைத் தாங்கள் கூறும் கடவுளுக்குத் கொடுப்பதில்லை. ஸ்பைனோஸா (Spinoza) என்றஓர் பெரியார் தனது கடவுளுக்கு நன்மை தீமையாவது, சந்தோஷம் கோபமாவது, அன்பு வெறுப்பாவது இருப்பதாகச் சொல்லவில்லை. மனிதன் விஷயத்தில் யாதாமொரு சம்பந்தமும் வைத்துக்கொள்ளாததுதான் தனது கடவுள் என்கின்றார். கான்ட் (Kant) என்ற பிரபல ஜர்மன் தத்துவ ஞானியும் ஸ்பென்சர் என்ற (Spencer) ஆங்கிலத்தத்துவஞானியும் கடவுளை 'தெரியப்படாதவர்' (Unknowable) என்றுகூறுகின்றனர் தெரியப்படாத வஸ்துவின் குணத்தை அறியமுடியாதாயினும், அது அறியப்படாததென்று எப்படி அந்த ஞானிகளுக்குத் தெரியவந்ததோ என்பதுதான் விளங்கவில்லை. ஜர்மனியில் இன்னெருபிரபல பெரியார் ஒருவர் இருந்தார். அவர்பெயர் கெல் (Hegel) என்பது. அவருடைய கடவுள் 'எண்ணம்' (Idea) ஒன்றுதான் உடையவராம்! இவருக்குப் பின்வந்த, ஷோபனயெர் (Shopenheur) என்ற பிரபல ஞானி தன்னுடைய கடவுளுக்கு வில் (will) அதாவது இச்சை மாத்திரம் உண்டு என எழுதுகின்றார். பிராட்லே (Bradley) என்ற ஆங்கில தத்துவஞானி தனது கடவுளுக்கு அப்ஸலூட் (Absolute) என்று பெயர் கொடுத்து அதன் லட்சணங்கள் இன்னதென விளங்கச்சொல்லாமல் விட்டு விட்டார். இன்னும அந்த தத்துவ விவேகிகள்மேல்நாட்டில் கடவுளைப்பற்றி எழுதுகின்றார்கள். இவர்கள் மனிதனுக்குள்ள குணகுணங்களையே தங்கள் கடவுளுக்குக் காட்ட வெட்கப்படுகின்றார்கள். இவ்விதமாக மேல்நாட்டுக் கீழ்நாட்டு மதஸ்தரும் தத்துவவிவேகிகளும் தத்தம் கடவுளை நல்லவரென்றுகிலும், கெட்டவரென்றுகிலும் தீர்க்கமாகச்சொல்லுவதைக் காணோம். 'குணாதீதன்' என்று சொன்னால் யாருக்கு என்ன தெரிந்துவிடும்? குணமின்றி எந்த பொருளும் விளங்காமல் போவதில்லை. கடவுளுக்கு குணமில்லாவிட்டால் எப்படி அவர் இருப்பதாகவாவது தெரிந்து கொள்ளமுடியும்? ஆனல் மேற்காத்திலுள்ளவர்கள் கடவுளைக்குணாதீதனென்று சொன்னல் அறியமாட்டார்களென்று சிலகற்பனை குணங்களை அந்தச் சொல்லின் மேல் ஏற்றியதாகத் தெரிகிறது. மனிதனுடைய குணங்களே நமக்குத்தெரியுமாதலால் அந்த லட்சணங்களையே தங்கள் கடவுளுக்குக்கொடுத்ததாகவும் தெரிகிறது. சாதாரண ஆகம புராணங்களில் கடவுளை, சாமான்ய ஜனங்கள் நடிக்கும் மாதிரியாகவே நடந்து காட்டுகிறார் என்று சொல்லப்படுகிறது. அவர் சில அபூர்வ காரியங்களைச் செய்ததாகச்சொல்லுகின்றார்கள் (Miraeles) இவர் செய்தமாதிரியாகவே சில பக்தர்களும் செய்ததாகவும் கட்டி விட்டிருக்கின்றார்கள். பழைய ஏற்பாட்டில் (Old Testamend) கடவுள் செய்த அபூர்வ திருவிளையாடல்கள் அவர் சீஷர்கள் செய்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது. மனிதகுமாரனுகிய ஏசு செய்த அபூர்வ காரியங்கள் அவருக்குப்பின் அனேக ஆண்டுகளாக அனேக பாதிரிமார்கள் (ChurchFathers) செய்ததாகவும் சொல்லுகின்றார்கள். ரோமன் கத்தோலிபர் புஸ்தகங்கள் முழுமையையும், கிறிஸ்துவர்கள் செய்த அபூர்வ வேலைகளைப்பற்றியே விசேடமாக எழுதப்பட்டுள்ளன. தங்கள் கடவுளுக்குச் சந்தோஷத்தையும், கோபத்தையும் சாட்டுகின்றார்கள். பொய், களவு, கட்காமம் முதலிய தீச்செயல்களைக் கடவுள் செய்ததாகவும் எழுதியுள்ளார்கள். எந்த மதக்கதைகளை எடுத்துக்கொண்டாலும், அந்தந்த மதக்கடவுள் நன்மையான குணங்களையும், தீமையான குணங்களையும் படைத்திருப்பதாகவே மதநூல்கள் கூறுகின்றன. கிறிஸ்துவக்கடவுள் தகாத காரியங்களைச் செய்ததாக விவில்யநூலில் கண்டிருக்கிறது. இந்துக்களுடைய புராணங்களில் திருடி கோயில் கட்டினவனுக்குக்கூட மோட்சத்தை அருளியதாகச் சொல்லுகின்றார்கள். கள்ளனுகிய திருமங்கை ஆழ்வாருக்கு கடவுள் மோட்சம் அருளியதாக வாய்கூசாமல் சொல்லுகின்றார்கள். இந்த ஆபாசங்களுக்கெல்லாம் என்ன சமாதானம்சொல்வதென்று தெரியவில்லை. சிலமத பாசாங்குக்காரர் (Apotogists) இவைகளைப்பொய்யென்று சொல்லாமல் இதற்கு வேறு அர்த்தமென்று சாக்குப்போக்குச்சொல்லி வயிற்றை வளர்க்கின்றார்கள். இந்த மோசம் எத்தனை காலம் இவர்களைக் காப்பாற்றும்?

கடவுளைப்பற்றி, மதஸ்தர்கள், பக்தர்கள் கூறும் கதைகளை விசாரிக்கப்புகுந்தால், அவைகள் எல்லாம் கட்டுக்கதைகளென எற்படுகின்றன. இந்தக்கட்டுக்கதைகளை எப்படி உண்டாக்கப் பழக்கம் வந்ததென்றால், மனிதனுக்கு இயற்கையாகவே, பேச ஆரம்பித்த பிறகு தன் குணங்களைப்போல் கடவுளுக்கும் குணங்கள் உண்டு என, ஆலோசிக்கும் சக்தி உள்ளவனனன். இந்தப் பழக்கத்தால், கடவுளரும் தன்னைப்போலவே குணங்களைப் பெற்றிருக்கவேண்டுமென்று சிந்தித்தான். இந்த சிந்தனைகளைச் சொல் மயமாக்கி, புத்தகங்கள் எளிதில் வரையப்பெற்று அதனல் கடவுளர் அபூர்வ காரியங்களென பெயர் பெற்றன. இந்தக் கட்டுக்கதைகள் தான், புராணங்களிலும், வேதங்களிலும், விவில்ய நூல்களிலும், கொரான், சென்ட அவிஸ்தா (Send Avesta) என்னும் பார்சி ஆகமங்களிலும், மற்றுமுள்ள மதநூல்களிலும் வளைந்துள்ளனர். இந்நூல்களை விசாரிக்குமளவில் மனிதனுக்குள்ள குணங்கள் யாவும், கடவுளுக்கு அதிகமாக இருத்தலை உணரலாம். தான், தனக்குக் கீழ்ப்பட்டவர்களைப் பயப்படுத்தச் செய்யும் செய்கைகளைப் போல், தனது கடவுளுக்கும் அவ்விதச் செய்கைகளைக்காட்டினன். சிவபெருமான், சூர்யனை பல்லைப்பிடுங்கியும், சந்திரனை, மூக்கை அறுத்தும் தண்டித்ததாகச் சொல்லும் புராணக் கதைகள், இவன் கட்டிய கதைகளே. பைபிள் நூலில், கடவுள் கோபித்துக் கொண்டதாகவும், வெள்ளங்களை உண்டாக்கியதாகவும், புயல்களைக்கொண்டு மனிதரை அடக்கியதாகவும், நோய்களை உண்டா

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

மார்கழிப்பீடை.

''ஸ்க்குரூ லூஸ்''

மார்கழி மாதம், பீடை மாதம்; அமங்கலமான மாதம்; ஆகையால் இந்த மாதத்தில், விடியற்காலத்தில் பஜனைகள் செய்ய வேண்டும்; கடவுள் என்பவர்மேல் தோத்திரங்கள் செய்ய வேண்டும்; காலையில் பொங்கல்கள் செய்து சாமிகளுக்குப் படைக்கவேண்டும்; நாமும் வயிறு நிரம்பச்சாப்பிட வேண்டும்; வீதென் தோறும் கோலம் போடவேண்டும்; வாயிற்படியில் புஷ்பங்கள் பரப்பவேண்டும்; இரவில் தாதன் ஊர் முழுதும் சுற்றிப்பாட்டுப்பாட வேண்டும்; சேமக்கலம் கொட்டவேண்டும்; தப்புத்தட்டவேண்டும்; இப்படியெல்லாம் செய்தால் தான் பீடை நீங்கும் என்று செய்து வருகின்றனர்.

கோயில்களிலும் இந்தமார்கழிமாதத்தில் அதிகாலையிலேயே மேளதாளங்கள் முழங்குகின்றன; பூசைகள் நடைபெறுகின்றன; பொங்கல்கள் நைவேத்தியம் பண்ணப்படுகின்றன, கோயில் அர்ச்சகர்களும், வேலைக்காரர்களும் பொங்கல்களைப் பங்குபோட்டுக்கொள்ளுகின்றனர். மூக்கால் மூன்றுபருக்கை விழும்படி வயிற்றுக்குள் கொட்டுகின்றனர். வண்ணான் சாலைப்போல் உயிற்றைப்பெருக்கவைக்கின்றனர். பின்பு அஜீர்ணத்தால் அவதி அடைகின்றனர்.

வைதீகர்கள் வீடுகளில் காலையில் எழுந்தவுடன், சைவர்களாயிருந்தால், திருவாசகத்தில் உள்ள திருவெம்பாவை என்னும் பாடல்கள் ஓதப்படுகின்றன. வைணவர்களாயிருந்தால் நாலாயிரப்பிரபந்தத்தில் உள்ள ஆண்டாள் பாடிய திருவெம்பாவைப் பாடல்களை ஓதுகின்றனர்.

இவைமட்டும் அல்ல மற்றொரு அதிசயமும் உண்டு. அது மிக வேடிக்கையான விஷயம். வைணவர்கள் பஜனைமடம் வைத்திருந்தால் அவர்கள் விடியற்காலம் 4 மணிக்கே எழுந்திருப்பார்கள். வாலிபர்கள் மாத்திரம் அல்ல, சிறு குழந்தைகளும், வயதானவர்களும், வாலிபர்களும், விழித்துக் கொண்டு எழுவார்கள். குளிரைப் பொருட்படுத்த மாட்டார்கள்; பனியைப் பாராட்ட மாட்டார்கள்; கால்கைகள் குளிரினால் உதறும்; பற்கள் கப்பிரோட்டில் ஜட்காவண்டி போவதுபோலக் கடகட வென்று குளிரினால் ஆடும். அப்படி யிருந்தும், பக்தியென்னும் முட்டான்தனம், அவர்களை எழுப்பி விடுகிறது. இவர்களில் சிலர் குளிப்பார்கள்; குளிருக்கு அதிகமாகப் பயந்தவர்கள் கால் கைகளைச் சுத்தம் பண்ணிக்கொண்டு பட்டை நாமங்களைத் தீட்டிக்கொள்ளுவார்கள். தாளம், மிருதங்கம், தம்பூரு அல்லது ஆர்மோனியத்தையும் தூக்கிக்கொள்ளுவார்கள், தெருத் தெருவாக பஜனை செய்து கொண்டு வருவார்கள். இதைப்போலவே சைவ பஜனை மடம் வைத்திருக்கின்ற ஊர்களில் சைவர்கள் விபூதியைப் பட்டையடித்துக் கொள்வார்கள். உருத்திராக்கங்களைச் சுமந்து கொள்ளுவார்கள். தங்களுடைய முஸ்தீப்புகளுடன் பாடிக்கொண்டி புறப்பட்டு விடுவார்கள். இந்த பஜனைக்கோஷ்டியினர் அரிசிப்பிச்சை வாங்குவதும் உண்டு.

இக்காட்சிகள், நாகரீகமுள்ள நகரங்களிலும்நாட்டுப்புறங்களிலும்நடைபெறுகின்றன. இப்பொழுது இவைகள் எல்லாவிடங்களிலும் இல்லை என்றாலும் சில இடங்களில் இருக்கின்றன. எந்தக்காலத்திலும் பைத்தியக்காரர்கள் இருந்துதானே தீர்வார்கள்? அதற்கு நாமென்ன செய்யலாம்? நமக்குத்தெரிந்த மருந்தைக் கொடுக்கலாம். இவ்வளவுதான் முடியும்.

இச்செயல்களால், சாதாரண மக்களின் மனத்தில் உண்டாகும், பக்தியும், விசுவாசமும் அதிகம். அவர்கள் இந்தப்பஜனை கோஷ்டியாரைப்பத்த சிரோன் மணிகளாகக் கும்பிடுவார்கள்! நமஸ்கரிப்பார்கள். என்ன அறிவு! எவ்வளவு கேவலம்!

இது போகட்டும், இவர்கள் காலையில் எழுந்து தண்ணீரில் விழட்டும்; சன்னிபிறந்து சாகட்டும்; விடியற்காலத்தில் பொங்கற் சோற்றையும், பல காரவகைகளையும், உண்ணட்டும்; அஜீரணத்திற்கு உள்ளாகட்டும்; காலராநோய்க்கு ஆளாகட்டும்; பிறருக்கும் அந்நோயைப் பரவ வைக்கட்டும்; எந்தச்சந்தியிலாவது போகட்டும்; அதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. இதன் மூலமாக மக்கள் மனத்தில், முட்டான் தனத்தை ஊட்டுகிறோர்களே என்றுதான் கவலைப்படுகிறோம்.

மார்கழி மாதச்சனியன் இவ்வளவோடு விட்டதா! இவ்வில! இல்லை!! திருவிழாவுக்காக, வைகுண்ட ஏகாதசிக்காக, ஆருத்திரா தரிசனத்திற்காக, சிரங்கத்திற்கு ஓடச்செய்கிறது. சிதம்பரத்திற்கு ஓடச் செய்கிறது. குளிர்காலத்தில்---பனிக்காலத்தில்---காலராக் காலத்தில் எவ்வளவு தொல்லை! எவ்வளவு அலைச்சல்! எவ்வளவு பணச்செலவு! எவ்வளவு மூடநம்பிக்கை! எவ்வளவு முட்டான்தனம்!

எதற்காகச் சீரங்கப் பிரயாணம், எதற்காகச் சிதம்பர யாத்திரை! எல்லாம் மோட்சம் பெறத்தான்; மோட்சத்திற்கு இவ்வளவு கஷ்டம் என்? மோட்சம் என்றால் சாவு என்றுதானே அர்த்தம்! இதற்கு ஒரு சாண் கயிறு கிடைக்கவில்லையா? அல்லது நமது அழகர் சொல்லுவது போல அரையணாவுக்குக் கௌரிபாஷாணம் கிடைக்க வில்லையா! இதுவும் இல்லாவிட்டால், ரயில் தண்டவாளத்தில் போய்ப் படுத்துக் கொள்ளுவது தானே! இந்த மாதிரி சுகாதார மற்ற பருவ காலத்தில் யாத்திரை செய்வதால் என்ன பலன் கிடைக்கிறது! பணம் செலவாகிறது; உடல் நலம் குறைகிறது, காலம் வீணாகிறது, தொத்து வியாதிகள் வருகின்றன; இவைதானே லாபம்! வேறென்ன? அறிவிருந்தால் ஆலோசித்துச்சொல்லுங்கள்.

இம்மாதிரியான துன்பங்கள் என்வருகின்றன? காரணம் என்ன? யோசித்துப் பார்த்தீர்களா? நீங்கள் யோசிக்காவிட்டாலும் நான் யோசித்துப்பார்த்தேன் சொல்லுகிறேன். மதம் என்னும் மடத்தனம், பக்தி என்னும் முட்டான் தனம், மோட்சம் என்னும் கிறுக்கு, மூன்றோர் வழக்கம் என்னும் மயக்கம், இவைகளால் தான் நாம் கெட்டலைகிறோம்! சீரழிகிறோம். நான் சொல்லுவதைப்பற்றி திடீரென்று கோபித்துக்கொள்ளவேண்டாம். புத்தியைக் கொஞ்சம் செலவழியுங்கள்! மூளையைக் கொஞ்சம் உருகச் செய்யுங்கள்! விளங்கும்.

மார்கழி மாதத்தில் மேற்படி காரியங்களைச் செய்வதால் சந்தோஷமாகக் காலம் போக்குகிறோம் என்று சொல்லலாம். சந்தோஷமாகக்காலம்போக்க இதுதானா வழி! மூட்டான் தனத்தையும், குருட்டு நம்பிக்கையையும் உண்டாக்கக்கூடிய செயல்களைப் புரிந்ததால் சந்தோஷப்படவேண்டும்? சந்தோஷப்படுவதற்கு வேறு அறிவு வளர்ச்சியோடு கூடிய வழிகள் இல்லையா?

மார்கழி மாதக் கடைசியில், தை மாத முதலில் பொங்கல் பண்டிகை யொன்று! அதற்கு எவ்வளவு தொல்லை! மனிதனுக்கு மாத்திரமா பொங்கல்! பொங்கல் நாலுநாள். பொங்கலுக்கு முதல் நான் போகிப் பண்டிகையாம்! பொங்கலாம! மாட்டுப் பொங்கலாம்! கன்னிப் பொங்கலாம்! இந்தப் பொங்கல்களில் நடக்கும் ஆர்ப்பாட்டங்களை என்ன சொல்லுவது? புதுவுடைகள் வாங்கி அணிந்து கொள்ளுவார்கள் பலர்! சம்பந்தி வீடுகளுக்கு வரிசை அனுப்புவார்கள் பலர்! இவைகளில் ஆகும் செலவு அளவுகடந்தவை. வரிசைகொடுக்கும் வகையில் ஒருவர்க்கொருவர் சொந்தக்காரர்களுக்குள் ஏற்படும் மனவருத்தங்கள் பல. எங்கும படையுல், சர்க்கரைப் பொங்கல் வேறு, வெண் பொங்கல் வேறு, ஏழைகள் குடும்பங்களில் இந்தப் பொங்கற் சோறுகளே இரண்டு மூன்று தினங்களுக்கு வைத்துக்கொண்டு தின்று வியாதியடைவது வேறு, பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, வண்ணான், அம்பட்டன், தோட்டி, வேலைக்காரர்கள் வீடுகள் தோறும் சோற்றுப் பிச்சைக்காக அலையும் பரிதாபமான காட்சி வேறு; இவ்வாறு பல வகையில் பொங்கல் பண்டிகைத்தொல்லைகளை உண்டாக்கி விடுகிறது. போதும் போதாமைக்கு ஆஸ்பத்திரிகளில் மருந்துச் செலவு அதிகம். டாக்டர்களுக்குத் தொல்லை. அட அப்பா! எவ்வளவு தொல்லை! பாழும் பொங்கல் பண்ணிவதைப் பாருங்கள்!

மார்கழி மாதச் சனியன் இம்மாதிரி பல வகையில் மக்களை அல்லோலகல்லோலப் படுத்திவிடுகின்றது. படுத்தி விட்டது; என்ன பரிதாபம்! நமது மக்கள் மூடத்தனத்தால், குருட்டுத்தனத்தால் எவ்வளவு துன்பத்திற்கு ஆளாகின்றனர். எல்லாவற்றையும் யோசித்துப் பாருங்கள். இவை பயனில்லாத காரியங்கள்; வீணகாரியங்கள் என்று வினங்காமல் போகாது. இவைகளை நடத்தாவிட்டால் என்ன முழுகிப்போய் விடும். பூமி நடுக்கம் உண்டாகி நாம் பாதாளத்திற்குப் போய்விடுவோமா? கடல் புரண்டு வந்துவிடுமா? ஒன்று மில்லையே அப்படி யிருந்தும் என்பண்டிகைகளென்றும், விரதங்களென்றும் திருநாட்களென்றும் அலைகின்றீர்கள். அந்நியர்கள், நாகரிகமுடையவர்கள் நகைக்க இடங்கொடுக்க வேண்டாம். பயனுள்ள காரியங்களைச் செய்யுங்கள்! அறிவோடு செய்யுங்கள்! நாம் மற்ற நாட்டினரைப்போலப் பெருமையடையலாம்! சுதந்தரமடையலாம்! செல்வமடையலாம்! சமத்துவமடையலாம்! இது உறுதி! உண்மை! நிச்சயமாய் நம்புங்கள்! நம்பாவிட்டால் எக்கேடுகெட்டாலுது போங்கள்! மேலே சொல்லிய நமது விரதங்களையும், நமது பக்திகளையும், நமதுபஜனைகளையும், நமது பண்டிகைகளையும், பிறர்பார்த்தால் சிரிக்கமாட்டார்களா? நாமேநினைத்துப்பார்த்தால்சிரிப்புவரவில்லையா? கேலிக்குஇடமாகத்தோன்றவில்லையா? வைதீகக் கண்ணுக்குபரிசுத்தமாகத் தோன்றலாம்! உண்மையாகத்தோன்றலாம்! தெய்வீகமாகத் தோன்றலாம்! அதைப்பற்றிக்கவலையில்லை. நாகரிகக்கண்ணால்பாருங்கள்! அறிவுக்கண்ணால் பாருங்கள்! உண்மைவிளங்கும். நான் பொய் சொல்லவில்லை; உண்மையாகச் சொல்லுகிறேன். உறுதியாகச் சொல்லுகின்றேன்; நான ஒரு ''ஸ்க்குரூ லூஸ்'' என்று அலட்சியம் செய்யவேண்டாம். வந்தனம் பிறகு சந்திக்கிறேன்.

''பனகல் அரசர் தினம்''

சிவகங்கை நிலையக் கட்டிடத்தில் 16-12-31 தேதி மாலை, வக்கீல், எஸ். ராமச்சந்திரன் பி. ஏ. பி. எல் அவர்கள் தலைமையில் ஷிகொண்டாட்டம்நடைபெற்றது அவ்வமயம்பல அன்பர்களும், விசேஷமாகத் தாழ்த்தப்பட்ட தோழர்களும் விஜயம்செய்திருந்தார்கள். பனகலரசரின் புகழைப்பற்றி பலஅன்பர்கள் சொற்பொழிவாற்றினர்கள். பின் தலைவர். எஸ். ராமசந்திரன் அவர்கள்தம் முகவுரையில் பனகல்அரசர் தாழ்த்தப்பட்டோர்க்கு நன்மைபுரிந்ததையும், அவரின் அழியாக்கீர்த்தியையும், தாழ்த்தப்பட்டோர்க்கு தனித்தொகுதியே நன்மைஅளிக்குமென்றும்பேரிலொன ஒருநிருபர்எழுதுகிறார்.

வைதிகப் புலம்பல்.

(தேசீயத்துரோகி)

பாவம்! திரு. எம். கே. ஆச்சாரியா என்ன செய்வார்? உள்ளபடியே அவரும், கள்ளங்கபடற்றவர் தான்! மனத்தில் பட்டதை அப்படியே ஒப்பித்து விடுகிறார்! சனாதன தர்மத்துக்கு எப்பொழுதும் வக்காலத்து வாங்கிக்கொண்டு பேசுவதே அவருடைய வேலையாகி விட்டது. சொஞ்சகான் சுயராஜ்யக்கட்சியில் தலைவராய் விளங்கினார். இப்பொழுது ராஜீய உலகில் அவருக்குச்சீவ்வாக்கில்லை. ஆனாலும், ராஜீயப் பார்ப்பனர்கள் அவருடைய அபிப்பிராயத்திற்குச் செல்வாக்குக்கொடுப்பதில் மாத்திரம் தவறிப்போய்விட மாட்டார்கள். சனாதன தருமத்திற்குப் பரிந்து அறிக்கை மேல் அறிக்கைகள் வெளியிட்டுக்கொண்டிருக்கிறார். சென்ற 23-12-31 புதன்கிழமை சுதேசமித்திரனில் அவருடைய அறிக்கை ஒன்று வெளியாகி இருக்கிறது. அவ்வறிக்கையில், "இனி மேல் ஒவ்வொரு சட்டசபையிலும் மதாச்சார அனுஷ்டானங்களைத் தொலைத்துவிட வேண்டும் என்று என்னும் சுயமரியாதைக் கட்சியாரோ, காந்தி சீஷர்களோ, வேறு சமுதாய சீர்திருத்தக்காரரோ இயற்கள் பெருந்தொல்லையினராக ஏற்படக்கூடும். இவர்கள் சனாதன தர்மத்தை அழிக்கவோ, கோயில்களுக்குள் பஞ்சமப்பிரவேசத்தைப் பலாத்காரப்படுத்தவோ, சாரதா சட்டத்தைக்காட்டிலும் இன்னும் கொடிய சட்டங்கள் இயற்றவோ, இம்மாதிரியான அநீதங்கள் பல செயுங்கால் நாம் மீக இந்துக்களாகிய நாம் என்ன செய்வது?" என்று ஒப்பாரிவைக்கிறார்.

இவர் ஜோசியம் 'பார்த்துக்கொண்டு வீட்டுக்கும் ஒப்பாரி ஒருவகையில் உண்மையாகவே முடியக்கூடியதுதான்.

அன்றியும் இக்காரியங்களைத்தடுக்க அரசியல் சீர்திருத்தத்திலேயே பாதுகாப்புகள் இருக்கவேண்டுமென முறையிடுகிறார். இன்னும் அவ்வறிக்கையில் காசிக்ஷேத்திரம், குருவாயூர் முதலான கோயில் சத்தியாக்கிரகத்தைக்குறிப்பிட்டு நெஞ்சத்துடிக்கிறார். தீண்டாதவர்களுக்குச் சமத்துவம் கொடுக்கும் விஷயத்தில், ஆங்கிலம் படித்த நவநாகரீகமுள்ள இந்துக்களெல்லாம் அனுதாபம் காட்டுகிறார்களாம்! பிரபலமான பத்திரிகைகளெல்லாம் தீண்டாதாரின் சமத்துவத்தை ஆதரிக்கிறதாம்! இதனால் சனாதனதர்மம் போய்விடுகிறதாம்! இந்துமதம் அழிந்துவிடுகிறதாம்!

இம்மாதிரியான எண்ணம் உண்டாவதைத்தடுப்பதற்குக் கலாசாலை மாணவர்களுக்குச் சனாதனதர்மம் உபதேசம் பண்ணவேண்டுமாம். அதில், சுதேச பாஷைத்தினசரிப் பத்திரிகைகள் ஆரம்பிக்கவேண்டுமாம். சாரதாசட்டத்தை எதிர்த்துக் கிளர்ச்சிசெய்ததைக்காட்டிலும், தீண்டாதார் சத்தியாக்கிரகத்தை இன்னும் கடுமையாக எதிர்த்துக்கிளர்ச்சி செய்யவேண்டுமாம்! இவையெல்லாம் ஆச்சாரியார் அவர்கள் கூறும் அபிப்பிராயங்கள்.

ஐயோ! பாழும் இந்துமதமே! கொடுமையான சனாதனதர்மமே! நீங்கள் எத்தனை காலைக்குத்தீண்டாதார்களை ப்பாவிகளாக வைத்துக் கொண்டிருக்க முடியும்? நீங்கள் எத்தனை காலைக்குப் பார்ப்பனர்களை மாத்திரம் ஜனசமூகத்தில் தலையில் எற்றி வைத்து அவர்களுடைய புத்தியையும், உழைப்பையும், செல்வத்தையும் உறிஞ்சும்படி இடங்கொடுப்பீர்கள்! இன்னும் காலங்கள் எமாறவில்லை! உங்களை அடியோடு ஒழித்து விடுவோம்! இதுநிச்சயம்! காலங்கள் ஒழிக்காவிட்டாலும் நீங்களே இன்னும் சில ஆண்டுகளில் மாண்டு மண்ணோடுமண்ணாய்விடுவீர்கள் என்று உறுதி கூறுகிறோம். இதுதான் காலங்கள் சொல்லும் சேதி.

திரு. ஆச்சாரியார் அவர்கள் இந்த 'அதர்ம உலகில்' சனாதனதர்மம்கெட்டு வருகின்ற 'பாழ்' உலகில் வாழ்வதைவிட இமயமலை உச்சிக்குச்சென்று சாதாரணமாக ஜபதபங்கள் செய்து கொண்டு 'மோட்ச' உலகிற்கு வழி தேடுவதே பிரயோசனமுள்ள காரியமாகும்! வீணாக நடக்கப்போகாத காரியங்களைச்சொல்லிக்கொண்டிருப்பதனத்தாயர் அடையதில் என்ன பயன்? என்று மிகவும் அனுதாபத்துடனே தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

ஃஃ ஃஃ

மற்றொரு ராஜ்பவராகி திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் சென்ற 21-12-31ல் திருச்சிராப்பள்ளியில் ஒரு பிரசங்கம் செய்திருக்கிறார். அத்தப்பிரசங்கத்தில் அவரும் தீண்டாதார்களைப்பற்ற முறுத்தாமல்விடவில்லை. தீண்டாதவர்களுக்குச் சமத்துவம் கொடுக்கவே ண்டியதுதானும்! அவர்களும்கோயிலுக்குப்போக வேண்டியதுதானும்! ஆனால் சாவதானமாக-சமாதானமாக இந்தக்காரியத்தைச் செய்யவேண்டுமாம்! பலாத்காரத்தினால் செய்யக்கூடாதாம்! சத்தியாக்கிரகம் பலாத்காரமாம். ஆகையால் ஆலயப்பிரவேசசத்தியாக்கிரகத்தை இவர் ஆதரிக்கமாட்டாராம்.

சாவதானமாக-சமாதானமாக எப்பொழுதுதான் தீண்டாதார்களுக்குச் சமவுரிமை கிடைக்கக்கூடும். இதுவரையிலும், நமது சாஸ்திரியார் அவர்களும், மற்றப தேசாபிமானிகளும், தீண்டாதார் சமத்துவத்திற்கு

காங்கிரஸை பகிஷ்காரியுங்கள்.

தாழ்த்தப் பட்டவர்களுடையவும், பிற்போக்கான மைனரிட்டிகளுடை

என்ன சாதித்து விட்டார்கள்? அவர்கள் சமத்துவக் கிளர்ச்சி செய்யும் போதெல்லாம், அதுமதவிரோதம், வேதவிரோதம், சனாதனதர்ம விரோதம் என்று கூச்சலிட்டுத் தடுப்பதை விட வேறு என்ன பண்ணி விட்டார்கள்.

இதில்-சமீபத்தில் திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் பேசியிருப்பதிலொரு புதிய வியாக்யானம் காணப்படுகிறது. காங்கிரஸ் செய்யும் சத்தியாக்கிரகத்தை அஹிம்சா தர்மம் என்று சொல்லுகின்றவர்! தீண்டாதார் சத்தியாக்கிரகத்தைப் பலாத்காரம் என்று சொல்லுகின்றார் இதில் எது உண்மை. என்ன விபரீதம்! என்ன வேடிக்கை, தீண்டாமை ஒழிக்கச் சட்டஞ் செய்தாலும், அப்பொழுதும் பலாத்காரம் என்று கூச்சலிடுவார். வேறு எவ்வழியில் தான் அவர்கள் சுதந்தரம் பெறுவது.

ஃஃ ஃஃ

கொச்சி சட்டசபையில் சென்ற 17-12 31ந் தேதி கூட்டத்தில் பல சீர்திருத்தத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. திரு. கே. ஐயப்பன் என்பவர், ஜாதி மத சம்பந்தமான தடைகளை ஒழிக்க ஒரு மசோதா கொண்டுவர அனுமதிகேட்டார். கொடுக்கப்பட்டது. கலப்பு விவாகத்தினை அனுமதியளிக்கும்படியான ஒரு மசோதாவுக்கு அனுமதி கேட்டார்; அதுவும் கொடுக்கப்பட்டது. இவ்விரண்டையும், அச்சபையிலும் ஒரு வைதிகர் எதிர்த்தார். திரு. சங்கா புது என்பவர் தான் இவைகளை எதிர்த்தவர், இவைகள் நிறைவேறினால், ஜாதி, மதங்கள் தொலைந்து விடுமாம்; சனாதர்மம் போய் விடுமாம், துன்மார்க்கம் வந்துவிடுமாம் இவை திரு. சங்கரபுது அவர்களால் மசோதாவை எதிர்ப்பதற்குக் கூறப்பட்ட காரணங்கள். ஆனால், எப்படியோ அவருடைய புலம்பலைக் கவனிக்காமல் போய் விட்டார்கள். திரு. கே. ஐயப்பன் அவர்களின் மசோதாக்களுக்கு அனுமதி கொடுத்து விட்டார்கள். அதுபற்றி சந்தோஷம்.

ஃஃ ஃஃ

இம்மாதிரி, பார்ப்பனர்களெல்லாம் தீண்டாமை ஒழிப்பதற்கு விரோத மசப் பிரசாரம் பண்ணுகின்றார்கள். ஆனால், நமது, திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்களோ தீண்டாமையை ஒழிக்கவேண்டும் என சில தினங்களாகப் பேசிவருகின்றார். இது எதற்காகவோ? உண்மையாகவோ? அல்லது பார்ப்பனரல்லாத தமது சிஷ்யர்கள் சிலரின் தொந்தரவுக்குப் பயந்தா? என்ற விஷயம் இன்னும் வெளிப்பட வில்லை. போகப் போக உண்மை தெரிகிறது. அதற்குள் நமக்கு அவசரம் என்? மலிந்தால் எதுவும் மார்க்கட்டுக்கு வருகிறது!

யமும் பொதுக் கூட்டமென்ற வகுப்பை, ஓன்லொல் தாரிபாமண்டபத்தில் ராய்சாஹிப் பாபு ராமசாண்மல் லாயம். யல். வி. தலைமையில்நடை பெற்றது. சுமார் 100003பர் விஜயஞ்செய்திருந்தனர்.

உயர் சாதி இந்துக்களிடம்இன்னும் அதிகாரம் கொடுக்கப்படுமானால், தாழ்த்தப் பட்ட வர்களுடையவும், பிற்போக்கான வர்களுடையவும் கதி யென்னவாகுமென்று தலைவர் தமது பேச்சில்எச்சரிக்கை செய்தார். தாழ்த்தப்பட்டவர்கள் ஏகமானதாகத்தனித் தொகுதியையே ஆதரிக்கின்றார்கள். காங்கிரஸ் கோரிக்கையான கூட்டுத் தொகுதியை எதிர்க்கின்றார்கள். டாக்டர் அம்பேத்காரிடம் அவர்களுக்குப் பூரணநம்பிக்கை யிருக்கிறது. ஒரு பெரிய நகரத்தில் தாழ்த்தப்பட்டார்களுடையவும், பிற்போக்காளர்களுடையவும் பொதுக்கூட்டமொன்றைக்கூட்டி அவர்கள் தங்கள்தலைவராககாந்திஜியையா? அல்லதுடாக்டர் அம்பேத்காரையா சொன்னார்களென்பதைப் பார்க்கும்படி காங்கிரஸையும் உயர்சாதி இந்துக்களையும் அறைகூவி அழைக்கின்றேன்" என்றும் தலைவர் குறிப்பிட்டார்.

தீர்மானங்கள்.

பம்பாயில் காந்திஜி தலைமையில் கூட்டப் போகிற தாழ்த்தப்பட்டவர் மகாநாடு என்று சொல்லப்படுகிற மகாநாட்டை பகிஷ்காரிக்கும்படிபம் பாயிலுள்ள தாழ்த்தப்பட்டவர்களையும், பிற்போக்காளர்களையும் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. எனெனில், வட்டமேஜை மகாநாட்டில் காந்திஜியின்போக்கு தாழ்த்தப்பட்டவர்களுடைய உரிமைக்குஎதிரிடையாகவேயிருந்தது.

இந்தியா திரும்பியதும் இம்மகாநாட்டை உடனேகூட்டி, காங்கிரஸின் சத்திராகிரகத்தில் சிக்குவதால் அவர்களுக்கு ஏற்படக்கூடிய கஷ்டங்களை குத்தகைக்காரர்களுக்கு எடுத்துச் சொல்லும்படி டாக்டர்அம்பேத்காரை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

காங்கிரஸும், காந்திஜியும் தங்கள் உரிமை களைமுற்றும் கவனியாது விட்டுவிட்டதால், காங்கிரஸின் எந்த நடவடிக்கையிலும் கலந்துகொள்ளாதிருக்குமாறு இம்மகாநாடு தாழ்த்தப் பட்டவர்களையும், பிற்போக்கானவர் களையும்கேட்டுக்கொள்ளுகிறது.

வட்டமேஜை மகாநாட்டில் தாழ்த்தப் பட்டவர்கட்கும் பிற்போக்கான வர்கட்கும் மைனரிட்டிகட்கும் கொடுக்கப்பட்ட மிகக்குறைவான பிரதிநிதித்துவத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும், இந்திய லர்க்காரும் கவனிக்குமாறு இம்மகாநாடு தெரிவிப்பதுடன், இந்தியாவில் கூடப்போகும்அதிதவட்டமேஜை மகாநாட்டில் தகுந்தபிரதிநிதித்துவம் கொடுக்குமாறுகேட்டுக்கொள்ளுகிறது.

(சண்டமாருதம்)

மிஸ். மேயோவுக்கு உதவி.

(கிறுக்கன் கிண்டல்)

இந்தியாவில் உள்ள அநாகரீகங்களைப்பற்றி — ஊழல்களைப்பற்றி — மூட்டாள் தனங்களைப்பற்றி மிஸ். மேயோ ஒரு புத்தகம் முதலில் எழுதினர். இது சம்பந்தமாக, நமது தேசாபிமானிகள், ஆகாயத்திற்கும் பூமிக்குமாகத் தாவிக் குதித்தார்கள். அந்த அம்மாளைக் கண்டபடி — வாயில் வந்தபடி திட்டினார்கள். அந்த அம்மாள் மண்டையை உருட்டினார்கள். இந்தியாவுக்குப் பெருந் துரோகம் பண்ணி விட்டதாகத் துள்ளினார்கள். ஆனால், அந்த அம்மாள எடுத்துக்காட்டிய குறைகள் நமது நாட்டில் இல்லையென்று ஒருவரும் கூற மாட்டிக்கொண்டு முன்வரவே யில்லை. அந்தம்மாள் எடுத்துக்காட்டிய குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இதுவரையிலும் ஒரு தேசாபிமானிகளும் கவலை கொள்ளவே யில்லை. மேலும், மேலும், இடைவிடாமல் மாரிக்காலத்து மழை போல அக்குற்றங்கள் நடந்து கொண்டே வருகின்றன. இதற்கு உதாரணமாக ஒரு விஷயம் பாருங்கள்.

பம்பாய்க் காப்பரேஷன் அங்கத்தினர், பிரபல காங்கிரஸ்வாதி, அதாவது "தேசாபிமானி" என்று தெரிந்து கொள்ளுங்கள். இவர் வாலிபருமல்லர்; நடுத்தர வயதுடையவரும் அல்லர்; 63 வயது சென்ற கிழவர். "கஞ்சிகரப்சே மாகடர்" என்னும் பெயருடையவர். இவர்செய்த காரியம் 12 வயதுள்ள இளம்பெண்ணை பலாத்காரமாகக் கற்பழித்து விட்டாராம். இதனால், பம்பாய்க் கோர்ட்டில் வழக்குத் தொடரப்பட்டது. கிரிமினல் செஷன் ஜட்ஜ் நீதிபதி 5 வருடக் கடுங்காவல் தண்டனை விதித்து விட்டார் என்ற செய்தியை எல்லாப் பத்திரிகைகளிலும் பார்த்திருப்பீர்கள். இவ்விஷயம் மிஸ். மேயோவுக்கு ஒரு நல்ல விருந்தல்லவா? அற்பமான இன்னும் பல புத்தகங்கள் எழுதுவதற்கு உதவியல்லவா? இந்தியாவைப்பற்றி இதுவரையிலும் மூன்று புத்தகங்கள்தான் எழுதியிருக்கின்றார்கள். 4 வது புத்தகம் எழுதுவதற்கு இவைகள் சரியான "ரிக்கார்டுகள்" அல்லவா?

இம்மாதிரியே நமது நாட்டில் எவ்வளவு வழக்குகள் நடக்கின்றன என்று கணக்கு எடுத்தீர்களா?

இராமசாமி, இராமநாதன் இலங்கை விஜயம்.

திருவாளர்கள், ஈ.வெ. இராமசாமி அவர்களும்எல்.இராமநாதன் எம். ஏ. பி. எல். அவர்களுமாக ஐரோப்பா முழுவதையும் சுற்றிவருதன்பொருட்டு சென்ற 13-12-31உ அன்றுசென்னையினின்றும்அப்போய்கிளஎன்னும் பிரஞ்சுக்கப்பலில் பிரயாணமாகிப்போ நிறையில் கொழும்பு துறைமுகத்தில் 16-12-31 மாலை 4-மணியளவில் இறங்கினார்கள். அங்கு பொழுது ஜனப் பி. எம். ஷாஹுல்ஹமீது அவர்கள் சந்தித்து இருவரையும் மோட்டாரில்ஏற்றிக்கொண்டு கொழும்பு நகரின் பிரதான இடங்களுக்கெல்லாம் அழைத்துச்சென்றார். இராமசாமி வேண்டுமோளுக்கினங்கி புத்த மதக்கோவில்களையும் காண்பித்துக் கொண்டேயேரே தம வியாபாரஸ்தலத்துக்கு அழைத்துவந்து சம்பாஷித்துக் கொண்டிருந்துவிட்டு, போடோபடம் பிடிக்கப்பட்டு, அன்று இரவில்இராசாமிக்குவழியனுப்பு உபசாரம்செய்து ம்பொருட்டுஜனப் பி. எம். ஷாஹுல்ஹமீது அவர்களின் 'மீராஸ்மஹஷன்' பங்களாவில் ஓர்விருந்துண்டிவைபவம் நடத்தப்பெற்று இராமசாமிக்கு வழியனுப்பு உபசாரம் ஜனப் எஸ். எம்.

---

70 வயது வாலிபர்கள் 7 வயதுக் குமரிகளை மணஞ்செய்யும் அக்கிரமங்கள் எவ்வளவு? 5 வயதில் ஆனி மாதத்தில் கல்யாணம் பண்ணி, ஆடி மாதத்தில் தாலியறுக்கும் பெண்கள் எவ்வளவு?

இவைகளை யெல்லாம் நாம் கணக்கெடுக்காவிட்டாலும், மிஸ், மேயோ அம்மையார் எட்டாயிரம் கணக்கெடுத்துகொண்டே இருப்பார்கள் என்பதில் சந்தேகப்படவேண்டாம். இந்தக்காரியங்களைத் தடுக்க முதலில் வழிதேடுங்கள் என்றால் என் காதில் வாங்குவதில்லை? நீங்கள் என்ன அவ்வளவு செவிடர்களா? அல்லது புத்தியில்லையா? என்றால் நாயைப் போல்'வள்வள்'என்றுகுலைக்கத்தூண்டுகிறீர்கள். நீங்கள் குலைத்தால் எங்களுக்குக் கவலையில்லை. குலைக்கிற நாய் கடிக்காது என்பது எங்களுக்குத் தெரியும்.

ஆகையால், மூளைபிருந்தால் குற்றங்களை நீக்க வழி தேடுங்கள். நாம் வைகிறோம் என்று நினைக்க வேண்டாம், உங்களுக்கு தோஷம் உண்டாக வேண்டுமே என்ற நல்ல எண்ணத்தோடுதான் கடுமையான வார்த்தைகளைப் பிரயோகிக்கிறோம். தயவு செய்து மன்னித்துக் கொள்ளுங்கள், மன்னிக்காவிட்டாலும் கவலையில்லை.

ஷேகப்பா அவர்களின் தலைமையின் கீழ் அதிதிமரியாதைசயாகஉபசரிக்கப்பட்டதெரியவந்தது. அதுசமயம் திருவாளர்கள், ஈ. வெ. இராமசாமி அவர்களும், இராமநாதன் அவர்களும் தங்கள் மேலுடுசெல்லும் நோக்கத்தைபற்றியும், சுயமரியாதை இயக்க கொள்கையை பற்றியும் 1 மணிநேரம் விளக்கிசொற்பொழிவு நிகழ்த்தினர்கள். அதன்பின் ஓ. கே. முஹிதீன் லாஹிபவர்களின் வந்த ஸ்பசாரத்தோடு கூட்டம் இனிது முடிவுற்றது. நிற்க, திரு. இராமசாமி அவர்கள் கொழும்பில் இறங்கியதென்று மாதில் கடிதங்கள் எழுதவேண்டிய காரியத்தினிமித்தம் மேயண்டியாரை யும்சந்திக்கவும், அன்றி பிரசங்கங்கள்புரியும் நோக்கமாகவோவன்று. என்றாலும் அவர்கள்கொழும்பிலிறங்கியசெய்தி கூறுநேரத்தில் ரவி விட்டது. கொழும்பிலுள்ள இந்திய சுயமரியாதைச் சங்கத்தின் ஆதரவில் திரு. எஸ். ஆர். முத்தையா அவர்களின் தலைமையில் ரீன்பாத்ஹாள் ஹேடி ஸிஸ்டர் சர்ச்சில் ஒரு பாராட்டுக் கூட்டம் கூடியது. அதுபோது இரண்டு தலைவர்களுக்கும் இந்திய சுயமரியாதைச் சங்கத்தாராலும், இலங்கை இந்திய சங்கத்தாராலும், இராமனாதபுரம் ஜில்லா ஆதிதிராவிட மகாஜன சங்கத்தாராலும், ஷை ஜில்லா ஆலம்பட்டி ஆதிதிராவிட ஜக்கிய சங்கத்தாராலும், சுயமரியாதை வீரரும், "குடி அரசு" எஜண்டுமான திரு. எஸ். பரமசிவம் அவர்களாலும், இராமனாதபுரம் ஜில்லா செம்பனூர் ஆதிதிராவிட அபிவிர்த்திச்சங்கத்தாராலும், மலையான சுயமரியாதைச் சங்கத்தாராலும், செல்வராசன் கோட்டை ஆதிதிராவிட சங்கத்தாராலும், இன்னும் பல பிரபலஸ்தர்களாலும் மாலைகள் சூட்டி, வரவேற்புப்பத்திரங்கள தனித்தனியே வாசித்துக்கொடுக்கப்பட்டது. ஷை பத்திரங்களுக்கு இரண்டு தலைவர்களும் தக்க பதில் அளித்த பின் சுமார் 2 மணி நேரம் இயக்கக்கொள்கைகளைப்பற்றியும், தாழ்த்தப்பட்டவர்களின் நிலையைப்பற்றியும், இன்னும் பல அறிய விஷயங்களைப்பற்றியும் சொற்பொழிவாற்றினார்கள். பின் சுயமரியாதைக்காரர்களின் நீண்ட பிரியுபசாரத்தோடு கன்னிரவு 12 மணி சுமாருக்கு கப்பலை அடைந்தார்கள். இக்கூட்டத்திற்கு சுமார் 1500 பேர்கள் ஆண்களும் பெண்களும் விஜயம் செய்திருந்தார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

"இந்திய ஒளி"

இப்பெயர் கொண்ட தமிழ் மாதப் பதிப்பு நாளது மாதத்திலிருந்து வெளியரும். ஜனப் கே. எ. அப்துல் ஹமீத் சாகிப் இதன் ஆசிரியராவர். இதில் காலத்தின் போக்கை அனுசரித்து, வகுப்புத் துவேஷத்தை விலக்கி, தேசப்பற்றை எழுப்பி, ஆதார மற்ற ஆடம்பரங்களைத் தொலைத்து, சீர்படுத்துவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

சிறை செல்வோர் அன்னக் காவடிகளா?

—:0:—

(வழிப்போக்கன்.)

சென்ற 25—12—31ல சென்னையில் நடைபெற்ற தமிழ் மாகாண காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில், திரு. சத்தியமூர்த்திசாஸ்திரியார் அவர்களின்முயற்சியால்ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அத்தீர்மானம்,"ஸ்தலஸ்தாபனங்களைக் காங்கிரஸ்காரர்கள் கைப்பற்ற வேண்டும்" என்பதாகும். இத்தீர்மானத்தை ஆதரித்த திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் அவர்கள், ஸ்தல ஸ்தாபனங்களைக் கைப்பற்றினால், காங்கிரஸ் திட்டங்களை அவைகளின் மூலம் நிறைவேற்றலாம் என்று கூறியதுடன், "ஜில்லா போர்டு தலைவர், தாலூகா போர்டு தலைவர் சிறை சென்றார் என்பது ஒரு பெருமையாகும்" என்றும் கூறியிருக்கின்றார். இதிலிருந்து திரு. ச. சாஸ்திரியார் அவர்கள் தற்காலத்தில் சிறை சென்று வந்தவர்களை யெல்லாம், "அன்னக்காவடிகள்" என்று நினைக்கிறாரா என்பது நமக்கு விளங்கவில்லை. திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார்போன்ற காங்கிரஸ் வாதிகளும், அவர்கள் பத்திரிகைகளும், திரு. பாஷ்யம் அய்யங்கார் போன்றவர்கள் அடிபட்டார் என்பதற்காகப் பெருங்கிளர்ச்சி செய்ததும், மற்றபார்ப்பனரல்லாதார்கள அடிபட்டதைப் பற்றி கவலைகொள்ளாமல் இருந்ததையும் இச்சமயத்தில் நினைத்துப்பார்த்தால் உண்மைவிளங்கும். திரு. சத்தியமூர்த்தி சாஸ்திரியார் போன்றவர்கள், பட்டமும், பதவியும், பொருளும் உள்ளவர்களைத்தான் தியாகிகளாகநினைக்கின்றார்கள என்பதும், எவ்வளவுதான் உண்மையாகக் கஷ்டப்பட்டாலும் பார்ப்பனரல்லாத மற்றவர்களை 'அன்னக்காவடிகள்' 'கௌரவம் அற்றவர்கள்' 'பிழைப்பற்றவர்கள்' என்றே நினைக்கிறார்கள் என்பதும் நன்றாய் விளங்கும். இப்படியிருந்தும் இன்னும் பார்ப்பனரல்லாதார்களிலிலா இத்தலைவரானவர்களின் வால்பிடித்துத்திரிந்துகொண்டிருக்கிறார்களே என்பதைப் பற்றித்தான் நாம் ஆச்சரியப்படுகிறோம்.

ஆலயப்பிரவேச உரிமை.

(நாகர் கோவில் திரு. P. சிதம்பரம் B. A., B. L.)

(அத்தியாயம் I.)

காப்பி ரைட்.

"இந்து" என்று சொல்லப்படுகின்றவர் ஒவ்வொருவருக்கும்—எந்தச் சாதியில் சேர்ந்தவராக இருந்தாலும் சரி—ஒரு சாதியிலும் சேராதவராக இருந்தாலும்சரி—பொதுக்கோயில்களில் பிரவேசிப்பதற்கும், அங்கு ஸ்தாபித்திருக்கும் கடவுள்விக்கிரகங்களைத்தரிசிப்பதற்கும் சகல அதிகாரமும், பாத்தியதையும், உரிமையும் உண்டு. எதாவது கட்டுப்பாடு உளதாகில், அது தம்மைப்போல் ஏதாழுவதற்கு வந்திருக்கும் பிறருக்கு ஒரு உபத்திரவமும் இருக்கக் கூடாது என்பது ஒன்றே யாகும். இதல்லாது வேறு ஒரு கட்டுப்பாடுமில்லை. இதுதான் நமது முடிபு; இதுதான் நியாயம்; இதுவே சட்டமும். வேறு ஒரு சட்டமும் இல்லை. இதுவல்ல சட்டம் என்று சொல்பவரிடம், "உமக்குச்சட்டம் தெரியாது" என்பதாக வெகு தைரியமாகச் சொல்லும் நிலைமையில் இருக்கின்றோம்.

பொதுவாகச் சட்டம் தெரிந்த வழக்கறிஞர்களை அதாவது வக்கீல்களை சமூதாய சம்பந்தமான விஷயங்களில் பிற்போக்கான புத்தியுடையவர்கள் (Conservatives) என்பதாகச் சொல்வதோடு காரணமற்றவர்கள் என்பதாகவும் சொல்வதுண்டு. அவ்விதம் திடீரென்று அவர்களைக் காரணமற்றவர்கள் என்று சொல்வது முழுமையும் சரியாக இல்லாவிட்டாலும், அவர்கள் கைக்கொண்டிருக்கும் சட்டமானது பகுத்தறிவில்லாதது என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. எவ்விதம் சில மந்திர வாதி தன் பித்தலாட்டத்தினால் வாழ்கின்றாரோ அதுபோலவே வக்கீலும் தன் வாழ்நாளைத்தனது சட்டத்தினால் தள்ளுகின்றான்.

சட்டத்தின் பெருமை எதுவென்றால் அதன் நிலையில்லாமையாகும். அதோடு கூட காரணமற்றதாகவும், நியாயமற்றதாகவும் இருக்கின்றது. இந்த நூலானது பெரும்பான்மையாகப்பொதுமக்களுக்கு உதவும்படியாக எழுதப்பட்டிருக்கின்றமையால் முதலாவதாக ஒன்று சொல்லவேண்டியதுண்டு. வக்கீல் மார்கள் அடிக்கடி "அந்தக் கோர்ட்டுத் தீர்ப்பு இப்படியிருக்கின்றது. இந்த நீதிபதி இப்படிச்சொல்லுகின்றார்" என்று பூச்சாண்டி காண்பிப்பதுண்டு. இதை வைத்துக் கொண்டு பயமுறுத்துவதுமுண்டு. ஆகையினால், முதலாவதாக ஒரு கோர்ட்டுத் தீர்ப்புத் தான் என்ன? அதன் வீலை யென்ன என்பதாக நாம் பார்க்க வேண்டியதாயுண்டு.

இங்கிலாந்தில் லார்டு சான்ஸலர் என்னும் நீதிபதிகளில் உயர்ந்த பதவியைப் பெற்றிருந்த "லார்டு ஆல்ஸபரி" என்பார் இவ்விதம் சொல்லுகின்றார்.

"ஒரு கேஸானது அதில் என்ன தீர்மானிக்கப்படுகின்றதோ அதற்கு மாத்திரம் வித்தாட்சியாகும். அத்தீர்மானத்திலிருந்து வேறு எதாவது அனுமானிக்கலாம் என்பதை நான் மறுக்கிறேன். அவ்விதம் நினைப்பது சட்டமானது நியாயத்தை ஒட்டினது என்பதாக எண்ணியே யாகும். அது தவறு. சட்டம் என்பது ஒரு சமயத்திலும் "நியாயத்தையோ, காரியகாரணத்தையோ, எதாவது முறையையோ தழுவினதல்ல யென்பதைச் சட்டம் தெரிந்த ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்ளுவார்" இந்த வாக்கியத்தைவைத்துக்கொண்டு அநேக நீதிபதிகள் சம்பேரித்தனமாகவோ அல்லது தன் சாமர்த்தியக் குறைவினாலோ அல்லது தன்னுடைய ஜாதி மத வர்ணமனப்பான்மையினாலோ தனக்கு இஷ்டம் போல் தீர்ப்புகள் சொல்லிவிடுவதுண்டு. இதைக் குறித்துக்கேட்கும் போது "சட்டம் என்றால் என்ன? அது ஒரு தர்க்க இலக்கண சாஸ்திரமல்ல" என்று சொல்லிவிடுவார்கள்.

இந்த உண்மையை மனதில் வைத்துக்கொண்டு, இந்துக்களென்றும், இந்து லா சட்டதீர்ப்பிற்கு உட்பட்டவர்களென்றும் சொல்லிக்கொள்ளப் படுபவர்களுமான, தாழ்த்தப்பட்டவர்களையும், தீண்டப்படாதவர்களையும் கோயில்களில் நுழைய விடாமல் தடை செய்வதற்கு எதாவது சட்ட சம்பந்தமான பொருத்தமான காரணங்கள் இருக்கின்றதா என்று ஆராய்வோம்.

பாமர மக்களை ஏமாற்றுவதற்காக வக்கீல்கள் "முன் நடப்பு" "பழக்க வழக்கம்" என்னும் பித்தலாட்டத்தைக் கிளப்பி விடுவதுண்டு; இதன் அர்த்தம் என்ன வென்றால் "பொய்ச்சாட்சிகளின் வாய்மொழி பித்தலாட்டமேயாகும்" இதுதான் "பழக்க வழக்கம்".

சட்டம் தெரிந்த வக்கீலிடம் கேட்டால், மேலே நீங்கள் சரியாக இருக்கும் போது சொல்லுவார் "ஐயா, பொது (Public) என்பதாக ஏற்பட்ட கோவிலுக்கோ, ரஸ்தாவிற்கோ, வீதிக்கோ, குளத்திற்கோ, கிணற்றிற்கோ, பாதிக்கப்படியே பழக்க வழக்கத்தைக் குறித்து ஆலோசனை செய்யவே அவசியமே இல்லை"

இந்த உண்மையைத்தான் ஹைகோர்ட்டார் ஐக்கோர்ட்டார் இப்பொழுது கடந்த சரித்திரம் சத்தியாக்கிரகக் கேஸில் (தெரு வீதியின் பழக்க வழக்கத்தைக் குறித்த விஷயத்தில்) தெளிவாகச் சொல்லியிருக்கின்றார்கள்.

இவ்வனம் இருக்கச்சில நீதிபதிகள் சில சமயங்களில், பிரிட்டிஷ் கோர்ட்டுகளில் ஒரு கோவிலில் நடை பெற்றுவரும் "பழக்க வழக்கத்தில்" நின்று அக்கோவில் அமைத்தவரின் "உட்கருத்து" (Intention) வெளிப்படும் என்று சொல்லியிருக்கின்றார்கள். இது முழுத் தவறுதல் ஆகும். பொதுக் கோயில்கள் சம்பந்தப்பட்ட வரையிலும் இந்த அபிப்பிராயம் சரியல்ல.

ஒருக்கால், ஒரு ஜாதியாரால் அல்லது வகுப்பாரால் ஏற்படுத்தப்பட்ட கோயில்களுக்கு இது பொருத்தமாக இருக்கலாம்; அல்லாது பொதுக் கோயில்களுக்குப் பொருத்தமாகாது. பார்ப்பனர்கள் தன் ஜாதிக்காக முன் காலங்களில் ஏதோ ஒரு கோயில் ஏற்படுத்தினதாகவைத்துக்கொள்ளுவோம். எதாவது காரணத்தை முன்னிட்டு ஏற்படுத்திய காலத்தில், ஏற்படுத்தினவரின் "நோக்கம்" என்ன? என்பதாக அறிய வேண்டிய அவசியம் ஒரு வழக்கில் ஏற்பட்டால், அது இப்பொழுது கடந்து வருவதில் நின்றும், இதற்கு முன்னால் ஏற்பட்ட மாமூல் அல்லது பழக்க வழக்கத்தில் நின்றும் ஒருவாறு அறியவும் கூடும். இது ஒருக்காலும் அறிவிற்குப் பொருத்தமென வைத்துக் கொள்ளலாம். ஆனால், "இன்னார்" ஒரு கோயிலை ஸ்தாபித்தவர் என்று கண்டு பிடிப்பதற்கு முன், அவரது "எண்ணத்தை அல்லது உட்கருத்தை'கண்டுபிடிப்பதெப்படி? சுருங்கச் சொல்லுமிடத்து, ஒரு கோயிலை ஸ்தாபித்தவர் இன்னாரென்பதாகவே அறியாமல் இருக்கும் போது அவரது "உட்கருத்தையோ" அல்லது அந்த கோயிலின் "பழக்க வழக்கத்தையோ" குறித்து அறியவேண்டியதில்லை; அங்ஙனம் செய்வது மூடத்தனமாகும்.

இன்ன பார்ப்பனர்களாலும், பார்ப்பனரல்லாத உயர்ந்த ஜாதி இந்துக்களாலும் கொண்டாடி வரும் ஒரு கோயிலானது, சமணக்கோயில் என்பதாகவும், சமணர்களால் ஸ்தாபிக்கப்பட்டது என்பதாகவும் இப்பொழுது தெரிகின்றது என்று வைத்துக்கொள்ளுவோம். இங்கிலீயில் இந்தக்கோயில் விஷயமாக இப்பொழுது கடை பெற்று வரும் வழிபோடுகளினாலே, இதற்குச்சரித்திரத்திற்கு முன் ஏற்படுத்தப்பட்டிருந்த பழக்க வழக்கத்தினாலோ யாதொரு நீதி பதிக்கும் சரியான முடிபுக்கு வர முடியாது. அதாவது இன்றையதினம் யாரெல்லாம் ஒரு கோயிலுக்குள் போகின்றார்கள்; அவர்கள் எந்த ஜாதியினர்; என்பதெல்லாம் இருந்து, அந்தக்கோயிலைக்கட்டினவர் இன்னாரென்பதாகவோ, அவரது எண்ணங்கள் என்ன என்பதாகவோ, அக்கால த்து 'ஆசாரம்' அல்லது 'முறை' அல்லது 'பாகுபாடு' என்ன என்பதாகவோ ஒருபொழுதும் கண்டு பிடிக்கவே முடியாது. இதற்கு உதாரணம் நாகர்கோவில் ஆகும்.

நாகர்கோவில் என்ற நகரத்திற்குப்பெயர் கொடுத்த ஆலயமானது சமணக்கோவிலாகும். சமணர்களோ ஜாதியற்றவர்கள்; அக்கோவில் விக்கிரகங்களோ சமணத்தெய்வங்களைக் குறிக்கும் விக்கிரகங்கள்; ராஜமான சொத்துக்களும் அச்சமணக்கோயிலுக்கு முற்காலத்து மன்னர்களால் வழங்கப்பட்டிருந்தன. உத்தேசம் முந்நூறுவருஷங்களுக்கு முன்வரையிலும் இக்கோயில் சமணக்கோயிலாகவே இருந்து வந்தது. இதனைச்சுற்றிலும் வசித்து வந்தவர்கள் சமணர்களாகவே இருந்து வந்தார்கள். இக்கோயில் பூசாரிகளும் சமணர்களாகவே இருந்தார்கள். இதெல்லாம் சரித்திர ஆராய்ச்சியினால் இப்பொழுது வெளியாகின்றது.

(தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க.)

அறிக்கை.

நமது "குடி அரசு" பத்திரிகைகளை விற்பதற்குக் கீழ்க்கண்ட ஊர்களில் டிபாசிட் வட்டக் கூடிய ஏஜண்டுகள் தேவை.

கோயமுத்தூர்.
திண்டுக்கல்.
மதுரை.
முசிரி.
கரூர்.
சாத்தூர்.
பொறையார்.

விபரங்களுக்குக் கீழ்க்கண்டவிலாசத்திற்கெழுதித்தெரிந்துகொள்ளவும்.

பிரிண்டர் & பப்ளிஷர்,
"குடி அரசு" ஈரோடு.

அறிவிப்பு.

சென்னைநகரம் முழுமைக்கும் நமது பத்திரிகையின் சோல் விளம்பர ஏஜண்டுகளாக மெஸர்ஸ் கற்பகம் கம்பெனியாரை நியமித்திருக்கிறோம். ஆகையால் இனி நமது பத்திரிகையில் விளம்பரம் செய்ய விரும்பும் சென்னையிலுள்ளவர்கள் கீழ்க்கண்டவிலாசத்தார்மூலமாகவே விளம்பரத்திற்கு ஏற்பாடுசெய்துகொள்ளவும்:-

Messrs. Karpaham & Co.,
Sole Advertising Agents,
257, Linghi Chetty Street,
G. T. Madras.

குடி அரசு

ஈரோடு 1931 டிசம்பர் 27உ

அவர்களும், நாமும்.

—:0:—

நாம் விடுதலை பெற்று நம்முடைய துன்பங்கள் எல்லாம் ஒழிந்துசுகத்தோடு வாழவேண்டுமென விரும்பினால், முதலில்நம்மை நாம் சீர்திருத்தஞ் செய்து கொள்வது அவசியமானதாகும். நாம் விடுதலை பெறுவதற்குப் பெரிய தடைகளாக நம்மைச் சூழ்ந்து கொண்டு நிற்பவை எவை என்று ஆராய வேண்டுவது மூதல் வேலை. ஆராய்ந்து கண்டுபிடித்து அத் தடைகளை முழுதோடு நீக்குவதற்கான முயற்சியைப் பலப்படுத்திக் கொண்டு, பின்பு அவற்றை ஒழிப்பதற்குரிய வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்; கண்டு பிடித்த அவ்வழிகளை உறுதியோடும், உண்மையோடும், அஞ்சாமலும் கைக்கொண்டு அந்தத் தடைகளை ஒழிக்க முயல வேண்டியதே சிறந்த செய்கையாகும். இவ்வாறு நான், மற்ற நாகரிகம் பெற்ற—சுயேச்சை பெற்ற நாடுகளில் உள்ளவர்கள் நடந்து அவர்கள் நற்காலத்திலிருக்கும் உன்னத நிலையை அடைந்திருக்கின்றனர். நமது நாட்டிலோ பலருடைய மனத்திலும், விடுதலை பெற வேண்டும் என்ற எண்ணம் மாத்திரம் சில ஆண்டுகளாக உறுதிப்பட்டு நிலைத்திருக்காதும், எந்த வழியில் அந்த விடுதலையை அடைவது என்பதைப் பற்றிச் சரிவரச் சிந்திக்காமலும், சரியான முடிவுக்கு வர மனமில்லாமலும் இருக்கின்றனர். "விடுதலையை வாங்கித் தருகிறோம்" என்று சொல்லித் தேச மக்களுக்குச் சுதந்திரமை வகித்து நடத்துகிறவர்களும், சரியான வழியை மக்களுக்குக் காட்டாமல் இருக்கின்றார்கள். மற்ற நாட்டினர், தங்கள் சமூகத்தில் பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாகக் குடி கொண்டிருந்து வந்திருந்த கடவடிக்கைகளை ஒழித்ததன் மூலம் விடுதலை பெற்றார்கள் என்பதை இந்தத் தலைவர்கள் என்பவர்கள் அறியாதவர்கள் அல்லர். அறிந்திருந்தும், நம்மிடத்திலும் அதுபோல் உள்ள அந்த கடவடிக்கைகளாகிய தடைகளைப் பற்றிய தீமைகளை ஜன சமூகத்திற்கு எடுத்துக் காட்டாமலும், அவைகளை ஒழிக்க வேண்டுமென்று கூறாமலும் மறைத்து வைத்துக் கொண்டிருக்கின்றனர். இதற்குக் காரணம் அவைகளின் மேல் இவர்கள் கொண்டுள்ள ஒருவிதக் குருட்டு நம்பிக்கையே யாகும். அந்த நமது முன்னேற்றத்திற்குத் தடையான நம்முடைய கடவடிக்கைகள், 'நமது முன்னோர்கள் கையாளப்பட்டவை; அவைகள் தெய்வீகத் தன்மையுள்ளவை; ஆகையால் அவற்றை ஒழிக்கக் கூடாது' என்ற ஒரு பகுத்தறிவற்ற, பிடிவாதமான எண்ணமேயாகும்.

ஆகையால் நான், நமது நாட்டில் சமூகச் சீர்திருத்தம் செய்ய முன் வந்தவர்களும், வருகின்றவர்களும், அரசியல் விடுதலைபெற முன் வந்தவர்களும், வருகின்றவர்களும், பழமையான காரியங்களுக்கு ஒரு கெடுதியும் இல்லாமல் அவைகளுக்குப் பாது காப்புத் தேடிக் கொள்வதை முதன்மையாக வைத்துக் கொண்டே, சமூகச் சீர்திருத்தமும், அரசியல் விடுதலையும் பெற விரும்பினர்கள். விரும்புகின்றார்கள். நாம் வேறொரு நல்ல இடத்தை அடையவேண்டுமானால், இருந்தபழைய இடத்தைவிட்டுப் புறப்பட்டால் தான் குறிப்பிட்ட நல்ல இடத்திற்குப் போய் முடிவதைப் போல், பழமையாக நம்மிடம் குடி கொண்டிருக்கும் பல கடவடிக்கைகளை ஒழித்தால் தான் புதுமையான விடுதலையை அடையமுடியும் என்பதை அவர்கள்சிறிதும் சிந்திப்பதில்லை; சிந்தித்தாலும், நமது இரத்தத்துடன் கலந்து உடம்பில் ஊறிப் போயிருக்கும் "பழய நம்பிக்கை" அவர்களைப் பழமையை விட்டு அசைய விடுவதில்லை.

பழமை யென்னும் பாழும் கோட்டைக்குள் உறுதியாக உட்கார்ந்து கொண்டே புதுமையான விடுதலை, சமூக சமத்துவம் இவற்றைப் பெற வேண்டுமெனப் பேசி வருகின்றனர். இதற்காக இவர்கள் செய்யும்படி காட்டுகின்ற முயற்சிகளும், வழிகளும், இன்னும் நாம் பல ஆயிரம் ஆண்டுகளாலாலும், தற்போது இருக்கும நிலைமையிலிருந்து இம்மியளவும் மாறாமல் நிறுத்தி வைக்கக் கூடிய வழிகளாகவும் முயற்சிகளாகவுந் தான் இருக்கின்றன.

இவற்றை விளக்கச் சில உதாரணங்களைக் கீழே எடுத்துக் காட்டுகிறோம். அவற்றைக் கொண்டு மேலே நாம் கூறியவைகளின் உண்மையை ஆராய்ந்து பார்த்துத் தெரிந்து கொள்ளலாம்.

நாகரிகம் பெற்ற நாடுகளில் வாழுகின்ற அறிஞர்களும், சீர்திருத்தக் காரர்களும், அரசியல் வாதிகளும், நமது நாட்டு மக்கள் மனத்தில் தன்னம்பிக்கையை வேரூன்றச் செய்கின்றனர்; நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து சிந்தித்து ஒரு காரியத்தைச் செய்யும்படி மக்களின் எண்ணத்தைத் திருப்புகின்றனர். பழமைகளைப் பற்றிச் சிறிதும் பொருட்படுத்தாமல், காலத்திற் கேற்ப தம்முடைய நடத்தைகளையும், எண்ணங்களையும், செயல்களையும் மாற்றிக் கொள்ளும் படியான மனப்பான்மையை உண்டாக்குகின்றனர்.

நமது நாட்டில் வாழும் தலைவர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் செய்கைகளோ இதற்கு முற்றிலும் வேறு பட்டதாகவே இருக்கின்றது. நமது மக்களுக்குத் தன்னம்பிக்கை சிறிதும் உண்டாகாதபடி "ஆண்டவன்" என்பவனை நம்புவதலுலும், பிரார்த்தனைகளை நடத்துவதாலுமே காரியங்களை முடிக்கலாமென்னும் மூடத்தனத்தைப் பரவச் செய்கின்றனர். எதையும் ஆராய்ந்து பார்க்கும் பகுத்தறிவை உண்டாக்காமல், மதக்கட்டளை" "கடவுள் மொழி" "பெரியோர் சொல்" "மகாத்மா வாசகம்" என்று சொல்லி அவற்றைச் சரியோ, தப்போ அப்படியே நம்பும்படியான மனப்பான்மையை உண்டாக்குகின்றனர். காலத்திற்குப் பொருந்தாத பழய நடவடிக்கைகளை மாற்றிக் கொள்ளும் எண்ணத்தை உண்டாக்காமல், "பழமையான நடவடிக்கைகள் பரிசுத்தமானவை, அவற்றை மாற்றிக் கொண்டால் நமதுமதத்திற்கு அழிவு வந்து விடும்; நமது புராதன நாகரிகத்திற்குச் சிதைவு வந்து விடும்; ஆகையால் பழமையை விட்டுவிடக் கூடாது' என்ற எண்ணத்தை உறுதியாக நிலைக்கச் செய்யக்கூடிய வேலையையே செய்கின்றனர்.

நாகரீக தேசத்தார்கள், தம்முடைய நாட்டு மக்களை உலக நாகரீகத்திற்த வேண்டிய சிறந்த கல்விகளைக் கற்கும்படி செய்கின்றனர். அதாவது:—கைத்தொழில் சம்பந்தமான கல்வி, வியாபார சம்பந்தமான கல்வி, விவசாயசம்பந்தமான கல்வி, விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான கல்வி, சுகாதார சம்பந்தமான கல்வி, அரசியல் சம்பந்தமான கல்வி முதலிய உலக வாழ்க்கைக்குப் பயன்படத் தகுந்த கல்வியை வளர்க்க முயற்சி செய்கின்றனர்.

ஆனால் நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ, மேற்கூறிய பலவகைப்பட்ட கல்விகளைக் கற்பதற்கு வசதியுள்ள நூல்கள் நிரம்பியபாஷையையேநமதுநாட்டை விட்டு ஒழித்து விட வேண்டுமென்று வேலை செய்கின்றனர். மக்களுக்கு உலக நாகரீகத்தைப் போதிக்காமல், சோம்பேரித்தனத்தையும், மூட நம்பிக்கைகளையும் உண்டாக்கக் கூடிய சில புராணங்கள்மாத்திரம்உள்ளதும், சிறந்த இலக்கியங்கள் கூடஇல்லாததுமாகிய ஹிந்தி பாஷையையே எல்லா மக்களும் படிக்க வேண்டும் என்று பிரசாரம் பண்ணுகின்றனர்.

மற்ற நாட்டுத் தலைவர்கள் எல்லோரும், மக்களுடைய கஷ்டமான உழைப்பைக்குறைத்து, எல்லாத் தொழில்களையும் இயந்திரங்களைக்கொண்டு விருத்தி செ

ஜா முத்தையா
நூலக அறக்கட்டளை

ப்து, நாட்டின் விவசாயம், கைத் தொழில் முதலியவைகளை வளர்க்க முயற்சிக்கின்றனர். இதன் மூலம், நமது நாட்டு விவசாயமும், கைத்தொழிலும், அந்திய நாட்டு விவசாயத்திற்கும், கைத் தொழில்களுக்கும், சளைக்காமல் அவைகளுடன் போட்டி போடவும், வியாபாரத்தின் மூலம் தங்கள் நாட்டில் செல்வத்தைப்பெருக்கவும் முயற்சி செய்து வெற்றி பெறுகின்றனர்.

நமது நாட்டுத் தலைவர்கள் என்பவர்களோ இயந்திரங்களின் மூலம் தொழில்களை விருத்தி செய்யவேண்டும் என்னும் எண்ணமே மக்களிடம் தோன்றாமலிருக்கும்படியும், எல்லாத் தொழில்களையும், பிறர் உதவியில்லாமல் தாமே கையினால் செய்து கொள்ளவேண்டுமென்னும் குறுகிய மனப்பான்மையையும் "தேசியம்" என்னும் பெயரால் உண்டாக்குகின்றனர். இதனால் நாட்டில் விவசாயம், கைத்தொழில்கள் முதலியன வளர்ச்சியடையவொட்டாமலும், எந்த வகையிலும், அந்திய நாடுகளுடன் வியாபாரம் செய்து போட்டி போட முடியாமலும், நாட்டின் செல்வ நிலை வளர முடியாமலும் பாழ்படுத்துகின்றனர்.

மற்ற நாகரீகம் பெற்ற நாடுகளிலோ, தொழிலாளர்கள் முதலாளிகள், ஏழைகள் பணக்காரர்கள், தாழ்ந்த சாதிக்காரர்கள், உயர்ந்த சாதிக்காரர்கள் என்ற வித்தியாசங்கள் ஒழிந்து, எல்லா மக்களும், சமசுதந்தரமும், சம சுகமும் அடைவதற்கான வழிகளையும் முயற்சிகளையும் செய்து கொண்டு வருகின்றனர்.

நமது நாட்டில் உள்ள தலைவர்கள் என்பவர்களோ, வருணச் சிரம தரும மனப்பான்மையைச் சிறிதும் மாற்றிக்கொள்ளாமல், கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றவர்கள் நிரந்தரமாகவே கஷ்டப்பட்டுக்கொண்டே வாழவும், ஏழை மக்களை நசுக்கிப் பிழிந்து அவர்கள் உழைப்பின் பலனை அனுபவித்துக்கொண்டிருப்பவர்கள் எப்பொழுதும் அப்படியே அனுபவித்துக் கொண்டிருக்கவுமே பாதுகாப்புத்தேடிக்கொண்டு வருகின்றனர்.

மற்ற நாட்டினர், தங்கள் நாட்டு வாலிபர்களுக்குச் சிறந்த கல்விப் பயிற்சியும், தொழில் செய்யும் திறமையும், நாட்டிற்கு ஆபத்து வருங்காலத்தில் அதைக் காப்பாற்றுவதற்காக ராணுவப் பயிற்சியும் கொடுத்து அவர்களை சிறந்த வீரப் பிரஜைகளாகச் செய்கின்றனர்.

நமது நாட்டுத்தலைவர்கள் என்பவர்களோ, நமது வாலிபர்களுக்குக் கல்விப்பயிற்சியும், தொழிற் பயிற்சியும் கற்றுக்கொள்ளும்படியான ஊக்கத்தை உண்டாக்காமலும், ராணுவப் பயிற்சியை அடைய வேண்டுமென்னும் எண்ணத்தை மிகுதிப்படுத்தாமலும் வாலிபர்களைக் கோழைகளாக்குகின்றனர். அன்றியும் "சத்தியாக்கிரகம்" "ஆத்ம சக்தி" என்னும் பெயர்களால், நமது வாலிபர்களை அடிபடவும், உதைபடவும், மான ஈனமின்றி உண்டியல் பெட்டிகளைத் தூக்கிக்கொண்டு, தெருத்தெருவாக, வீடு வீடாகப் போய் பிச்சைவாங்கும் பேடிகளாகவும் செய்கின்றனர்.

மற்ற நாட்டுத்தலைவர்கள், மக்களுடைய பகுத்தறிவுக்கும், தன்னம்பிக்கைக்கும், முயற்சிக்கும் தடைகளாயிருந்து, அவர்களைச்சோம்பேரிகளாகவும், மூடர்களாகவும் ஆக்கிவைத்துக்கொண்டு, வெகுகால மாகநிலைபெற்று வரும் மதங்களையும், கடவுள்களையும், வேதங்களையும், ஒழித்து, இவைகள் மக்களின் கவனத்தைக்கவராமல் இருக்கமுயன்று ஜெயமடைகின்றனர்.

நமது நாட்டுத்தலைவர்கள் என்பவர்களோ நமது தேசத்தில் ஒன்றோடு ஒன்று கலகம்புரிந்து கொண்டிருக்கும் மதங்கள், கடவுள்கள், வேதங்கள், இவைகளால் உண்டான நாகரீகங்கள் ஆகியபலவகையான பிரிவுகள் எல்லாம் என்றும் அழியாமல் நிலைத்திருப்பதற்கு வேண்டியபாதுகாப்புகளை உறுதியாகவற்படுத்தி அவைகளை நிலைக்க வைக்கப்பாடுபடுகின்றனர்.

மற்ற நாட்டுத் தலைவர்கள், மனித சமூகத்திற்குப் பயன்படாமல் ஒருசிலரின் சுயநலத்திற்காகப் பயன்பட்டுக் கொண்டிருக்கும், மடங்களின் சொத்துக்களையும், கோயில்களின் செல்வங்களையும், மற்றும்மதஸ்தாபனங்களின் பொருள்களையும், பறிமுதல்செய்கின்றனர். அவற்றைத்தேசத்தின், சுகாதாரம், கல்வி, கைத்தொழில் முதலியவைகளுக்குச் செலவு செய்து தேசத்தை உயர்ந்தநிலைமைக்குக்கொண்டுவருகின்றனர்.

நமதுநாட்டுத் தலைவர்கள்என்பவர்களோ, மடங்களின் சொத்துக்களும், கோயில்களின் சொத்துக்களும், மற்றுமுள்ள தருமஸ்தாபனங்களின் சொத்துக்களும், பரம்பரையாக எந்தக்கூட்டத்தாரின் சுயநலத்திற்குப் பயன்பட்டு வந்ததோ அந்தக் கூட்டத்தாரின்நன்மைக்கே இன்னும்நிலையாகஉபயோகப்பட்டு வரவேண்டுமெனப்பாதுகாப்புத் தேடுகின்றனர். இவைகளை மாற்றுவதுமதவிரோதமென்றும், "கடவுள்" என்பவருக்கு விரோதமான செய்கையென்றும், அவைகளில் தலையிடுதொழுஜனங்களுக்கும், அரசாங்கத்தாருக்கும் உரிமையில்லை யென்றும் கூச்சலிட்டுக்கொண்டு வருகின்றனர். இதன்மூலம்ஏராளமான செல்வத்தை, தேசத்திற்குப் பயனில்லாமல் சில சுயநலக் கூட்டத்தாரே அனுபவித்துவருகின்றனர்.

மற்ற நாட்டில் உள்ளவர்கள், பெண் மக்களும், ஆண் மக்களைப் போலவே சமூகவாழ்விலும் அரசியல் வாழ்விலும், சம சுதந்தரம் அனுபவிக்க உரிமை வழங்கி வருகின்றனர்.

ஆனால் நமது நாட்டிலோ, "பால்ய விவாகத்தைத் தடுப்பது மத விரோதமான காரியம்; விதவைகளைக் கல்யாணஞ் செய்து கொள்ள அனுமதிப்பது மதத்துரோகம்; கோஷா முறையை நீக்குவது; "கடவுள்" கட்டளைக்கு விரோதம் "உயிர்களை உற்பத்தி செய்வதும், அவைகளைக் காப்பாற்றுவதற்கு தான் பெண்களுக்கு இடப்பட்ட கட்டளை" என்று கூறிப் பெண் மக்களுடைய சுதந்தரத்திற்குவிரோதமாக வேலை செய்கின்றனர்.

மற்ற நாடுகளில், ஜனங்களுக்கு லௌகீக ஞானம் உண்டாகும் பொருட்டும், சுகாதாரத் தோடும், பகுத்தறிவோடும்வாழக்கூடிய வழிகளைக் காட்டும்பொருட்டும், சுகாதாரக் காட்சிகள், கல்விக் கண் காட்சிகள், விவசாயக் கண் காட்சிகள், கைத் தொழிற் கண்காட்சிகள், விஞ்ஞான சாஸ்திர சம்பந்தமான கண் காட்சிகள் முதலியவைகளை நடத்தி வருகின்றனர். இவ்வலகயிலேயே ஏராளமான பணங்களைச் செலவிட்டுத் தேச மக்களை அறிவுடைய மக்களாக்குகின்றனர்.

நமது நாட்டிலோ மக்களுடைய அறிவை மழுங்கச் செய்து அடிமைப் படுத்துவதற்காகப் பொய்யாகவும் புனைந்துரைகளாவும் எழுதப்பட்ட புராணங்களை நம்பி, அவற்றில் உள்ள கதைகளையே திருவிழாக்களாக ஏராளமான பொருளைச் செலவு செய்து நடத்தி வருகின்றனர். அல்லாமலும், புராணக் கதைகளையே ஆதாரமாகக் கொண்ட பண்டிகைகளையும்கொண்டாடுவதுடன், தேசியத்தின் போல் இன்னும் புதுப் புதுப் பண்டிகைகளையும் உற்பத்தி செய்து வருகின்றனர். இக்காரியங்களின் மூலம் மக்களை இன்னும் குருட்டு நம்பிக்கையுடையவர்களாகவும், பகுத்தறிவற்றவர்களாகவும் ஆக்கி வருகின்றனர்; மக்களுடைய முயற்சியையும், காலத்தையும் பாடுபட்டுத் தேடிய செல்வங்களையும் பயனற்ற வீணவழியிற்செலவு செய்யும்படி தூண்டிவிடுகின்றனர்

மற்ற நாட்டில் உள்ளவர்கள், சந்திர மண்டலத்திற் குடியேறுவது எப்படி? அதற்கு மேல் உள்ளதாகக் கூறப்படும் உலகங்களைக் கண்டு பிடிப்பது எப்படி? ஆண் பெண் சேர்க்கையில்லாமல் மக்களைப் பிருஷ்டிப்பது எப்படி? ஒவ்வொரு மக்களுந்தனித் தனியே ஆகாய மார்க்கமாகப் பறந்து செல்வது எப்படி?என்று ஆராய்ந்து கொண்டிருக்கின்றார்கள். இதற்காக அந்நாடுகளில் உள்ள அறிஞர்கள் தங்கள்காலத்தையும் அறிவையும் செலவழித்து வெற்றி பெற்றுக் கொண்டும் வருகின்றார்கள்.

ஆனால் நமது நாட்டில் உள்ள பண்டிதர்களும், அரசியல் வாதிகளும், தீண்டாதவர்கள் கோயிலுக்குள் செல்லுவதும், அவர்கள் பொதுச் சாலைகளில் நடப்பதும், பொதுப் பள்ளிக் கூடங்களில் படிப்பதும், பொதுக்கிணறுகளிலும், பொக்குளங்களிலும், தண்ணீரெடுப்பதும், மத விரோதமா? அல்லவா? சாஸ்திர விரோதமா? அல்லவா? கடவுள் கட்டளைகுவிரோதமா? அல்லவா? என்று ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றனர். அன்றியும் ஐந்து தலை முறைக்கு முன் தாயாதியாக இருக்கும் குடும்பத்தில் ஒருவர் வெளியூரில் இறந்து போய் விட்டார் என்ற சங்கதியை இறந்த இரண்டு தினங்கள் கழித்த பின் கேள்விப் பட்டால் அப்பொழுது ஸ்நானம் செய்ய வேண்டுமா? வேண்டாமா? என்ற விஷயத்தைக் கண்டு பிடிக்க நமது நாட்டுப் பண்டிதர்கள் சாஸ்திரங்களைப் புரட்டிக் கொண்டு, ஒருவர்க் கொருவர் அபிப்பிராய வேறுபாடுகளுடன் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்றார்கள்.

நாகரிகம் பெற்ற அவர்கள் தம் நாட்டுக் குழந்தைகள், ஆண் பெண்கள் அனைவருக்கும் கட்டாயக் கல்வி போதிப்பதற்காகச் சட்டங்கள் செய்து, அதற்கேற்றாற் போல் நாடெங்கும் ஏராளமான பள்ளிக் கூடங்களை ஏற்படுத்திக் கல்வியை விருத்தி செய்து வருகின்றார்கள்.

நாமோ கல்விக்கு அதி தேவதை "சரஸ்வதி" என்பவள் என்று வைத்துக் கொண்டு ஒவ்வொரு வருஷமும் பூஜை செய்து வருவதோடு, பதினெட்டாம் பெருக்கு என்னும் ஆடிமாதப் பண்டிகையில் நமது புத்தகங்களை எல்லாம் ஆற்றில் கொண்டு போய் போட்டு அழித்து வருகிறோம்.

இந்த மாதிரியாக எந்த விஷயங்களைப் பார்த்தாலும் அவர்கள் முன்னே சென்று கொண்டிருப்பதும், நாம் பின்னே சென்று கொண்டிருப்பதுமாகவே இருக்கின்றோம். நாகரீகம் பெற்ற நாட்டினராகிய அவர்கள் செய்யும் எந்தக்காரியங்களும் இவ்வுலக வாழ்க்கைக்குப் பயன் தரக்கூடியனவாகவே இருந்து வருகின்றன; இவ்வுலகில் எல்லா மக்களும், அறிவோடும், நாகரிகத்தோடும், சுகத்தோடும், சமத்துவத்தோடும் வாழுவதற்குச் செய்யும் காரியங்களாகவே காணப்படுகின்றன.

ஆனால், நாம் செய்யும் காரியங்களோ, இவ்வுலக வாழ்க்கையில், மற்ற நாகரீக நாட்டினருடன் சம நிலைக்கு வர வழியில்லாமல், புராதன காலத்திலிருந்த அநாகரீக மக்களாகவே இன்னும் இருந்து கொண்டிருக்கவே உபயோகப்படுகின்றன; இன்னுஞ் சிறிது கவனித்துப் பார்த்தால் நமது காரியங்கள், நமக்குள்ள கடவுள், புராண மத நம்பிக்கைகளின் மூலம் "நாம் இறந்த பின் எங்கேயோ போய் எதையோ அடைந்து சுகம் அனுபவிக்கப் போகிறோம்" என்ற எண்ணத்தை மனத்தில் வைத்துக்கொண்டு செய்யப்படும் காரியங்களாகவே இருக்கின்றன.

இன்னும் காலப்போக்கை அறிந்த அவர்கள் செய்யும் காரியங்களைப்பற்றிச் சுருக்கமாகவும், விளக்கவும் கூறவேண்டுமானால், அவர்கள், இனி வரப்போகும் காலம் எப்படியிருக்கும்? அக்காலத்தில் நமது சமூக வாழ்வு, அரசியல் வாழ்வு இவைகள் எப்படியிருக்கும்? அவைகளுக்குத் தகுந்தபடி நம்மை இப்பொழுதே எப்படிச் சரிப்படுத்திக் கொள்ளுவது? என்ற கவலையோடும், எண்ணத்தோடுமே காரியங்களைச் செய்து கொண்டு போகின்றார்கள். இக்காரியங்களுக்குத் தகுந்த வகையில் தங்கள், கொள்கைகளையும், நம்பிக்கைகளையும், பழக்க வழக்கங்களையும் தாராளமாக மாற்றிக் கொண்டு செல்லுகின்றார்கள்.

நாமோ, "ருக்வேத காலத்தில் எப்படியிருந்தோம்? தொல்காப்பிய காலத்தில் எப்படியிருந்தோம்? அந்தப்பழைய நாகரீக நிலைக்குப் போவதே, நாம் செய்ய வேண்டிய தேசப்பணி; மதக்கடமை; என்ற எண்ணத்துடன், அவைகளைப்பற்றி ஆராய்வதும், பிரசாரம் பண்ணுவதுமாகவே இருக்கின்றோம். இந்த வகையாக இரண்டு வேறு பட்டவழிகளில் வேலை செய்து கொண்டு வரும் தேசத்தார்களில் எவர் அறிவு படைத்தவர்கள்? எவர் அறிவில்லாதவர்கள்? எவர் முன்னேற்ற மடையக்கூடியவர்கள்? எவர், தாம் இருக்கும் கீழ் நிலையை விட்டு மாறுமலே இருக்கக் கூடியவர்கள்? என்பதைப் பகுத்தறிவு கொண்டு ஆலோசித்துப் பாருங்கள்.

கால நிலைக்கு ஏற்றவாறு தங்களைச் சரிப்படுத்திக் கொண்டு போகின்ற தேசத்தார் முன்னேற்றமடைவார்களா? அல்லது "எது எப்படியானாலும், எமது நாட்டுப் பழைய நாகரிகத்தை விடமாட்டோம்" என்று மூட்டுப் பிடிவாதஞ் செய்து கொண்டிருக்கும் தேசத்தார் முன்னேற்றமடைவார்களா? என்பதையும் யோசித்துப் பாருங்கள்.

இன்று நமது நாட்டில் நடைபெறும் "தேசிய இயக்கம்" என்பவைகள் நம்முடைய பழைய நாகரீகத்தை நிலை நிறுத்த வேண்டும் என்ற எண்ணத்துடன் தானே பாடுபடுகின்றன? "தேசிய இயக்கத்தை"ச் சார்ந்து நின்று வேலை செய்யும் மற்றவர்களும் இக்கொள்கைக்குத்தானே ஆதரவளித்து வருகிறார்கள்? திரு. காந்தியுள்பட எல்லாத் தேசியத்தலைவர்களும், வைதிகப் பாழும் கோட்டைக்குள் உட்கார்ந்து கொண்டு தானே "ராஜ்ய சுதந்திரத்திற்குப் போராடுகின்றனர்? தற்சமயத்தில் பரிபூரண ராஜ்ய சுதந்திரம் கிடைத்துவிட்டாலும், அதைக்கொண்டு நமது பழைய நாகரீகத்தை நிலை நிறுத்தத்தானே முயற்சி செய்யப்படும்? "பழைய நாகரீகத்தைக் கொண்டுதான் நமது நாட்டைச் சமாதானமாக வைத்திருக்க வேண்டும்" என்ற கொள்கையைக்குரங்குப் பிடியாகப்பிடித்துக்கொண்டிருப்பவர்கள் கையில் தானே தற்கால நிலையில் ராஜீய அதிகாரம் போய்ச் சேரும்?

இத்தகைய வைதிக மனப்பான்மை யுடையவர்கள் கையில் தேசம் அகப்பட்டு ஏழைமக்கள், கஷ்டப்படுகிறவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள், முதலியவர்கள் அவர்களுடைய பரிதாபகரமான நிலையிலேயே இருப்பது சரியா? அல்லது இவர்களுக்கு அநுகூலஞ் செய்யாவிட்டாலும், இவர்கள் முன்னேற்றத்திற்குத் தடைசெய்யாமல் இருக்கின்ற கூட்டத்தார் கையில் அதிகாரம் இருப்பதனால் இப்பொழுது ஒன்றும் முழுகிப் போய்விடவில்லை என்பது சரியா? என்பவைகளில் எது சரியென்பதை நன்றாய் யோசனை செய்து பாருங்கள்.

அதன் பிறகு, நாம், தேசியத்தின் போக்கைக் கண்டிப்பதைப் பற்றியும், திரு. காந்தி போன்ற வைதிகர்களின் போக்கைக் கண்டிப்பதைப்பற்றியும் குறை கூறலாம். எதையும் பகுத்தறிவோடு ஆராய்ந்து பார்க்காமல், "மதம்," "கடவுள்," "வேதம்" இவைகளின்மேல் பாமர மக்கள் வைத்திருக்கும் மூட நம்பிக்கையைப்போலவே, "காங்கிரஸ்," "காந்தி," "தேசியம்" என்ற பெயர்களின் மேலும், குருட்டு அபிமானமும், மூட நம்பிக்கையும் வைத்துக் கொண்டு சுயமரியாதை இயக்கக் கொள்கைகளைக் குறை கூறுவதில் எதாவது பொருள் உண்டா என்று கேட்கிறோம். ஆகையால், குருட்டு அபிமானமில்லாமல், மூட நம்பிக்கையில்லாமல், ஆத்திரமில்லாமல், பொறுமையோடு, பகுத்தறிவோடு நினைத்துப்பாருங்கள்! அப்பொழுது நாங்கள் கூறுவதில் உள்ள உண்மை விளங்காமற் போகாது என்றுதான் சொல்லுகிறோம்.

அறிவிப்பு.

சென்னை தோழர், ம. சிங்காரவேலு பி. ஏ., பி. எல்., அவர்களால்தொடர்ச்சியாகஎழுதிவந்த "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற கட்டுரை இவ்வாரத்துடன் முடிவுபெறுகிறது. அடுத்தவாரம் "பொதுவுடமையும் குழந்தைகளும்" என்ற கட்டுரையும், பின் "நாம் செய்யவேண்டிய வேலை" என்ற கட்டுரைகளும்தொடர்ச்சியாக வெளிவரும்.

பிரிண்டர் & பப்பிளிஷர்.

வரவேற்பு.

லண்டன் வட்ட மேஜை மகாநாட்டிற்குச் சென்றிருந்த ராவ் பகதூர். ஆர். சீனிவாசன் அவர்கள் 27—12—31ந் தேதி மாலை 3 மணிக்கு பம்பாய் எக்ஸ் பிரஸில் சென்னை வந்து சேருவார். அன்று ஆதிதிராவிட மக்களும், அவர்களுடைய நண்பர்களும் வரவேற்பார்களென ஒரு நிருபர் எழுதுகிறார்.

எதிர்பாருங்கள்.

நமது பத்திரிகையில் சென்னை தோழர், ம. சிங்காரவேலு பி. ஏ. பி. எல். அவர்களால் எழுதிவந்த "கடவுளும் பிரபஞ்சமும்" என்ற கட்டுரைகளை புத்தக ரூபமாக அச்சியற்ற ஏற்பாடுகள் நடந்து வருகின்றது. கூடிய சீக்கிரம் புத்தகம்வெளிவரும் எதிர்பாருங்கள்.

பிரிண்டர் & பப்பிளிஷர்.

விருந்துகள்.

ஈரோடு முனிசிபாலிட்டிக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முனிசிபல் தலைவர் ஜனப். கே. எ. ஷேக்தாவுத் அவர்களுக்கும், உபதலைவர் திரு. ஈ. வி. நஞ்சப்ப செட்டியாரவர்களுக்கும் 22-12-31 தேதி ஈரோடு மகாஜன ஹைஸ்கூல் சரஸ்வதி ஹாலில் முனிசிபல் கவுன்சிலர்களான திரு. ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கர், திருமதி எஸ். ஆர். கண்ணம்மாள் ஆகியவர்களால் ஒரு தேனீர் விருந்து நடத்தி வைக்கப்பட்டது.

அவ்விருந்திற்கு உள்ளூர்ப் பிரபலஸ்தர்களும், முனிசிபல் கவுன்சிலர்களும் விஜயம் செய்திருந்தார்கள். பின் ஒரு பாராட்டுக் கூட்டம் ஈரோடு தாலூகா போர்டு தலைவரும், பழைய கோட்டை பட்டக்காரருமான ராவ்பகதூர். நல்லதம்பிச்செட்டியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தலைவர், உபத்தலைவர்களைப் பாராட்டிப் பலர் பேசியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

ஈரோடு கிராம பஞ்சாயத்து கமிட்டி மெம்பர்களால் தலைவர், உபத் தலைவருக்கு 23-12-31 தேதி இரவு இவ்வூர் பீப்பிள்ஸ் பார்க்கில் ஒரு விருந்து நடைபெற்றது. அவ்விருந்திற்கு டிப்டி கலெக்டர் கான்பகதூர், மஹமட் ஜின்டாசாகிப் அவர்கள் தலைமை வகித்தார். அவ்விருந்திற்குப் பல பிரபலஸ்தர்களும், கவுன்சிலர்களும் விஜயம் செய்திருந்தார்கள். தலைவர், உபத்தலைவரை புகழ்ந்து பேசியபின் கூட்டம் கலைந்தது.

இன்னும் சில இடங்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதென்றும் நடைபெறுமெனத் தெரிகிறதென்றும் ஒரு நிருபர் எழுதுகிறார்.

திரு. காளியப்பன்.

நாகை திரு. என். பி. காளியப்பன் அவர்கள் அடுத்த மாதத்தில் தன் சொந்த ஜோலியாக மலாயாசெல்லுகிறார் எனஒரு நிருபர் எழுதுகிறார்.

சுயமரியாதை வாலிபர் சங்கம். நிகாயமுத்தார்.

பார்ப்பனரல்லாதாரியக்க மாபெருந்தலைவர் பனகால் அரசரவர்கள் காலஞ்சென்ற நாளை முன்னிட்டு ஷெ சங்கத்தின் விசேஷக்கூட்டமொன்று 16-12-31 தேதி புதனன்று மாலை 7-மணிக்கு சங்கத்தலைவர் தோழர், எ. ஆர். சிவானந்தம் அவர்கள் தலைமையில் கூடியது. அதுகாலை அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.

1. பார்ப்பனரல்லாதாரியக்க மாபெருந்தலைவர் காலஞ் சென்ற பனகால் அவர்கள் பொதுவாக இந்திய நாட்டிற்கும் சிறப்பாகப்பார்ப்பனரல்லாத மக்களுக்கும் புரிந்த சேவையை இச்சங்கம் பெரிதும் பாராட்டுகின்றது.

2. நமதியக்கத்தோன்றலும், தலைவர்களுமானதோழர்கள், ஈ. வெ. இராமசாமி, எல். இராமகாதன எம். ஏ., பி. எல்., அவர்கள் ஐரோப்பாசுற்றுப் பிரயாணம் இனிது முடித்து தாய்நாடு திரும்பவேண்டு மென்று இக்கூட்டம் விரும்புகின்றது.

3. சுயமரியாதையியக்கத் தலைவர்களில் ஒருவரும் மூன்றாவது மாகாண சுயமரியாதை மகாநாட்டு அமைச்சருமான தோழர் வி. வி. இராமசாமிய வர்கள் விருதுநகர் நகராக்ஷிக்கழகத் தலைவராகவும், தோழர் எஃ. எல். பி. எல். பெரியசாமியவர்கள் உபத்தலைவராகவும் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதை இக்கூட்டம் பாராட்டுகின்றது.

ஷெ சங்கத்தின் வாராந்திரக் கூட்டமொன்று 20-12-31 நாள் ஞாயிறன்று சங்கத்தலைவர் தோழர் எ. ஆர். சிவானந்தம் அவர்கள்தலைமையில் கூடியது. அதுகாலை தலைவரவர்கள் முகவுரையாக பல்டிகைகளைப்பற்றி சிறிது நேரம் பேசியபின்தோழர்கள், ஆர். நிலன், பி. ரங்கசாமி, என். கே. கஸ்தூரி ஆகியவர்கள் "புராணக்குப்பை" அல்லது "புராணமூடம" என்னும் பொருள்பற்றிப் பேசினர்கள். பின்னர் அடியிற்கண்ட தீர்மானங்கள்ஏக மனதாய் நிறைவேற்றப்பட்டன.

நமதியக்கத் தோல் நல்களும், தலைவர்களுமான தோழர்கள், ஈ. வி. இராமசாமி, எல் ராமலிங்கம் அவர்கள்இயக்கவளர்ச்சியை முன்னிட்டு ஐரோப்பா சுற்றுப்பிரயாணம் சென்றிருப்பதால் அவர்கள் திரும்பிவரும்வரை இயக்க அபிவிருத்திக்கான தூரையில்குன்று ஊக்கத்தோடுழைக்கத்துழைக்க வேண்டுமென்று தோழர்கள், ஆர். கே. ஷண்முகம் பி. ஏ. பி. எல்., எம். எல் ஏ., ஊ. பா. ஆ. சொன்திரபாண்டியம் எம். எல். சி., வி. வி. இராமசாமி. விருதுநகர் நகராக்ஷிக்கழகத்தலைவர், எல். முருகப்பா, சண்டமாருதம், ஆசிரியர் ஆகியவர்களை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

நமது சங்கஅங்கத்தினரும், சுயமரியாதை வீரருமான தோழர் நஞ்சையா அவர்கள் (அருந்தியர்) ஆதித்திரா

(9ம் பக்கத் தொடர்ச்சி)

சிலாசாசனங்கள் இவைகளைவெளிப்படுத்துகின்றன.

இங்ஙனம் நடந்துவரமே ஒரு வியாதி ஏற்பட்டதின் காரணம் சமணப்பூசாரிகளும்மற்றும்சிலரும் இறந்து போனதாகவும், பூசாரிவீட்டுப்பெண்கள் ஓடிவிட்டதாகவும், உடன் பூசாரிவீட்டு மடங்களை நம்பூதிரிப் பார்ப்பனர்களிடம் ஒப்படைத்ததாகவும், சமணக்கோயிலை இந்துக்கோயிலாக மாற்றினதாகவும், அப்பொழுது பார்ப்பனர்களும், மற்ற ஜாதியினரும் அக்கோயிலைச்சுற்றிக் குடியேறினதாகவும் தெரியவருகின்றது. கடைசியாக திருவிதாங்கூர் அரசாங்கத்தார் ஆதிக்கத்திலும் இந்த 'இந்து' கோயிலும் வந்து சேர்ந்த இப்பொழுதும் அவர்களுடைய ஆதிக்கத்தில் 'இந்து'க் கோயிலாகவே இருந்து வருகின்றது. இவ்வாறு உயர்ந்த ஜாதி இந்துக்களுக்குத் தான் அந்தக்கோயிலில் பிரவேசனம் உண்டு. 'நாகராஜா' என் பதாகவும், 'நாகர் அம்மன்' என் பதாகவும் அந்த 'இந்துக்கள்' சமணவிக்கிரகங்களை வணங்கி மேஷட்சமும் பெற்றுவருகிறார்கள்.

இதோடு நின்றுவிடவில்லை. 1918-வது வருஷம் யுத்தம் முடிந்தவுடனேசமாதானத்தை (Armshce) கொண்டாடுவதற்காக யானைமேல் சக்கரவர்த்தியின் உருவப்படத்தை வைத்து ஊர் வலம் வரும்போது ஜில்லா மாஜிஸ்டிரேட்டு முதலிய உத்தியோகஸ்தர்களும், மற்ற பிரமுகர்களும் சேர்ந்து ஊர்வலம நடத்திக்கொண்டு வரும்போது முன் காலத்தில் சாதிபேதமில்லாத சமணர்களால் குடியிருக்கப்பட்டு இப்பொழுது பார்ப்பனர்கள் குடிகொண்டிருக்கும் வீதிகள வழியாக இந்த ஊர்வலம் வரும்போது பார்ப்பனர்கள் தடைசெய்தார்கள். ஊர்வலம்நடைபெறவுமில்லை. டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் முதலிய உத்தியோகஸ்தர்களும் ஊர்வலமும், யானை முதலியவைகளும்அவரவர்கள்வீடுகள்போய்ச் சேர்ந்தன. இந்த தடைக்குக் காரணம் என்னவெனில் நாடார் குலத்தைச்சேர்ந்த கிறிஸ்துவர்கள் பெரிய பட்டங்கள் பெற்று உயர்ந்த பதவிகளில் இருந்தபோதிலும் தாழ்த்தப்பட்டவர்கள என எண்ணி அவர்களும் ஊர்வலத்தில் வருவதைக்கண்டு பார்ப்பனர்கள் தடைசெய்ததாகும்.

இப்பொழுது இந்தக்கோயிலின் ஆருகில்கூடி பொதுமக்கள் யாவரும் போய்வருகின்றார்கள் அவர்கள் உபயோகத்திற்காக முனிசிபாலிட்டியில் இருந்து விளக்குகள் நாட்டப்பட்டிருக்கின்றன. ஆகையினால் பொதுரஸ்தாவென்பது வெளிப்படை. இதை நில்லாமல் செய்வதற்காக இந்தக்கோயிலை நடத்திவரும் கவர்ன்மெண்ட் அதிகாரிகள் இந்தக்கள் பெருவாரியாக பார்ப்பனர்கள் இந்த முனிசிபாலிடி விளக்குகளை எடுத்துவிடும்படியாக வேலை செய்கிறார்கள். ஒருக்கால் வெற்றிபெறவும்கூடும்.

இந்நிலையில் நாம் கவனிக்கவேண்டியது என்னவென்றால் 'சமணக்கோயில' இந்துக்கள் ஆலயமாக மாற்றி சமணர்கள் வசித்து வந்த ரஸ்தாக்களை பார்ப்பனர்கள் உயர்ந்த சாதிக்காரர்கள் வசிக்கும் கிராமவீதிகளெனவும் மாற்றி, தாழ்த்தப்பட்டவர்கள் இந்துக்களானதும்சரி, கிறிஸ்துவர்களானதும், (மகமதியராகமத மாறிவிட்டால் தடையொன்றுமில்லை) இந்தக்கோயிலுக்குள்ளும், அதைச்சுற்றின வீதிவழியாகவும்கூட போகவிடாமலும் தடைசெய்யப்பட்டு வருகிறார்கள்.

இவ்விதம் வேண்டுமென்றால் இரண்டு அல்லது மூன்று நாற்றாண்டுகளாக நடந்துவருவதாகவைத்துக்கொள்ளலாம். ஆனபோதிலும் இப்பொழுது நடப்பில் இருக்கும் பழக்க வழக்கத்தினால் மாத்திரம் இந்தக்கோயில் 'இந்துக்கோயில்' என்றோ, இந்தப் பூசாரிமடம் இந்துக்கள் மடமென்றோ, இந்த வீதிகள் பார்ப்பனர்கள் வீதியென்றோ ஏற்பட நியாயமில்லை. சரித்திர ஆராய்ச்சியிலும் இதுவெளிவருகின்றது. ஆனால் கோர்ட்டில் வழக்கு ஏற்பட்டும்போது சரித்திர ஆராய்ச்சிக்கு அங்கு இடமில்லை. பழக்க வழக்கத்தையே பார்க்கின்றார்கள். இது நிற்க, மேற்செல்லுவோம்.

ஆகையினால் ஒரு பொதுக்கோயில் விஷயமாக ஒன்றும் தெளிவாகத் தெரியாமல் இருக்கும்போது ஸ்தாபித்தவர்யார்? எக்காலத்தில் ஸ்தாபிக்கப்பட்டது? அவரது ஜாதி, மதம், வருணம் என்ன? தமது எண்ணத்தை அக்காலத்துதானே வெளியிட்டிருக்கிறார? அவர் அரசர, அல்லது குடியா? அரசாயின் பொதுஜனங்களின் பணத்தைச்செலவிட்டாரா? குடியாயின் வரார் பணத்தைச் செலவிட்டார? இதைப்பற்றியெல்லாம் ஒன்றேனும் தெரியாமல் இருக்கும்போதுமே அந்தக்கோயிலின் 'பழக்கவழக்கத்தைக்' குறித்து ஆராய்ச்சி செய்வதும், தீர்ப்புச் செய்வதும் அசட்டுத்தனமானதாகும்; இதுதான் சட்டமுறையும் ஆகும். எனெனின் முன் ஒருகாலத்தில் ஏற்பட்ட ஆசாரத்தை அல்லது முறையை அறிவதற்கு பிற்காலத்து நடப்பு ஒரு பொழுதும் நுசுவாக சட்டத்தின்படி கைக்கொள்ளக்கூடாது. இதுதான் சட்டத்தின் அடிப்படையான கொள்கையாகும்.

ஆகையினால் எதேனும் ஒரு பொதுக்கோயிலின் ஸ்தாபனையைப்பற்றி ஒன்றும் தெரியாமல் இருக்கும் வரையிலும் அதன் 'பழக்க வழக்கத்தையோ அல்லது நடப்பையோ அல்லது ஆசாரத்தையோ' நாம் அறியவேண்டிய அவசியம் இல்லை.

இது இவ்வாறு இருக்க இன்றும் படிப்பாளிகளிடத்திலும் வக்கீல்கள், வழக்கறிஞர்கள், நீதிபதிகள், பண்டிதர்கள், என்ற அறிவுமுதிர்ந்தவர்களிடத்திலும், 'பழக்க வழக்கம்' என்ற மூடநம்பிக்கையானது குடிகொண்டிருப்பானேன்? அங்ஙனம் ஏற்பட்டிருப்பது அவர்களுக்குச் சரித்திர விஷயமாகவும் சட்டசம்பந்தமாகவும், ஆராய்ச்சி செய்ய மனமில்லாதகினாலோ, அவ்வாறு செய்ய சக்தியில்லாதகினாலோ, அல்லது சாதிசமயச்செருக்கினால் ஏற்பட்ட கெட்ட எண்ணத்தினாலேனே, இருக்கவேண்டும்.

ஆகையினால் மிகப்பணிவுடனும், அதுபோன்ற தைரியத்துடனும் நாம்கூறுவது ஏன்னவெனில் பண்டைக்காலத்து ஒவ்வொரு பொதுக்கோயிலிலும் ஒவ்வொரு இந்துவுக்கும் அவர்யாராயிருப்பினும் சரி, போவதற்கும், வணங்குவதற்கும், பாத்தியதையுண்டு. நமது இத்தகைய கொள்கையானது சரித்திர, சட்டசம்பந்த ஆராய்ச்சியையும், மதக்கோட்பாடுகளையும், ஒட்டினதேயாகும். இத்தகைய ஆராய்ச்சியினால் அறியக்கிடப்பது என்னவென்றால், ஒரு மகம்மதியர், ஒருகிறிஸ்துவர், ஆரிய சமாஜத்தைச்சேர்ந்தவர், ஒரு சிக்கினர், பௌத்த மதத்தினர், சமணர் எம்மதத்தாராயினும் சரி; எவ்வருணத்தாராயினும்

விடத்தொகுதியில் போட்டியின்றி கோவை நகராக்ஷிக்கழக அங்கத்தினராகத்தேர்ந் தெடுக்கப்பட்டிருப்பதை இச்சங்கம் பாராட்டுகிற தென ஷெ சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

ஆர்ச்சனையும் அந்தணனும் பஞ்சாங்கப்பார்ப்பானும் சம்பாஷணை.

வந்ததே மோசம்.

(உற்றுக்கேட்டவன்)

பஞ்சாங்கப்பார்ப்பனன்:—டே! விசேஷம். ஊருமொதலு சுப்பு! எங்கு செல்கிறாய்? இங்குவாயே எதாவது இராக்கி உண்டோ. தர்பையோ டுபோவதைப்பார்த்தாலே தெரி கிறது. என்ன சங்கதி? எங்கே?

அர்ச்சனை அந்தணன்:— ஊர் மொதலு. கீர்மொதலுன்னுஇனி மேல் பேசாதே; எனக்குகெட்ட ன்னிச்சல் வந்துவிடும். நீவண்டி மணக்குறுயோ, நானுமது ஊர் மொதலு; நீயோ உலகமொது லாயிற்றே. எங்கு பார்த்தாலும் பஞ்சாங்கத்துடன் நீதான் நிற் கிறாய்; உனக்கென்ன குறைச்சல் அப்படிகொள்ளையடித்துத்தின்று தான் உன் பெயருக்கு முன் 'குண்டு' என்ற டைட்டில் இடை த்திருக்கிறது. அதனால்தான் உ ன்னை குண்டுக்குப்பு என்றுஅழை க்கின்றார்கள்.

ப-பா:—எதற்கு வீண் சண் டை? எங்கு செல்கிறாய்? என்ன சரி; எச்சாதியினாயினும், சரி; எவ்விடத்தினர் ஆயினும் சரி; அவ்விதஎண்ணங்கொண் டால் எக்கோயிலுக்குள்ளும் பிர வேசிக்கவும், வணங்கவும் அதி காரமுண்டு. ஏனெனில், பண் டைக்காலத்து இக்கோயில்களை ஸ்தாபித்த பெரியார்களின் பா த்த நோக்கம் இதுவேயாகும். இக்காலத்து நயவஞ்சகிகள், குறு கிய மனத்தினர், தற்கொலையா ளிகள் அல்ல. அக்காலத்துக் கோயில்களை ஸ்தாபித்தவர்கள்.

(தொடரும்)

அ-அ:—ஒன்றுமில்லை. நே ற்று (அதோ தெரியுதே) அந் த ஆந்தச்சுருத்தினின் தகப்பனு க்குத்திதியம் அங்குசெல்கிறேன்

ப-பா:—ஆஹா நானும் அங் குவரலாமோ? தட்சிணை கிட்சி ணைகொடுப்பானோ? அந்த இடம் தாராள கைகள்தானே? எத்தனை மணிக்குப்போகவேண்டும்?

அ-அ:—ஹஹா! அவன் பெ ரும்பணக்காரன். கைவீச்சு ஜாஸ் திதான், வா நீயும். 11 மணிக் குத்தான் போகவேண்டும்.

ப-பா:—அதற்கா இந்நேரத் தில் புறப்பட்டுவிட்டாய்? நல்ல வேலை செய்தனை. இன்னும் மணி எட்டே அடிக்கவில்லை.

அ-அ:—அப்படியா நான் அ திக நேரம் தூங்கிவிட்டேன் என்றல்லவோ நினைத்து முகம் மாத்திரம் அலம்பிக்கொண்டு ஓடிவந்தேன். அப்படியானால் இன்னும் டைம் இருக்கிறது; கிணற்றிற்குச்சென்று நீராடி வருவோம் வா?

ப-பா:—சரி போகலாம்.

அ-அ:—டே, சுப்பு! ஒரு செ ய்தி கேட்டாயா, பெரிய மோ சம். சங்கதி பெரிதாய்விட்டது.

ப-பா:—என்ன! உனக்கேஅது தாங்கவில்லை போலும்அப்படியா ப்பட்ட விசேஷ சங்கதி என்ன?

அ-அ:- இது தெரியாதா? இந் தனை நாள் ஈரோட்டில் "குடி அரசு" நடத்திவரும் இராமசாமி நாயக்கர் தான் நம் தலையில் கல் லைப்போடுவார் என்று நாம் நினை த்தோம் எப்படி நமக்குத் தீங்கு நேரிட்டாலும் அவரை அடக்க நம்ம பெரியவாள் இருக்கா. இப் பொழுதுதே இன்னென்ன புதுப் பட்டிருக்கு.

ப-பா:-சீக்கிரம் தொல்லித்தொ லே. அடிக்கடி முழுங்குறியே.

அ-அ:- சாங்கிரசிலிருந்து கொ ண்டு இதாள்வரை நல்ல பெயர் எடுத்துக்கொண்டு இருந்த இரா ஜகோபாலாச்சாரி நேற்று சென் னையில் அதிகப்பிரசங்கித்தனமாய் பேசினாரே என்ன சொல்வது.

ப-பா:- என்ன அதிகப் பிரசங் கித்தனம்?

அ-அ:- எல்லா ஜாதியும் ஒண் ணுப்போலவேணும் என்று பேசி யிருக்கிறான்.

ப-பா:- அப்படியா சங்கதி. வந்ததே மோசம் காங்கிரசில் சேர் ந்துகொண்டு கண்டவர்கள் எல் லாம் தொடும் பண்டத்தை உண் டுகொண்டும், கிறைக்குச் சென் று நம் ஜாதி வழக்கத்தைக் கவ னியாது சுத்திரன் செய்யும் பதார்த்தத்தைத் தின்று ஆஷ் டானத்தைக் கெடுத்த இந்தப் பேர்வழியை நம் ஜாதிப் பார்ப் பனர் வெளியில் சொல்லக்கூ டாது; சொன்னால் சூத்திரர்களு க்கு எகத்தாளமாய் விடும், ஜாதி யை விட்டுத் தள்ளாமல் இந்த சமயத்தை மூடிவைத்துக்கொ ண்டு மரியாதையைப் காப்பாற்றி வைத்தல் பலன் அல்லவா இது.

அ-அ:- என்னமோ கிடக்கி றார். நம்குலத்திற்கும் ஒரு மனி தன் பார்ப்பனரல்லாத சூத்திர னுக்கு மேல் காங்கிரசிலிருக்கி றான் என்ற மதிப்புக்கொடுத்தது பெரும் தப்பிதமாய் விட்டதே.

ப-பா:- சங்கதியை வெட்ட வெளிச்சமாக்கி மான மரியாதை யைக் கெடுத்து வீட்டைவிட்டு வெளியில் வராமல் செய்யலாமா? நாம் நினைத்தால் தான் நிலைக்கு மே. என்ன? யோசிக்கிறாய்.

அ-அ:- இரு. அவசரப்படா தே. நம் கூட்டத்தை யெல்லாம் நம் ஆத்துக்கு வரச்சொல்லி அவ ர்களுக்கு இதை எடுத்துச்சொ ல்லி அவர்களது அபிப்பிராயத் தின் பிரகாரம் நடக்கலாம். அவ சரப்படக்கூடாது.

பிறகு இவ்விருவரும் குளித்து க்கொண்டு 'திதி' நடக்கும் சல் லாப உல்லாச சிருஷ்ண தேவ ராயப்ப சுஞ்சாமூர்த்தி கோரை மூக்கு கோனர் வீட்டிற்கு எகி னர்.

(தொடரும்)

மகாநாடுகள்.

அகில மலையா தமிழர் இரண் டாம் மகாநாடும், வாலிபர் மகா நாடும் 1932 ஜனவரி மாதம 2, 3 தேதிகளில் பினாங்கில் நடை பெறும். முறையேமலாக்கா திரு. த. சு. பெருமாள் அவர்கள் தமி ழர் மகாநாட்டுத் தலைவராகவும், கோலகுஞ்சார், திரு. வி. கே. நாக ரத்தினம் அவர்கள் வாலிபர் மகாநாட்டுத்தலைவராகவும், சிங் கப்பூர் முன்னேற்றம் ஆசிரியர் திரு. கோ. சாரங்கபாணி அவர் கள் தமிழர் மகாநாட்டு வரவேற் புத்தலைவராகவும் தேர்ந்தெடுக் கப்பட்டிருக்கிறதென மலே மகா நாட்டுக்காரியதரிசி எழுதுகிறார்.

மலையாளம் சில்க் அங்கவஸ்திரம்.

தங்யவெள்ளைஉடுத்திக்கானபட்டு னசரி துவைத்தும்உபயோகிக்கலாம் சலவையும் செய்யலாம். வருஷக் கணக்கில் உபயோகிக்கக்கூடியது. கம்பி அல்லது குண்டுஞ்சுகையுள் ளது.

	ரூ. அ.
2½ வீதி 5 முழம் பட்டு 1க்கு	1-10
டை டஜன் 1க்கு	17-0
2¼ 5 முழம் பட்டு 1க்கு	1-6
டை டஜன் 1க்கு	15-0
3 வீதி 8 முழம் வேஷ்டி 1க்கு	3-8

S. K. R. வீவிங் பாக்டரி:
கோட்டார், திருவிதாங்கூர், I. S.

இல்வாழ்க்கையில் இன்பம் அனுபவிக்க விரும்பினால் நமது

தம்பதிசுகம்

மனோன்மணி லேகியத்தில்
சேர்த்துச்சாப்பிடுங்கள்.

தாது கூனத்தை நிவர்த்திக்கும் தாது விர்த்தியடையும். நீர்த்துப்போன இந்திரியத்தை இறுக்கி மணியாக்கி விடும். அடங்காத ஆண்மை, வீரியம் உண்டாகும். சோம்பல், அசதி, சோர்வு நீங்கும். தேக பலம், தேஜஸ், அறிவு வளர்ச்சி, மேலும் க்ஷேமம் உண்டாகும். 30 வேளை தம்ப பஸ்பம் ரூ. 7. 30 வேளை லேகியம் ரூ. 3. வி. பி. செலவு வேறு. வெளிநாட்டார் அட்டருடன் ரூ. 5 முன்பணமனுப்பவும்.

குறிப்பு:— சம்மிடம் சகல வியாதிகளுக்கும் வேண்டிய உயர்ந்த மருந்துகள் கிடைக்கும். வியாதி விபரம் எழுதவும்.

S. ராஜகோபால் பிள்ளை, தண்டபாணி வைத்தியசாலை, பழநி. (S. I.)

சாதி வேற்றுமையின் தீமை.

(செல்வி. சிவகாமி சிதம்பரனார்)

மக்கள் ஒற்றுமைக்குப் பெரும் தடையாகவும், தேச விடுதலைக்கு ஓர் மூட்டுக் கட்டையாக விருப்பது சாதி வித்தியாசமே; சாதி என்னும் வேற்றுமையால் மக்கள் பெரிதும் பிற்போக்கடைந்திருக்கின்றார்கள். இந்தியாவில் உள்ள ஜாதிகளுக்கும், மதங்களுக்கும் கணக்கில்லை; உயர் சாதி என்று கருதிக் கொண்டிருப்பவர்கள் அளவுக்கு மீறிய திமிர்கொண்டவர்களாகவும், மற்ற மக்களும் மனிதர்கள் தான் என்ற எண்ணம் சிறிதும் இல்லாதவர்களாகவும், இரக்கமற்ற மன முடையவர்களாகவும் காணப்படுகிறார்கள். தாழ்ந்த சாதி என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள், உயர்ந்த சாதி என்ற மக்களுக்குப் பெரிதும் அஞ்சி, பயந்து நடுங்கி வாழ்கிறார்கள். ஆண்மக்களை விட பெண்மக்களிடம் சாதித்திமிர் அதிக ஆடம்பரமாய் இருந்து வருகிறது. ஒவ்வொரு சாதிப் பிரிவான மக்களும் தங்களை விட உயர்ந்த சாதி என்ற மக்களுக்குப் பயந்து அடங்கியும், தங்களை விட தாழ்ந்த சாதி என்ற மக்களை அதிகாரத்தால் அடக்கியும், இழிவு படுத்தியும் நடத்துகிறார்கள்.

நூற்றுக் கணக்கான சாதிப் பிரிவுகளில் எல்லா சாதிகளுக்கும் உயர்ந்தது பார்ப்பனர்சாதியாம்! எல்லாசாதிகளுக்கும்தாழ்ந்ததுபறையர்சாதியாம்! சாதி என்ற இந்த இரண்டெழுத்து சொற்களால் மக்கள் அடையும் துன்பங்கள் எத்தனை? உயர் சாதி என்று சொல்லிக் கொள்ளும் ஈவு, இரக்க மற்ற பார்ப்பன மக்கள் மற்ற மக்களை அடக்கி தங்களிஷ்டத்திற்கு ஆட்டி, ஏமாற்றி வயிறு வளர்த்து வருகிறார்கள், தாழ்ந்த சாதி என்று சொல்லப் பட்ட ஆதிதிராவிட மக்கள் சாதி என்னுங் கொடுமையால் எல்லா மக்களுக்கும் அடங்கி பயந்து அவர்கள் படும்பாடும், அடையும் துயரமும்என் னெண்றெழுதுவது. இராப்பகலாய்ப் பாடுபடுகிறார்கள் வயிறார ஆகாரம் கிடையாது. உடுக்க உடை கிடையாது. அவர்கள் செய்யும் பயிரிடும் வேலை தங்களுக்கு எவ்வளவு அவசியமானது என்பதை அறியாமல் மிராசுதாரர்கள் உழைப்புக்குத் தக்க கூலி கொடாமல் மிருகங்களிலும் கேவலமாய் நடத்தி உயிரை வாங்குகிறார்கள். ஒரு ஆதிதிராவிடருக்கு 30, 40 ரூபா செலவு செய்து கலியாணம் செய்து விட்டால் அவரும், அவர்மனைவியும், அவர்களுக்குப்பிறக்கும்பிள்ளைகளும் ஆயிசு உள்ள வரையில் இவர்களிடமே உழைக்க வேண்டும். இவர்களுக்கு இரவில் கூட ஓய்வு கிடையாது, வீட்டிற்குக் காவல் படுக்க வேண்டும். எப்போது கூப்பிட்டாலும் எனென்று கேட்க வேண்டும். இரவில் அவர்கள் மலஜலம் கழிக்கச் செல்லும் இடத்திற்கு விளக்கு கொண்டு செல்ல வேண்டும். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் 6, 7 வயதாலும் மாடு மேய்க்க வேண்டும். இவர்களுக்குப் பண்ணைப் பறையர் என்று பெயர்; நம் நாட்டுச் சட்டப் படி மிராசுதாரர்கள் என்ன பாடுபட்டுத் தான் வாழ்ந்திருக்கிறார்கள் படித்திலுமும் பண்ணைப் பறையர் மத்தியில் சோம்பேரிகளாகிய சில என்பவர்கள் தங்கள் ஆயுள் முழுவ மக்கள் சாதிகளை உண்டாக்கி அதில் தம் அவர்களிடமே தான் உழைக்க உயர்வு, தாழ்வுகளை எற்படுத்தி உயர் வேண்டும். வேறொருவரிடம் போக ந்த சாதிக்காரர்களுக்குத் தாழ்ந்த சா நாட்டுச் சட்டம் இடங் கொடுக் திக்கார மக்கள் அடிமையாய் நடந்து காது. கொள்ளவேண்டும் என்று ஏமாற்றி

ஆதிதிராவிட மக்கள் படும் பாடும், ஏற்படுத்தப்பட்டவைகளே சாதி துன்பமும் ஒரு புறமிருக்க, இவர் களும், மதங்களும்.

களைத் தொட்டால் தீட்டு ஒட்டிக் கொள்ளும். பொது ரோட்டில் நடமாடல் கூடாது. பொதுக்குளம், கேணிகளில் தண்ணீர் எடுக்கக்கூடாது. மக்கள் வசிக்கும் ஊர்களில் வசிக்கக் கூடாது. ஊருக்கப்பால் தனியாய் குடிசைகளில் வசிக்க வேண்டும். இச்சட்டவ்களுக்குப் பயந்து சில ஆதிதிராவிட மக்கள் கிருஸ்தவ மதத்தில் சேர்கிறார்கள், அங்கும் இவர்களுக்கு சமத்துவம் இல்லை; தனியிடம் தான் ஒதுக்கப்படுகிறது.

சாதித்திமிர் கொண்ட மக்களைத் தீட்டு என்றால் என்ன? அது எப்படி இருக்கும் என்று கேட்டால் பதில் சொல்லத் தெரியாமல் விழிக்கிறார்கள். சிலர் அவர்கள் அசுத்தமாய் இருக்கிறார்கள்; எப்படி தொடலாது என்று கூறலாம். ஆதிதிராவிட மக்கள் இந்தியாவில் தக்க வசதியுமின்மையும் இல்லாமல் உழைத்து வருந்தி வாழும் நிலை இந்திய மக்கள் ஒவ்வொருவரும் அறியாததல்ல. அவர்கள் ஒவ்வொரு காளும் வயிறு நிரம்பிலும் போதும் என்று எண்ணி இருக்க, எப்படி தினம் முழுதி உடை உதித்தி சுத்தமாயிருக்க நினைப்பார்கள் என்பதை யோசித்துப் பாருங்கள். இவர்களுக்கு ஓய்வு நேரந்தான் எது? ஆதிதிராவிட மயோதிகரை பெரியவர் என்ற எண்ணம் சிறிது மின்றி சிறு குழந்தைகள் முதல் அடே! பறையா என்று கூப்பிடுகிறார்கள். அவர்கள் பெயரைக் கூடச் சொல்லிக் கூப்பிடுவதில்லை. ஒரு சிறு பார்ப்பன பையனையும் கூட நமது மக்கள் வாருங்கள் சாமி! என்று வணக்கம் செய்கிறார்கள். இப்படிச் செய்வது சாதியில் வேற்றுமை அல்லவா? இவ்வறியாமைக்குக் காரணம் என்ன? உயர் சாதி என்று சொல்லப்படும் பாரப்பன மக்களால் மனித சமூகத்திற்கு எதேனும் ஒரு நன்ன உதவி உண்டா என்பதை நன்ரய் யோசித்துப்பாருங்கள். உயர் சாதி என்று சொல்லப்படும் மக்கள் அனைவரும் பெரும்பாலும் சோம்பேரிகளாய்த்தான் காலங்கழிக்கிறார்கள். ஆதிகாலத்தில் இந்த சாதி என்னும் கொடிய வேற்றுமை இல்லாமல் மக்கள் அனைவரும் ஒற்றுமையு

இருவித்தியாசங்கள் தோன்றுகிறதே ஒழிய, உயர்சாதிக் காரர்கள், தாழ்ந்த சாதிகாரர்கள்என்று சற்றும்விளங்குகிறதில்லை. சாதிதெரிந்து கொள்ள வேண்டுமென்றால் நீ என்னசாதி? என்னமதம்? என்று கேட்டுத்தானே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது என்பதை நன்றாய்யோசனை செய்து பாருங்கள். சாதித்திமிர் கொண்டவர்களே! சாதி வேற்றுமைகள் எல்லாம் சமீபகாலத்தில் மனிதசமுகத்தின் ஒற்றுமையைக் குலைத்துயர்வுதாழ்வுகளை உண்டாக்கப்பட்டதேயல்லாது பண்டைக் காலந்தொட்டுத் தோன்றியவை அல்ல வென்பது உண்மை என உணருங்கள். சாதி வேற்றுமை பழமையாக உள்ளதென்றே கொண்டாலும், அதனைத்தழுவி ஒழுகல் வேண்டுமென்பது சிறிதும் பகுத்தறிவு இல்லாதார் கூறுவதே.

(தொடரும்)

கோவைஜில்லாவாலிபர் மகாநாடு.

இம்மகாநாடு திருப்பூரில் பம்பாய் கே. எப். காரிமென்அவர்கள் தலைமையில் 20-12-31. ல் நடைபெற்றது. தேசியக்கொடியை திரு. ஆர். கிருஷ்ணய்யர் உயர்த்தினார். மகாநாட்டை. சி. ராஜகோபாலாச்சாரியார் திறந்துவைத்தார். பின் மகாநாட்டின் வரவேற்புக்கழகத்தலைவர் திரு. குமாரசாமிக்கவுண்டர் அவர்கள் தமதுவர வேற்புப்பிரசங்கத்தைப் படித்தார். பின்சில தீர்மானங்கள் நிறைவேறியது. அதில் முக்கியமான வைகளாவன:-

இந்துசமூகத்தில் தீண்டாதார்என ப்படும் வகுப்பார்க்கு இழைக்கப்படும் அநீதிகளை இம்மகாநாடு பலமாகக் கண்டிப்பதுடன் வாலிபர்கள் அனைவரும்தங்கள்வழ்க்கையில் இத்தீய வழக்கத்தை ஒழித்து தெருக்கள், தேவஸ்தானங்கள், கிணறுகள், பள்ளிக்கூடங்கள், இவைகளை தீண்டாதாருக்கு உபயோகிக்கும்படி இடங்கொடுக்குமாறு, தேவஸ்தான தர்மகர்த்தாக்களையும், ஜில்லா, தாலூகா முனிஸிபாலிட்டிகள் தகுந்த ஏற்பாடுகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும், பொதுஜனங்களையும் இவ்விஷயத்தில் உழைக்க வேண்டுமென்றும், குருவாயூர், காசிக்முதலிய இடங்களில்லாடை பெறும் தீண்டாதார் கோயிலுகுள் செல்லும்சுதந்திரத்தை அடைவதற் காகநடத்தப்படும் சத்தியாக்கிரகத் தைமனப்பூர்வமாய்ப் போற்றுவது டன்இதற்குத்தகுந்த ஆதரவு, அளிக் கும்படி கேட்டுக்கொள்ளுகிறது.

தற்காலத்தில் நம்நாட்டு மக்களின் ஒற்றுமைக்கு இடைஞ்சலாயிருக்கும் ஜாதிவகுப்பைக்காட்டும் ஜாதிப்பெயர் களைத்தங்கள் பெயருடன் சேர்த்துக் கொள்ளும் வழக்கத்தை இனிமேல் விட்டுவிடவேண்டுமென்பதாகக்கேட் டுக்கொள்ளுகிறதென்றுதீர்மானிக் கப்பட்டதென ஒரு நிருபர்எழுதி யிருர்.

ஈ. வெ. இராமசாமி ஐரோப்பா பிரயாணம்.

(பண்டிதர். திருஞானசம்பந்தர் எழுதியது)

அன்பர்களே!

நமது தலைவர் ஈ. வெ. இராமசாமியார் அவர்கள் ஐரோப்பா கண்டத்திற்குக்கடந்த 13-12-31 இரவு, பிரஞ்சுக்கப்பலில் சென்ற செய்திபத்திரிகைகள் வாயிலாக அன்பர்கள் அறிவீர்கள். அவர்கள் நமது உடல் நிலையை சிறிதும் கவனியாது தனது நாட்டின் ஏழைமக்கள் நலனை நாடியே சென்றுள்ளார். மேல் நாட்டிற்குச் செல்லும் நமது நாட்டுத் தலைவர்களோ, காங்கிரஸ் தலைவர்களோ பிரயாணம் ஆறுமாதமிருக்கும் பொழுதே, செலவின் ஆடம்பரப்பல்லிகளைப் பாடுவார்கள்; அவர்கள் பத்திரிகைகளும் ஒற்றையாடையுடனும், ஷூட்டுப் பாலுடனும், கடலிப்பருப்புடனும் போகிறார் என்று ஒன்றைப் பத்தாக்கிப்பாமர மக்களை மயக்கி ஜே! போட்டுத் தங்கள் காரியங்களைப்பார்த்துக் கொள்வார்கள்.

சுயமரியாதைத்தலைவரோ! தனது மனைவியையும் பாராது, அவரது வயது செல்ல தாயையும் பாராது, மற்றுமுள்ள உற்றார்களையும் கவனியாது சென்றனர் என்றால் அவரது நிறமே என்னென்று கூறுவது. கப்பலில் முதல், இரண்டு மூதலியவகுப்பில் செல்லற்கேற்ற செல்வகலனிருந்தும், மூன்றாவது வகுப்பிலும் செல்லாது உணவிற்குக் கூடைக்கும் கதியற்ற ஏழைமக்கள் செல்லும் நான்காவது டெக்கில் பிரயாணம் செய்தனரென்றால் அவரது உண்மைத்தியாகத்தை, தேசபக்தியை எவ்வாறு எழுதுவது, அல்லது எந்த மகாத்மா, வரிசையில் வைத்து எண்ணுவது

யான் நமது பெரியாரைக்கப்பலில் ஏறிச்சென்றபோது அவர் நான்காவது டெக்கில் புகுதி நிறைந்த இடத்தில், காற்றங்கள் வீசுகின்ற விடத்தில், விகாரமான ஸாகரிகமற்ற பாமர மக்களுடன் வீற்றிருந்த காட்சி பலவர்களும் கண்கலங்குவரென்றால் மற்றும் யாது வரைவது. நமது தலைவர் மற்றைய தலைவர்களைப் போல், முதல்வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் செல்லற்கேற்ற மிக்க செல்வகலன் உடைய வராயிருந்தும் ஏழைமக்கள் பிரயாண நிலைமையை அறியவேண்டுமென்றும், அவர்களுடன் அவர் கஷ்டங்களைத்தானுமனுபவித்தால்தான் தேசமக்கள் நிலைமையைத் தானுமறிவதோடு, பிறகும் பின்பற்றச்செய்யக்கூடுமென்னும் தியாக புத்தியில் அவ்வாறுசெய்ல எண்ணங்கொண்டார் என்றே கருத வேண்டியிருக்கிறது.

அவர் பிரயாணத்தை அவருடன் மாறுபட்டவர்களும், அவர் உண்மைத்தியாகத்தை நன்கறிவர். அவர்பால் சுய நலங்கருதிய ஆழுக்கர்களே புறங்கூறவும், பொருமை கொண்டு தூற்றவும் செய்வர். தமிழ்நாட்டில் சமயப்பைத்தியம்கொண்டவர்களும், ஜாதிக்கிமிர் பிடித்தவர்களும், கட்சி மாறும், கொள்கையறும் பச்சோந்திகளும், போலி வேடங்கொண்ட தேசீயப்புலிகளும் பலவாறு பிதற்றவும் செய்வர். இதன்வண்மையுணர்ந்த நமது நாட்டினர் நன்கறிவர். நாட்டை மயக்கும் காலம் மலையேறிவிட்டது என்பதை போலித்தேசிய வீரர்கள் உணராதிருப்பது வருந்தத்தக்கதேயாகும். இதைப் பற்றி உண்மைச்சமரியாதை விரும்பும் யாவரும் ஒருபொருளாக கினையார். ஆதலால் இதனைவிட்டுவிடும்படி நமது தமிழ் நாட்டினர்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

(5ம் பக்கத் தொடர்ச்சி)

க்கித், தன்னுடைய பகைவர்களை அடித்தகாலமும் சொல்லும் கதைகள் யாவும். கட்டுக்கதைகளே. சூனியத்தால் மனிதன் இடமென கோயுற்றான்; பிசாசால் பிடிக்கப்பட்டு அலருகின்றான்; என்பது நமது பாமர மக்கள் சொல்வதும், இந்தக் கற்பிதக் கதைகளைக்கொண்டே சொல்கின்றார்கள். கடவுள், அபூர்வ காரியங்களைச்செய்தார் என்ற கற்பனைகளை, மனிதர் நம்புவதால் பாமர ஜனங்களுக்கு கினையும் கெடுதிகளுக்கு அளவே இல்லை. விஷரோய்கள், அம்மன், பிடாரி, மாரியாத்தாள், வெள்ளச்சேலைக்காரி, மூனீஸ்வரன் முதலிய தேவதைகளால் உண்டாகின்ற மூட நம்பிக்கை நமதுஏழை மக்களிடம் குடிகொண்டு விட்டது. 100 வருஷ காலமாய் செய்து வந்த விசாரணையால் மேற்போன்ற நோய்கள் சிறு சிறு கிருமிகளால் உண்டாகின்றதென அத்தெரிந்திருந்தும், நமது ஏழைத் தொழிலாளிகள் அதை நம்பாமல், மூட வயித்தியர்களும், சிறுவிகளும் சொல்லும் கழிப்பு, பூசை, பிரார்த்தனை பலிகளால், நோய் நீங்குவதாக நம்புகின்றார்கள். தேங்காயில், மூன்று "கண்களில்," மூன்று வத்தியை கொளுத்தி, அல்லது மிளகாயை சுட்டு, தெருக்களில் போடுவதற்கும், ஈக்களால் உண்டாகும் குழந்தைக்கழிச்சலுக்கும், என்ன சம்பந்தமென விசாரித்தறிந்தார் இல்லை. இந்த மூடநம்பிக்கைகளால், அனந்த குழந்தைகள், வீணே சாகின்றன. முக்கியமாக இவ்வித மூட நம்பிக்கையால், தனேக சிறுவர்கள் நல்ல சிகிச்சை இன்றி இவ்வுலக வாழ்வை அனுபவிக்காமலே இறக்கின்றார்கள். இவ்வித கொடுமையான மூட நம்பிக்கைகளைபோக்காமல், உயிர்களைக்காப்பாற்றாமல், வீணை கதர், மதுவிலக்கு, மறியல் முதலிய சொற்ப வேலைகளைச் செய்யச்சொல்லுவது, கொடுமையிலும் கொடுமையாகும். நமது நாட்டுக்கு உயிர்கள்வேண்டுமோ? அல்லது உயிரை வாட்டும் கதர் வேண்டுமோ? எது முதலில் நமக்கியமாக வேண்டும்? இதனையோ சியாது காந்தியாரும், அவருடைய திருக்கூட்டங்களும், வியர்த்தமான காரியங்களைச் செய்து, பாமர மக்களின் தங்களை ஏளைவைப்பது மிகுபரிதாபமானதே.

மூட பக்தியால், பாமர மக்களுக்கு வினையும் கெடுதிகள் யாவும், மதஸ்தர்களும், மதபக்தர்களும் முன் கட்டிய பொய்க்கதைகளாலென அறிக. இவர்கள், மூடத்தனமான காரியங்களில், கட்டிய கதைகளை நம்பியே, பாமர ஜனங்களுக்கு, பில்லி, சூன்யம், பேய், பிசாசுகளின் மேல் நம்பிக்கை வீழ்ந்திருக்கின்றது. கடவுள், நாம பார்க்கும் இயற்கைக்காரியங்களுக்கும், சம்பவங்களுக்குமாறுக்காரியங்களைச் செய்தாரா என்றும், சம்பவங்கள் நடந்தன வென்றும் கூறும் கட்டுக்கதைகளை நம்பி நோய்களுக்குச் செய்யவேண்டிய பரிகாரங்களைச் செய்து, தீர்த்துக்கொள்ளாமல், தெய்வங்களாலும், பேய் பிசாசுகளாலும், நோய்கள் உண்டாகின்றன வென நம்பி, அந்த தேவதைகளுக்குப்பூசை, பலிமுதலிய உபயோகமற்றக் காரியங்களைசெய்து, நோய்களைப்போக்கிக்கொள்ளாமல், சாகின்றனர். இந்த மூடப்பழக்கத்தினாலேயே, நமது நாட்டில், அரைக்கோடிமக்கள் அகால மரணமடைகின்றார்கள். பேதி, வயிற்றுப்போக்கு, விஷசுரம், பார்சவாய்வு, வயிற்றுவலிசீதபேதி, நிமோனியா, மூளைஜன்னிபிடித்தல் முதலிய நோய்கள், சாதாரண மாக, சிற்சில விஷ கிருமிகளால் (சிறுசிறுபூச்சிகள்) உண்டாகின்றன. அந்தப்பூச்சிகளைக் கொன்றவுடன்நோய் நீங்கிவிடும். ஆனால், இதனை அறிந்தவரும் அறியாதோரும் மூனீஸ்வரனுக்குப்பூசையும், மாரி அம்மனுக்குப் பிரார்த்தனையும் செய்து, நோயை அதிகரித்துக்கொள்கின்றார்கள். இந்த தினைகளெல்லாம் மூட பக்தியால் நிகழ்கின்றன. இல்லாத கடவுளுக்கு, இல்லாத குணங்களெல்லாம் உள்ளதாகக்கற்பித்து, கடவுள் இதைச் செய்வார், அதைச் செய்வாரென்று மூட நம்பிக்கையைக்கொண்டு பல பயனற்ற மந்திர தந்திரங்களில் பணத்தை விரயத்தமாக்கி, அனியாயமாக மடியும் மக்களை என்ன வென்று அழைப்பது?

கடவுள்நல்லவரென்றால்புலியையும், ஓட்டையும், சிங்கத்தையும், பசுவையும், பாம்பையும், தேளையும், அம்மைப்பூச்சி, பேதிப்பூச்சி, சுரப்பூச்சி முதலிய கொடிய பூச்சிகளையும் என் சிருஷ்டித்தாரென கேட்கின்றோம்? கடவுள் நல்லவராய் இருந்தால், அவரைப்பற்றி என் பயப்படவேண்டும். இந்த கற்பிதங்களால் பல ஆயிரவருஷங்களாக நமது நாட்டு மனிதர் மதிமயங்கிப் பல பயனற்ற சரியை கிரியைகளைச் செய்துபரிதபித்துச்சாகின்றனர்.

பிரபஞ்சத்தில், நமக்குத்தெரிந்தவரை, இருக்கும் பிராணிகளில் மனிதனைப்போன்ற மூடப்பிராணி இல்லை என்றே சொல்லலாம். இல்லாத தெய்வங்களையும், பிசாசுகளையும் தானே சிருஷ்டி செய்துகொண்டு, அந்த சொற்களுக்குத் தானே நற்குணங்களையோ, தீக்குணங்களையோ, காட்டி, தான் கொடுத்த குணத்திற்கு பயந்து, அந்த பயத்தைப் போக்க, பிரார்த்தனையும், பூசையும், காவையும், பலியையும் செய்து, ஆவைகளால் தன்னையும், பிறரையும் இம்சித்துக் கொண்டு, இவ்வுலகில் உயிர் வாழும் சம்பவம் பிரபஞ்சத்தில் எங்கும் இருக்காது என்று தீர்க்கமாக எண்ணலாம். கடவுளையும், தெய்வங்களையும், மூனீஸ்வரனையும், காட்டேரியையும், பேய் பிசாசுகளையும் தானே சிருஷ்டித்தது, ஒரு பக்கமிருக்க, இந்த சொற்களுக்கேற்ற உருவங்களை, கற்களால் அமைத்துக்கொண்டு, அவைகளின் முன்தாள் பணிந்துதெண்டனிடுவதென்றால், இந்த மனிதனுடைய மதியை என்னவென்று மதிப்பது! இதுவும் இன்னொருபக்கமிருக்கட்டும். இவர்கள் சிருஷ்டித்த கடவுளை

யும், தெய்வங்களையும் வகுப்பு வாரி கடவுளாக்கிக் கொண்டு, உன் தெய்வம், என் தெய்வ மென்று வித்தியாசப்படுத்திக் கொண்டு, அந்த மனே கற்பிதங் களை ஒன்றுக்கொன்று போட்டி போடச்செய்து, தத்தம் தலைகளை உடைத்துக் கொள்வதென்றால், இதைவிட உன்மத்தம் உலகில் என்ன இருக்கின்றது?

பிரபஞ்சத்தில் உள்ள உலகங் களில், நமக்குத் தெரிந்தவரையில் இவ்வுலகில் வாழும் பிராணிகளுக் குள்ளே மனிதன் ஒருவன் தான் "கடவுளென்ற" கற்பனையைக்கற் பித்திருக்கின்றவன். இவன் குண த்திற்கும், இவன் அறிவுக்கும், இவன் அனுபவத்திற்கும், இவன் நடை யுடை பாவனைக்கும் தக்க வாறு, தான் கற்பித்த கடவுளு க்குக்குணத்தையும், அறிவையும், அனுபவத்தையும், நடையுடை பாவனையும் அமைக்கின்றான். வேடனுடையகடவுள் வேட்டை ஆடுகின்றது. திருடனுடைய கடவுள் திருடுகிறது. [கள்ளர் அழ கர் கடவுள்] விபசாரிகளுடைய கடவுளும், விபசாரம் செய்கிறது. மோசக்காரர்களுடைய கடவுள், மோசம் செய்கின்றது. மீன் பிடி ப்போர் கடவுள், மீன் பிடிக் கின்றது. சண்டை போடுகின்ற வன் கடவுள், சண்டை இடுகி றது. கடவுளுக்குப், ஆண் பெண் உருவங்களை பாவனை செய்து, [Mongomy] அதாவது ஒரு பெண் சாதி திட்டத்தில் கட்டுப் பட்டவனுடைய கடவுள் ஒரு பெண்சாதியுடனும், பல பெண் சாதி திட்டத்தில் இருப்பவனுக்கு [Polygomy] உரிய கடவுள், பல பெண்சாதியையும் உடைய தாகப் பாவிக்கின்றான். குளிர் தேசத்திலுள்ள கடவுளுக்கு, கம் பிளியை ஆடையாக போத்து கின்றான். உஷ்ண பூமியில், நிர் மானமாகவே கடவுளை அமைக் கின்றன். இன்னும் பற்பல விதமான திருஷ்டாந்தங்களால், பக்தனைப்போலவே கடவுளும் அமைக்கப்படுகின்றனே ஒழிய, கடவுளுமில்லை, கடவுளுக்குக் குணமுமில்லை; எல்லாம் மனிதனு டைய கற்பனைகளென அறிக.

சுகாதாரவிழாக் கொண்டாட்டம்.

சிவகங்கைதாலூகா, செவரகோட் டை போர்டு ஆண்பாடசாலையில், 14-12-31தேதிமாலை திரு. முத்து. சி னிவாசய்யங்கார் அவர்கள்தலைமையில், ஷிவிழாநடந்தேறியது. அவ்வமயம் ப லபிரமுகர்கள் விஜயம்செய்திருந்தார்க ளென ஒரு நிருபர் எழுதுகிறார்.

பர்மா தேயத்து சுயமரியாதை வீரர்கட்கு ஓர் வேண்டுகோள்.

எனதன்பிற்சிறந்த, பர்மா தேச வந்தமிழ் சகோதர சகோதரிகாள்!

கடந்த ஏழு ஆண்டுகளாக சுயமரி யாதை என்னும் சுடரொளி இந்தியா வினிடை வளர்பிறை போன்று விள ங்குகின்ற தென்பதை எடுத்துரைக்க வேண்டியதில்லை. நம் சுயமரியாதை இயக்க நறுமணம் இப்பர்மா தேசத்தி னிடையும் பரவியிருப்பதுண்மையே யாயினும் நம் சுயமரியாதை வீரர்கள் ஒன்று கூடி ஓர் உருவான வேலை செய்ய முடியா வண்ணம் சுயமரியா தை வீரர்கள் பல் வேறு நிக்குகளி லும், பலர் முதலாளி தெய்வங்களுக் கடிமை பட்டிருக்கிறதென்பதும் யா வரும் அரிந்த உண்மை. இக்குறை களை நீக்குவான்வேண்டியும்--சுயமரி யாதை வீரர்கள் ஒன்ற சேறுவான் வேண்டியும்--சுத்த சுயமரியாதைத் தொண்டர்களைத்தட்டி எழுப்புவான் வேண்டியும்--இப்பர்மா தேசத்தின் தலை நகராம் இரங்கூனில் ஓர் சங்கத் தை ஸ்தாபகம் செய்யவும் அச்சங்கத் தின் மூலம் பிரசாரம் செய்யவேண் டிய நிமித்தம் ஓர் மாதாந்திரப் பத்தி ரிகையை ஆரம்பம் செய்து, அதன் மூலம் பல்வேறு திசைகளிலும் சிதரு ண்டிருக்கும் நம்மவர்களை ஒன்றுபடு த்த வேண்டிய முயற்சிகள் எடுத்து வருவதினால் இதைக்கண்ணுறும் நந் தமிழ் தாய் மக்கள் யாவரும் தம்தம் மேலான அபிப்பிராயங்களை கீழ்க் கண்ட விலாசத்தாரிடம் கேரிலோ கடித மூலமோ தெரிவிக்கவேணுமாய் மிக்க அன்புடன் கேட்டுக்கொள்ளுகி றேன்.

இங்ஙனம்
தங்கள் உண்மையுள்ள
சுயமரியாதைத்தொண்டன்
R. ராஜகோபாலன்
230, 30-வது வீதி, இரங்கூன்.

அறிவிப்பு.

சேலம் "குடி அரசு" சந்தா நேயர்களுக்கு மே ஜனவரி வணக்கமாய்த் தெரியப்படுத்திக் கொள்வ தென்னவென்றால்:— 1-1-32 தேதிக்குள் சந்தாதார ர்கள் பாக்கியைச்செலுத்திவிட வேணுமாயும், இனிமேல் புதிய சந்தாதார்கள் மூன்பணம் கட்ட வேண்டும் என்றும், அறிவித்துக் கொள்ளுகிறேன். அன்றி அவ் வப்போது பணத்தை செலுத்தி விடவேண்டுகிறேன். தவறினால் பத்திரிகையைக் கண்டிப்பாய் நிறுத்த நேரிடுவதைக்குறித்து வருந்துகிறேன்.

A. M. B. "குடி அரசு"
ஏஜண்டு, சேலம்.

சுயமரியாதை இறுதிச்சடங்கு.

நிண்டிவனம், பிரபலஜவுளிவியா பாரி திரு. ரு. நாகமணிஆசாரி அவர் கள்தன்தந்தையின் இறுதிச்சடங்கை 11-12-31தேதி மூடப்பழக்கங்களை யும், புரோகிதங்களையும் அறவேநீக்கி எழைகளுக்கு அன்னமளித்து, அன் றுமாலை பலபெரியார்களைக் கொண் டுசடங்குமுதலியவைகளைப் பற்றி உபன்யாசங்கள் கடத்தினர். இந்த ஞாபகார்த்தமாக "குடிஅரசு"ச்குஒரு ரூபாய் நன்கொடை அனிக்கப்பட்ட தெனஒருநிருபர் எழுதுகிறார்.

தறிப்பு:—நிண்டிவனம் திரு. நா கமணி ஆசாரி அவர்களால் நமதுபத்தி ரிகைக்கு ஒருரூபாய் நன்கொடை அனிக்கப்பட்டதை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டோம்.

வெளியிடுவோர்.

நோட்டீஸ்.

தஞ்சாவூர் ஜில்லா மாயவரம் தாலூகா இலுப்பூர் கிராமத்தில் இருக்கும் கோவிந்தசாமி பிள்ளை குமாரன் செத்தினசபாபதியாகிய நான் இதனால் சகலருக்கும் தெ ரிவிப்பது யாதெனில்:—

சுமார் 13 வருட காலமாய் மலாய் நாட்டில் (சிங்கப்பூரில்) வந்து இருந்து நான் சம்பாதித்த பணத்தை எனது உடன் பிறந்த தமையனாராகிய கோ. ராஜகோ பால் பிள்ளைக்கு அனுப்பியதைக் கொண்டு சுமார் 300 குழிக்கு மேல் நஞ்சை புஞ்சை நிலங்களை அவரின் பேரால் வாங்கி 1929ம் வருஷம் வரையில் எங்கள் இரு குடும்பங்களும் ஏகோபித்து ஒற் றுமையாய் அந்நிலங்களை அநுப வித்து வந்திருக்க, திடீரென 1930ம் வருஷம் முதல் (நான் சிங்கப்பூரில் இருக்கும் போது) என் தமையனர் எதேச்சாதிகா மாய் மேற்படி நிலங்களில் வந்த வருமானங்களை எனது குடும்பத் திற்கு கொடுக்காமல் தன் பேரு க்கே குத்தகைச்சீட்டு முதலான வைகள் எழுதி வாங்கிக்கொண்டு அவரும் மலாய் நாட்டிற்கு வந்து விட்டபடியாலும் எங்கள் இருவ ருக்குமுள்ள நிலச்சம்மந்தமான தகராறுகள் தீர்த்துக்கொள்ளும் வரையில் அந்நிலங்களை யாரும் சுத்த கிரயத்திற்கு வாங்கவோ, ஒத்தி பெற்தகம வாங்கவோ, கடன் கொடுக்கவோ, வேறு எவ் விதமான வினியோகங்கள் செய் யப்படவோ கூடாதென்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

கோ. செத்தினசபாபதி.
சிங்கப்பூர், 10-12-1931.

சுயமரியாதைச்சங்கம்.

16-12-31தேதி இரவு சிலோன் குடிக்கோபாவில் எம். கருப்பையா அவர்கள்தலைமையின் கீழ் ஆரம்பக் கூட்டம்ஒன்று நடைபெற்றது. அது போது பலசுயமரியாதை அன்பர்கள் விஜயம் செய்திருந்தார்கள். எல். பி. செல்லையா அவர்கள் சுயமரியாதைச் சங்கம் ஸ்தாபிக்கவேண்டிய அவசியத் தைப்பற்றி ஒரு விரிவுரைநிகழ்த்தி னர். பிறகு அடுத்த மீ 2உதேதி கூட்ட த்தில் இயக்கசம்பந்தமான பலவித வேலைத்திட்டங்களை ஏற்படுத்துவதென்று தீர்மானித்து வந்தேமாதரத் துடன்கூட்டம் இனிதுகலைந்ததென ஒருநிருபர்எழுதுகிறார்.

திருமணம்.

தரங்கம்பாடியைச்சேர்ந்த சாத்தன் குடியிலிருக்கும். ச. கோவிந்தராஜலு க்கும் ஷியூர் ருக்மணியம்மாளுக்கும் 13-12-31ல் பிறையார் சுயமரியா தைச்சங்கத்தாரால் மூடப்பழக்கவழக் கங்களை அறவே நீக்கி சுயமரியாதை முறைப்படி நிருமணம் நடத்திவைக் கப்பட்டபின் பலஅன்பர்கள் சொற் பொழிவாற்றினர்களென ஒருநிருபர் எழுதுகிறார்.

ஜனனம்.

திருநெல்வேலி, இட்டடி என்னும் கிராமத்தில் திரு. எல். பெரியசாமி அவர்கள் பாரியை திருமதி. லெட்ச மிஅம்மாளுக்கு 11-12-31ம் தேதி ஆண்மகவு ஜனனமாகி தாயும் சேயும் சுகமேஇருப்பதாகவும், குழந்தைக்கு "கைவல்யநாதன்" என்று பெயரிட் டிருப்பதாகவும் ஒருநிருபர் அறிவி க்கிறார்.

WANTED Candidates for Electrical Engineering and wireless. Preparation for London City and Guilds Examination. Rail fare Paid Prospectus on 3 annas stamps.

Technical Institute of India. Ltd., Bombay No. 10.

தேவை.

"ஒரு நற்குல இந்துவுக்கு ஒரு உத்தம உயர்குல இந்து பெண் தேவை. சீர்திருத்தத் திருமணம் முடிப்பதுவே பாங்கு. விபரங்க ளுக்கு கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

அ. ஏகாம்பரம்,
பம்பு அவுஸ், சாக்கார்பாளையம்,
தெப்பக்குளம் போஸ்டு,
திருச்சிறுப்பள்ளி.

[3ம் பக்கத் தொடர்ச்சி.]

நிறவன் போகானே? உள்ளகடவுளே இல்லை என்று சொல்லுகிறவன் அறிவீனன் பாவி. இல்லாத தீட்டை உண்டென்பவனும் பாவி அறிவீனன் ஆகானே? சமய சாஸ்திரத்தை நம்பி சன்னிதிக்கு வருகிறவனைத் தடுப்பவன் ஆகிறானே? பெரியவர் வார்த்தை யைத்தள்ளுகிறவன் நரகடன். சமத்துவமென்னும் பெரியவர் வார்த்தையை அனுசரிக்காதவன் பக்தனே? தெய்வத்திற்குத் தீட்டென்னும் பெயர்வைத்து மனிதனே மனிதன் கீழ்ப்படுத்தி அமைத்து வருவது எந்த ஒழுக்கத்தைச்சேர்ந்தது. அறிவு ஞானம், கல்வி, கடவுள், முதலிய வைகள் மனிதருக்கெல்லாம் பொது வென்பதை உலகமெல்லாம் ஒத்துக் கொள்ளுகிறது. சுயநல சன்மார்க்கத் திலும் நமது சமய ஒழுக்கத்திலும் அவை அங்கீகாரம் பெறவில்லை. என்? அது எப்படியோ இருக்கட்டும். எல்லாரும் உண்மைக்குப் பரிந்து பேசுங்கள். அதுவே உயர்ந்தகுணம் செய்யாததைச்செய்தாலும் குற்றமே யாகும்.

ராஜசித்தாதி லேகியம்.

ரிஜிஸ்தர் செய்யப்பட்டது.

இந்த லேகியத்தைச் சுண்டக்காய் பிரமாணம் காலை, மாலை இரு வேளையும் சாப்பிட்டு வந்தால் தாதுபுஷ்டி, ஜீரணசக்தி இவைகளைக் கொடுத்து நாம்புகளுக்குப் பலத்தைத் தரும். சீதக்கடிப்பு, நெஞ்சுக்கரிப்பு, வயிற்றுப்போக்கு, வயிற்றுவலி, வயிற்றில் கட்டி, மலச்சிக்கல், பாலியருக்குண்டாகும் சொர்ப்பன ஸ்கலிதம் இவைகளைக் குணப்படுத்தும்.

1-டெ. ஒரு சேர்	ரூ. 4-0-0,	அரை சேர்	ரூ. 2-0-0.
கால் சேர்	ரூ. 1-0-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-8-0.
2-டெ. ஒரு சேர்	ரூ. 3-0-0,	அரை சேர்	ரூ. 1-8-0.
கால் சேர்	ரூ. 0-12-0,	அரைக்கால்சேர்	ரூ. 0-6-0.

T. A. ராமலிங்க முதலியார், ஷண்முகானந்த வைத்தியசாலை.

அங்காளம்மன் கோவில் தெருவு, செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

மலாய் நாட்டு நண்பர்கள் கீழ்க்கண்ட எங்கள் கம்பெனிசோல் ஏஜண்டு அவர்களுக்கு எழுதி எல்லா விபரங்களும் தெரிந்து கொள்ளவும்.

S. S., F. M. S., J. B.,

மலாய்நாடு பூராவுக்கும் சோல் ஏஜண்டு:—

P. M. வேல்ஸாச்சாமி,

கெ. 616 டத்தோகிரமட் ரோடு, பிளங்கு. S. S.

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்ஹ வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது.

விலை ரூபா 2—0—0, வி. பி. செலவு ரூ. 0—5—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு



சுயமரியாதைச் சுடர்! மூதல் இதழ் வெளிவந்துவிட்டது!

சுயராஜ்ஜியம் யாருக்கு?

(முதற் பாகம்.)

தோழர், M. சிங்காரவேலு B. A., B. L.,

எழுதியது.

நமது "சுயமரியாதைச் சுடர்" என்னும் புத்தக வரிசையில் மேற்கண்ட புத்தகம் முதல் இதழாக வெளிவந்து விட்டது. இதில் அறிஞர் சிங்காரவேலு, வழக்கமாக உள்ள தமது எளிய நடையில் மிக அழுத்தமாக, சமூகக்கொடுமை, ஜாதிக்கொடுமை, மதக்கொடுமை, அரசியல் கொடுமை, பொருளாதாரக் கொடுமை, முதலிய வற்றையும் காங்கிரஸின் கள்ள நியாயம், தீண்டாமை யொழிப்பு, முதலிய பல விஷயங்களையும் நன்கு எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

விலை அணை ஒன்று தான்.

தமிழ் நாடெங்கும் விற்பனை ஏஜண்டுகள் தேவை.

தாராளமான நிபந்தனைகள்! ஏராளமான கமிஷன்!

விபரங்களுக்கு உடனே எழுதவும்.

விலாசம்:—

கற்பகம் கம்பெனி, (புத்தக இலாக்கா)

257, லிங்கசெட்டித் தெரு,

ஜி. டி: மதராஸ்.

கெந்தகமே—இந்தியுகம்.

டாக்டர் T. K. வெங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகாசாயனம்.

(மாத்திரைரூபமாய், வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரவின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-வித்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி இரணமாகி, (இரத்தம் முறிந்த சீழ்) வெளியாகும் 217 விதவெட்டை வியாதிகள், 21 விதகிரந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத்தாது, அண்டப்புத்து, பெனத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, சுயம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பக்கவிலா, வாய்வு பிடிப்புசன், பல்புத்து, பல் இறந்தியும், பல சித்ரின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதுவே சமாதி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாகி ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்ததினாலோ, தளர்ச்செய்துக் கொண்டதினாலோ, சுகதம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பல, சந்துக்களிலும், ஊடிருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குனிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சந்துகட்டு என்பதற்கும் தடையின் இரத்த சம்பு வழியாக சென்று முழங்கால், முட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இலம் பின்னே வாதக்ஷோணியும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, துரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, தாது என்னும் சரம்புகளுக்கு சுத்த இரத்தத்தையூட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உந்தி குளிர (கர்ப்ப இரணகளை ஆற்றக்கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பார்சல் தபால் செலவு வேறு. மலாய் வாசிகள் ஆர்டருடன் ரு. 7—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,

(காலாஷைபர்)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள
இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. இயற்கைமதம் ... 0—8—0
2. சிதம்பர ரகசியம் ... 0—8—0
3. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
4. சுயமரியாதைத் தத்துவக் கீதங்கள் ... 0—4—0
5. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை (சித்திரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் உள்ளது) ... 0—6—0
6. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
7. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
8. சென்னை லோக்கல் போர்ட் ஆக்ட் ... 2—0—0
9. மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம். தபாருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.) ... 2—0—0
ஈ. வெ. ராமசாமியின் போட்டோ படம் ... 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புவதாயிருந்தால் புஸ்தக விலையத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த தபாருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, தபார்களுக்கு மாதிதொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனார் அவர்களிடமிருந்து

மாதர் சுதந்திரம் அல்லது
பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணா 8. (எட்டு)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம், ஈரோடு.
இம்பிரியல் பிரஸ், மாயவரம்.

மணவி தேவை.

மலேயா நாட்டில் வசிக்கும் வயது 30 முதல் 40 க்குட்பட்ட ஒரு பிரபல கனவானின் வாழ்க்கைத் துணைக்கு ஒரு பெண் வேளாளர், நாயுடு, செட்டி, முதலியதைகளாவன:-வயது 55 ஜாதி வேளாளர், யோக்கியதை ஆங்கிலம் கற்றவர். பெண்ஷன் மாதம் 1-க்கு பல நூறு ரூபாய் வருகின்றது. இதுதவிர நல்ல சரீரக்கட்டுடன் மிகுதியில் மற்றபடியான தகுந்த பெருமை இருத்தல்வேண்டும். மையும் சொத்தும் உடையவர். இஷ்டமுள்ளவர்கள் முழுவிபரத்தை நல்லதிடசரீரமும் அழகிய தோற்றமுடன் தங்கள் உருவப்படத்தையும் உடையவர். நல்ல குண முடன் எழுதுக. மலேயாவும் ஒழுக்கமும் உடையவர். C/o "குடி அரசு" ஈரோடு.

நீங்கள்

கதரின் பூராட்டை உணரவேண்டுமா?

அப்படியானால்

திரு. எஸ். இராமநாதன் எம். ஏ., பி. எல்., அவர்களால் தொகுக்கப்பட்ட

'கதர்-மூட நம்பிக்கை' என்னும் ஆங்கில புத்தகத்தைப் படியுங்கள்.

இதன் விலை அணா 0-2-0. ஒரு புத்தகம் வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பனுப்பவும்.

மானேஜர் "குடி அரசு" ஈரோடு.

'சண்டமாருதம்'
சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

லண்டன் மகாநாட்டுச் செய்திகள்
அச்சமற்ற கண்டனங்கள்
ஆணித்தரமான அபிப்பிராயங்கள்
ருசிகரமான குறிப்புகள்
தேனின் இனிய "திராட்டுப்பால்"
கைச்சுவை மிக்க சவால்கள்
மெய்கூச்செறிக்கும் "மின்வெட்டு"
அறிவைப்பெருக்கும் "அஷ்டதிக்கு"
முதலியன "சண்டமாருத"த்தில் வெளியாகின்றன.

சந்தா விவரம்.

உள்நாடு மாத சந்தா	ரூ. 1—2—0
தனிப்பிரதி	ரூ. 0—0—6
வெளிநாடு வருட சந்தா	ரூ. 18—0—0
ஆறுமாதம் ...	ரூ. 10—0—0

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

சுயமரியாதைப் பொக்கிஷம்
எனும்
புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அன்னை ஜுப்டோன் படங்கள், அறிமுகட்டுரைகள், விடுதலை, பெண்மக்கள், கவிதை அடங்கியிருக்கின்றன. பத்திரிகைகளை அனுப்பும்போது நமது அநுபந்தத்தைப்பற்றித் தெரிவித்தால் எல்லோரும் வாசகர் அதிகரிப்பர். 130 பக்கங்கள் கொண்டது விலை தூரை அணா.

3 காப்பிகளுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணா ஸ்டாம்பு அனுப்புக.

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, S. இந்தியா.

மதியும், தெளிவும் எல்லோரும் பெற்றிட
சூழ்ச்சி.

குடி அரசுப் பதிப்பக வெளியீடுகள்.

சந்தாதார்களுக்கு முக்கால் விலை.

கைவல்யம் அல்லது கஷுக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரை களைத்தொகுத்து வெளியிடப்பட்டது. இக்கட்டுரைகளைப்படிப் பதால் அனேக சாஸ்திர, புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு, சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து கொற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணு. 0—8—0

இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்ப இராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள வழுல் களையும், ஒன்றற்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப்புரட்டுக்களை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணு. 0—4—0

இரண்டாம் பாகம் அயோத்தியாகாண்டம் அணு. 0—8—0

ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலிய வைகளின் ஆபாசங்களைக் காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம், இதை ஒரு முறை படித் தால் ஆரியர்களின் புராதன ராகரீகத்தின்வண்டவாளம்முழுதும்தெ ரியும். பெரியபுத்தகம். 150 பக்கம். இதன் விலை அணு. 0—4—0

மநுநீதி மருமம்.

இது மநுதரும சாஸ்திரத்தில் உள்ள அநீதிகளையும், பார்ப் பனர், பார்ப்பனரல்லாதாரை அடிமைப்படுத்துவதற்கு ஏற்படுத்தி யுள்ள சூழ்ச்சிகளையும் விளக்குவது. இதன் விலை அணு 0—2—0

இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

இது இராமலிங்க சுவாமியால் பாடிய அருட்பாவில், ஆறும் திருமுறையில் உள்ள பாடல்களிலிருந்து தொகுக்கப்பட்டது. இதில் உள்ள பாடல்களால், வேதம், புராணம், மதம் முதலிய வைகளின் சூழ்ச்சிகளையும், அவைகள் பொய் என்பதையும் உணரலாம்.

இதன் விலை அணு. 0—2—0

சுயமரியாதைத் தாலாட்டு.

இதில் தீண்டாமைக் கொடுமை, சாதி சமயக் கொடுமை, வரதட்சணைக் கொடுமை முதலிய வற்றைக் கண்டித்துக் கூறப் பட்டிருக்கிறது. இனிய பாடல். எளிதில் பொருள் விளங்கும்.

இதன் விலை அணு. 0—2—0

சோதிடப் புரட்டு.

இதில், சோதிடம் என்பது பொய் என்பதையும், பார்ப் பனர்களும், புரோகிதர்களும், ஜன சமூகத்தை ஏமாற்றுவதுதான் சோதிடமென்பதையும் இனிமையான...சுலபமான பாடல்களால் விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன் விலை அணு. 0—2—0

ஈ. வெ. ராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜனசமூகம், சீர்திருத்தம்பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக்காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப்பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம். ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணு 0—2—0.

சுயமரியாதைப்பாடல்.

இதில் சுயமரியாதைக்கொள்கைகளை விளக்கி, இனிமையான புதியவர்ணமெட்டுகளில் பாடியபாடல்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணு 0—2—0.

தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்த மற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறு வேடம் பூண்டு பொது ஜனங்களுக்குப் புராணபுரட்டுக்களை வெளிப்படுத் தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணு 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒருநாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை, முதலியவற்றை யும் விளக்கிச் சமதர்மத்தைப்போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணு 0—4—0.

மேயோ கூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னி மேயோ" எழுதி யதில்உள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்— நமது நாட்டில் உள்ள வேறுபல ஆபாசங்களையும் எடுத்துக்காட்டிச் சிந்திருந்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணு 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித் திரப்புரட்டுக்களையும் தமிழ் நூல் ஆதாரங்களோடுவிளக்கப்பட்டிருக் கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப் பட்டது.

இதன் விலை அணு 0—2—0

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக் கும் கயவர்களென்றும், இதிகாச புராணங்களின் ஆதாரங்களைக் கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராக வன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணு 0—2—0.

கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

இதில், திரு S. ராமநாதன், அவர்கள் கதரைப்பற்றிச்செய்த உபன்யாசமும், அதற்குத் திருவாளர்கள், பட்டாபி சீத்தாராமையா வும், என். எஸ். வரதாச்சாரியும் எழுதிய மறுப்புரைகளும், அவை களுக்கு எஸ். ராமநாதன் எழுதிய பதில்களும் ஆங்கிலத்தில்வெளியி டப்பட்டிருக்கின்றன. இதைப் படித்தால் கதர்ப் புரட்டை உணர லாம்.

இதன் விலை அணு 0—2—0.

முக்கிய கவனிப்பு:— மேல்கண்ட புத்தகங்கள் "குடி அரசு" சந்தாதாரர்களுக்கு முக்கால் விலைக்குக்கொடுக்கப்படும். ஆனால் பாதித்தொகை முன்பணமாக அனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு திருமதி நாகம்மாள அவர்களால வெளியிடப்பட்டது.